உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 27 வெள்ளிக்கிழமை (12.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 259



14 அறப்பணியை விஸ்தரிக்க வேண்டும்



20 இலங்கைக்கு அமெரிக்கா அச்சுறுத்தல்



21 கருணை மனுக்கள் நிராகரிப்பு



25 முன்னிலையில் இங்கிலாந்து

# அமெ. இறுதி எச்சரிக்கை கவலையில் இலங்கை

## அந்நாட்டின் அறிவிப்பை நாங்கள் அசட்டை செய்யவில்லை என்கிறார் கெஹலிய



கொழும்பு, ஓக.12

**இலங்கை அரசு மீது சுமத்தப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அரசு மேற்கொண்ட பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை. இது எமக்கு பெரும் கவலையை அளிக்கின்றது. அதே சமயம் அமெரிக்கா எமக்கு விடுத்திருக்கும் இறுதி எச்சரிக்கையை நாம் சிறிய விடயமாகப் பார்க்கவில்லை அதனை அசட்டை செய்யவும் இல்லை.**

-இவ்வாறு ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் கூறினார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசின் மீது சுமத்தப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக நாம் கடந்த பல மாதங்களாக பொறுப்புக்கூறும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

தேசிய நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்து விசாரணையை மேற்கொண்டோம். அதே போல், அரசு மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கை தொடர்பான அறிக்கையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளி யிட்டு அது தொடர்பாக சர்வதேசங்களுக்கு விளக் கம் கொடுத்தார்.

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற

பக் 27

# சீனாவில் ஜனாதிபதிக்கு கலாநிதிப்பட்டம்

பீஜிங், ஓக.12

சீனத் தலைநகர் பீஜிங்கிலுள்ள வெளிநாட்டு மொழிகள் பல்கலைக் கழகம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நான்கு நாள்கள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சீனாவுக்கு சென்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

# புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும்

கொழும்பு, ஓக. 12

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என நெதர்லாந்து சட்டத்தரணி விக்டர் கோப் ஐரோப்பிய நீதிமன்றில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் இணைத்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற் கடிக்கப்பட்டுள்ளதாகவும், இல்லாத ஓர் அமைப்பிற்கு எ்திராக தடையை நீடிப்பது

பக் 27

# இறுதி யுத்தத்தின் போது பெண்கள் மீது வன்புணர்வு

## ஆதாரங்களை வெளியிட்டது 'ஹெட்லைன்ஸ் டுடே

புதுடில்லி, ஓக. 12

'கொலைக்களம்' என்ற இலங்கையின் இறுதி யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஆவணத் திரைப்படத்தை நேற்று ஒளிபரப்பிய 'ஹெட் லைன்ஸ் டுடே' தொலைக்காட்சி, பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர் என பாதிக்கப்பட்டவர்களின் செவ்வியையும், அதிர்ச்சித்

பக் 27



வடக்கு, கிழக்கில் காணாமற்போனோரைக் கண்டுபிடித்துத் தரும்படி காணாமற் போனோரின் உறவுகள் நேற்று கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். 'நாம் இலங்கையர்' அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்குசெய்திருந்தது.

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்கும் சாத்தியம் குறைவு

## சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் வழங்கியுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக அரசு தனது கருத்தை முன்வைக்காத பட்சத்தில் அரசியல் தீர்வைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொள்வதற்கான சாத்தியம் மிக மிகக் குறைவு.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாம் அரசிடம் எமது தீர்வு யோச

பக் 27

# 'கிறீஸ்மனிதன்' பீதியால் இருவர் வெட்டிக்கொலை

## ஹப்புத்தளையில் பயங்கரம்

கொழும்பு, ஓக. 12

ஹப்புத்தளை தொட்டலாகல தோட்டத்தில் இரவுவேளைகளில் மர்மமான முறையில் நடமாடி மக்களை அச்சுறுத்தி வந்தார்கள் எனச் சந்தேகிக்கப்படும் கிறீஸ் மனிதர்கள் இருவரை பிரதே சவாசிகள் நேற்று சரமாரியாக வெட்டிக் கொலைசெய்துள்ளனர்.

அத்துடன், குறித்த சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர் பதுளை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக தொட்டலாகல தோட்டத்தைச் சூழவுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களை, குறித்த மர்ம மனிதர்கள் அச்சுறுத்தி வந்துள்ளனர். அத்துடன், நேற்றுப்பகல் பிரதேசவாசிகளிடம் அவர்கள் வசமாக மாட்டிக் கொண்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சினிமா பாணியில் நேற்று அரங்கேறிய குறித்த சம்பவத்தால் தொட்டலாகலை தோட்டம் யுத்தக்களமாகக் காட்சியளித்தது என்றும், அங்கு தொடர்ந்தும் பதற்றநிலை நிலவுகின்றது என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடயம் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த ஹப்புத்தளை பொலிஸார் பாதுகாப்பைப் பலப்படுத்தியதுடன் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து குறித்த பிரதேசத்தில் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது எனத் தெரிவிக்கும் பொலிஸார் அந்தப் பிரதேசத்தில் பாதுகாப்புப் பலப் படுத்

பக் 27

# கோத்தபாயவை மத்திய அரசு உடன் கண்டிக்க வேண்டும்

## ஜெயலலிதா வலியுறுத்துகிறார்



சென்னை, ஓக. 12

தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இழிவுபடுத்திப் பேசிய இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவுக்கு இந்திய அரசு கண்டனம் தெரிவிக்கவேண்டும்.

- இவ்வாறு முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா குறித்து இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷ தெரிவித்த கருத்துகள் சர்ச்சையை ஏற்படுத்தின.

இது குறித்து நேற்று சட்டப்பேரவையில் உறுப்பினர்கள் கவனயீர்ப்புத்

பக் 27

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான 40 வீத சாத்தியம் காணப்படும்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
ஆவணி 11, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,767.09↓
மிலங்கா(MPI) 6,108.96↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,503.12Mn
பங்குகளின் அளவு(No.) 113.81Mn
வியாபாரம்(No.) 28,757
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
லங்கா கொஸ்பிற் 55.90
ஒறியன் காமன் 40.90
மாறவல றிஸொட் 12.60
ஒடல் 36.60
மெற்றோ றிசோசஸ் 28.10
குறைவு(Top 5 losers) - விலை Rs.
லங்கா அசோக் 4675.00
களனி கேபிள் 90.10
காகோ போட் 121.00
சி.டி.ஐ.சி 400.50
இன்டஸ்ரியல் அலுவ் 555.50
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கு மேலும் 2000 மில்லியன் ரூபா தேவை

## உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் அரச அதிபர்

யாழ்ப்பாணம், ஒக. 12

யாழ். மாவட்டத்தில் உலக வங்கியால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை விட மேலதிகமாக 2 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

யர்ழ். மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை மாவட்டச் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடியது. இதன்போதே அரச அதிபர் மேற்படி கோரிக்கையை முன்வைத்தார்.

உலக வங்கியின் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான இயக்குநர் ட்ரயரிட்டோ கேயி தலைமையிலான குழுவினரே யாழ். வந்தனர். இவர்களுடன் ஆலோசகர் மனோகரலிங்கம், பொறியியலாளர் வினோதரலிங்கம், திட்டப்பணிப்பாளர் லியனகே ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.

உலக வங்கியினால் யாழ். மாவட்டத்துக்கு 355.3 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகள் மேற்



கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தில் 1274.67 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்திப் பணிகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலதிகமாகவே அரச அதிபரினால் இரண்டாயிரம் மில்லியன் ரூபா நிதி கோரப்பட்டுள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்தில் இன்னும் சில பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்த வேண்டியுள்ளது. அத்துடன் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளிலும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. கல்வி,சுகாதாரம்,வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு அதிகளவு நிதி தேவைப்படுகின்றது என்று உலக வங்கிப் பிரதிநிதிகளிடம் கூறினார் அரச அதிபர்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் அதிகளவான வீட்டுத் தேவைகள் இருப்பதாகவும், வேலையில்லாத இளைஞர், யுவதிகள், புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருமாறும் அரச அதிபர் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி குழுவினர் தமது நிதி உதவியில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை நேரடியாகச் சென்று ஆராய்ந்ததுடன் மக்களுடனும் கலந்துரையாடினார்கள். (த-15)

## இன்று தேர்த் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஒக.12

சங்கானை செங்கற்படை மகாதேவப்பிள்ளை ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெற்று மறுநாள் வைரவர் மடையுடன் உற்சவம் நிறைவுறும்.

(சிறப்பிதழ் II, III பக்கங்களில்)

* * *

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயில் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

(சிறப்பிதழ் IV, பக்கத்தில்)

## பருத்தித்துறையில் இரத்ததான முகாம்

வடமராட்சி, ஒக.12

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் ஒழுங்கு செய்துள்ள இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிமுதல் பருத்தித்துறை திக்க முனை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரத்ததானம் வழங்குவதில் ஆர்வமுள்ளோர் கலந்து கொண்டு இரத்தானம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-236)

# சி.ஐ.டி. பொலிஸார் எனக் கூறி பணம் கறக்க முயன்ற இளைஞர்

## பொலிஸ் நிலையத்திலேயே வகையாக மாட்டினார்

யாழ்ப்பாணம், ஒக. 12

சி.ஐ.டி. பொலிஸார் எனத் தன்னைக் கூறிக்கொண்ட இளைஞர் ஒருவர், காணிப் பிரச்சினை ஒன்றில் சம்பந்தப்பட்டிருந்த பெண்ணிடம் சென்று, அதனைத் தீர்த்து வைப்பதாகவும் அதற்குக் கூலியாக தனக்கு 75 ஆயிரம் ரூபா தர வேண்டும் எனக் கூறி மோசடியில் ஈடுபட முயன்றவேளை யாழ். பொலிஸாரிடம் நேற்று வகையாக மாட்டினார்.

பிரஸ்தாப நபரை கைது செய்த யாழ். சிறு குற்றப் பிரிவுப் பொலிஸார் நேற்றைய தினம் யாழ். நீதிமன்றில் அவரை ஆஜர் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா சந்தேகநபரை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கொட்டடி,யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.சிந்துஜன் (வயது-23) என்ற ஓட்டோச் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

பிரஸ்தாப பெண் கொழும்பில் வசித்து வருகின்றார் அவர். கொட்டடியிலுள்ள தனது காணியில் உள்ள வீட்டில் குடும்பமொன்றைத் தற்காலிக மாகக் குடியமர்த்தி இருந்தார். அண்மையில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த பிரஸ்தாப பெண் தனது வீட்டில் குடியிருந்தவர்களை குறித்த காலப் பகுதிக்குள் அந்த வீட்டிலிருந்து வெளியேறுமாறு கூறியுள்ளார்.

எனினும் அவர்கள் அந்த வீட்டை விட்டு வெளியேறாது தொடர்ந்தும் அங்கு வசித்து வந்தமையால் அது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்ய முயன்றுள்ளார். இதனை அறிந்து கொண்ட மேற்படி இளைஞர் பிரஸ்தாப பெண்ணிடம் சென்று தான் சி.ஐ.டி. பொலிஸ் எனக் கூறி தன்னை அடையாளப்படுத்தி அந்த வீட்டுப்பிரச்சினையைத் தான் தீர்த்து வைப்பதாகவும், தனக்கு 75 ஆயிரம் ரூபா பணம் தருமாறும் கூறியுள்ளார். தனது பிரச்சினை தீரட்டும் என்பதற்காக பிரஸ்தாப பெண்ணும் அதற்குச் சம்மதித்துள்ளார். அவ்வாறு கூறிவிட்டு அந்தப் பெண் திரும்பவும் கொழும்புக்குச் சென்று விட் டார். மீண்டும் யாழ்ப்பாணத் துக்கு திரும்பி வந்த அவர் தனது காணியிலிருந்து அந்தக் குடும்பம் வெளியேறாது தொடர்ந்தும் இருந்தமையால் விரக்தியடைந்து யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்று நடந்தவற்றைக் கூறியுள்ளார்.பொலிஸார் முறைப்பாட்டைப் பதிவு செய்ததோடு மறுநாள் காலை (நேற்று) பொலிஸ் நிலையத்துக்கு வரும்படி கூறியுள்ளனர். நேற்றையதினம் அவர் யாழ்.பொலிஸ் நிலையம் சென்றார்.

அந்த வேளையில் பிரஸ்தாப பெண்ணிடம் பணம் கேட்டவரையும் பொலிஸார் இனம் கண்டு கொண்டனர். அந்த நபரும் இன்னொரு விடயம் தொடர்பாக நேற்றையதினம் பொலிஸ் நிலையத்துக்கு வந்திருந்தார். அவ்வேளை அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதனால் பணமோசடி தடுக்கப்பட்டது.

தற்பொழுது அவர் நீதிமன்ற உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-4)

# நிகழ்வுகள்

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக.12

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக்கிளையின் வருடாந்த இரண்டாம் ஆண்டுப் பொதுக்கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு 10/1, 1/1, 1 ஆம் கப்பல் ஒழுங்கை வெள்ளவத்தையில் அமைந்துள்ள தேவாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் சகல பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் க.நித்தியானந்தம் கேட்டுள்ளார். (ற)

## இசைச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக.12

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவைச் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'இசையால் இறைவனைக் காணலாம்' என்னும் தலைப்பில் இசைச்சொற்பொழிவு இடம்பெறும்.

இந்தச் சொற்பொழிவை ஆஞ்சநேயர் அறநெறிப் பாடசாலையின் ஆசிரியை செல்வி சிவயோகராசா கதிரவேலு நிகழ்த்துவார். (ற-236)

## சைக்கிள் ஓட்டப்போட்டி

கைதடி, ஒக.12

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி தெற்கு மின்னொளி விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் சைக்கிள் ஓட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நிலையமுன்றலில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இதே வேளை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நிலைய அங்கத்தவர்களால் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ம-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறைவடைந்த பின் 2010 இன் இறுதிவரை தாக்குதல்களில் பொதுமக்கள் பலியாகவில்லை

## சபையில் இப்படித் தெரிவித்தார் அமைச்சர் தினேஷ்

கோட்டே, ஒக.12

யுத்தம் நிறைவுற்ற நாளிலிருந்து 2010 ஆம் ஆண்டு இறுதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இனந்தெரியாத தாக்குதல்களால் பொதுமக்கள் (சிவில் பிரஜைகள்) எவரும் கொல்லப்படவில்லை என்று ஆளும்கட்சிப் பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:

யுத்தம் முடிவுற்ற நாள் தொடக்கம் 2010ஆம் ஆண்டு இறுதிவரை மொத்தம் 9 பேர் கொல்லப்பட்டனர். இதன்படி வடக்கு மாகாணத்தில் 6 பேரும் கிழக்கில் மூன்று பேரும் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர். இருந்தும் இனந்தெரியாத தாக்குதல்களால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் சிவில் பிரஜைகள் எவரும் கொலை செய்யப்படவில்லை.

ஏற்கனவே கூறியவாறு இடம்பெற்ற கொலைகளில் ஒரு கொலை தொடர்பாக கண்டறியப்பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் 8 லட்சம் ரூபா கப்பம் கோரி ஒருவர் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன் ஏனைய கொலைச் சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை, புத்தளத்தைச் சேர்ந்த தன்னார்வ தொண்டு ஊழியரான பட்டானி ராஸிக், கடத்தப்பட்டு 500 நாள்கள் சென்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று கூறிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, சிவில் பிரஜைகள் கொலை செய்யப்படுகின்றமைக்கு இது ஓர் உதாரணம் என்று சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பான தகவல்களை வழங்கினால் அது குறித்து அறியத் தருவோம் என்று கூறினார். (ஒ-05)

---

கிளிநொச்சி நகரில் நேற்று நடக்கவிருந்த

# கிராம அபிவிருத்தி சங்கப் பொதுக் கூட்டம் ராணுவத்தினரின் தலையீட்டால் ரத்து

கிளிநொச்சி, ஒக.12

கிளிநொச்சி நகரப் பகுதியின் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம், இராணுவத்தினரின் தலையீட்டினால் அறிவிக்கப்பட்டவாறு நேற்று நடத்த முடியாது போய்விட்டதாக சங்க நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நகரப் பகுதிக்கான கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டம் நேற்றையதினம் கிளிநொச்சி நகரிலுள்ள பிள்ளையார் கோயியில் நடைபெறவிருந்தது.

இந்தக் கூட்டத்துக்கான திகதி குறிக்கப்பட்டு ஏற்கனவே அந்தப் பகுதிக்குப் பொறுப்பான இராணுவத்தினரிடம் அனுமதி பெறப்படிருந்ததுடன் மக்களுக்கு வீடு வீடாகச் சென்று அறிவித்தலும் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பிரதேச மக்கள் நேற்றுமாலை ஆலயத்தில் கூடியவேளை திடீரென வந்த இராணுவத்தினர் கூட்டத்துக்குத் தாம் சமுகம் தர முடியாதிருப்பதால் வேறொரு திகதியில் நடத்துமாறு நிர்வாகத்தினருக்குக் கட்டளையிட்டுச் சென்றுள்ளனர்.

இதனால் பொதுமக்கள் கொதிப்புடன் இன்னும் எங்களுக்கு இந்தக் கதியா என்று வாய்விட்டுக் கூறிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வன்னியில் பொதுநிகழ்வு எதுவும் நடத்துவதாயின் இராணுவத்தினரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது கட்டாயம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

---

# பதினெட்டு வயதுக்குட்பட்ட 75 பிள்ளைகள் 5 மாதங்களுக்குள் முறையற்ற கர்ப்பம்

## அதிகமானோர் பாடசாலை மாணவிகள்

யாழ்ப்பாணம், ஒக.12

யாழ்ப்பாணத்தில் இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையான 5 மாத காலத்தில் 18 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளைகள் 75 பேர் முறையற்ற விதத்தில் கர்ப்பம் தரித்துள்ளதாக பிராந்திய சுகாதார திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் 43 வயது வந்த பெண்கள் திருமணம் ஆகாமலே கர்ப்பம் தரித்துள்ளதாகவும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ் மாவட்டத்தில் இளவயதினர் 75 பேர் முறையற்ற விதத்தில் கர்ப்பமாகியுள்ளனர். ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில் இருவரும், யாழ் பிரதேச செயலர் பிரிவில் 13 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 10 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இருவரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 16 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 7 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 16 பேரும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 9 பேருமாக 75 பேர் இவ்வாறு இனங் காணப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் இவ்வாறான முறையற்ற விதத்திலான கர்ப்பங்கள் தொடர்பாக வைத்திய அதிகாரி திருமதி.திருமகளை தொடர்பு கொண்டு கேட்டபோது

இவ்வாறான சம்பவங்களில் அதிகளவில் இனங் காணப்பட்டுள்ளவர்கள் பாடசாலை மாணவிகளே இவர்கள் இவ்வாறான தவறான வழிக்குச் செல்வதற்கு காரணம் ஆசிரியர்களும், பெற்றோர்களுமே. பாடசாலை மாணவர்களுக்குப் பாலியல் கல்வி தொடர்பாகவோ அதனால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாகவோ ஆசிரியர்களும் பெற்றோர்களும் போதிப்பதில்லை.

இதன் காரணமாக மாணவர்கள் தமது நண்பர்களின் மூலமும், இணையத்தளம் மூலமும், எஸ்.எம்.எஸ் மூலமும் பாலியல் தொடர்பான தகவல்களைப் தவறாகப் பெறுகின்றனர். இதனை அவர்கள் நடைமுறையில் அனுகமுற்படுவதனாலேயே இவ்வாறு பாரதூரமான விளைவுகள் ஏற்படுகின்றன. இவர்களின் பாதுகாப்பற்ற பாலுறவு முறையற்ற கர்ப்பங்களை உருவாக்குகின்றன.

இதனைத் தடுப்பதற்கான செயற்திட்டம் கடந்த வாரம் தம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஆசிரியர்கள், அதிபர்களுக்குச் செயலமர்வை ஆரம்பித்துள்ளோம். இதன் போது பாடசாலை மாணவர்களுக்கு வாழ்க்கைத் தேர்ச்சிப் பயிற்சிகளை வழங்கவுள்ளோம். தொடர்ந்து பாடசாலை மாணவர்களுக்குத் தனியாகவும் பெற்றோருக்குத் தனியாகவும் இந்தப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளோம்- என்றார். (த-15)

---

# ஐ.தே.கவின் தலைமைத்துவ சிக்கல் சஜித் தரப்புடனான பேச்சுத் தோல்வி!

கொழும்பு, ஒக. 12

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பான சிக்கலைத் தீர்ப்பதற்காக கட்சியின் சிரேஷ்ட தலைவர்களுக்கும், சஜித் பிரேமதாஸ தரப்புக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகள் எதுவித இணக்கப்பாடும் இன்றி முடிவடைந்தன்.

கட்சித் தலைமை தொடர்பான சிக்கலை பொது இணக்கப்பாட்டின் மூலம் தீர்த்துக் கொள்வதற்காக நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுகள் தோல்வியடைந்தன என அதில் கலந்துகொண்ட சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஐ.தே.கட்சித் தவிசாளர் காமினி ஜயவிக்ரம பெரேரா தலைமையில் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற இந்தப் பேச்சுகளில், கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய, செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, எதிர்க் கட்சி பிரதம கொரடா ஜோன் அமரதுங்க, ஜயலத் ஜயவர்தன, கபீர் ஹாசிம், மலிக் சமரவிக்ரம ஆகியோர் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் என்ற ரீதியில் கலந்துகொண்டனர்.

மறு தரப்பில் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ எம்.பி., ரோசி சேனாநாயக்க எம்.பி. ஆகியோர் பேச்சுகளில் கலந்து கொண்டனர்.

கட்சி யாப்பின்படி டிசம்பர் மாதத்துக்கு முன்னர் கட்சி தலைமைப் பதவியில் மாற்றம் செய்ய முடியாதென சிரேஷ்ட தலைவர்கள் தெரிவித்தனர். சஜித் பிரேமதாஸ தரப்பு இதை ஏற்றுக் கொள்ளாததால் பேச்சு தோல்வியில் முடிவடைந்தது.

---

# கிழக்கில் ஹர்த்தால்

வெல்லாவெளி, ஒக. 12

ஓட்டமாவடியில் பொதுமக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து நேற்று ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை, நாவலடி ஆகிய பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கல்குடா முஸ்லிம் பள்ளிவாசல்கள் சம்மேளனம் இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்திருந்தது.

---

# ரிஷானா நபீக்கைக் காப்பாற்றும் இறுதிக்கட்ட முயற்சியில் ஹக்கீம்

கொழும்பு, ஒக. 12

சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்ட ரிஷானா நபீக்கை காப்பாற்றும் இறுதிக்கட்ட முயற்சியில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஈடுபட்டுள்ளார்.



இது தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் ஆகியோரை அமைச்சுக்கு அழைத்து பேச்சு நடத்தியதுடன், ரிஷானா நபீக்கின் தந்தையையும் கொழும்புக்கு வரவழைத்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ரிஷானா நபீக்கை சவூதி அரேபியாவுக்கு அனுப்பி வைத்த முகவர் அவரது வயதைக் கூட்டி, போலி பிறப்புச் சான்றிதழ் தயாரித்து கடவுச்சீட்டு பெற உதவியுள்ளார். இதேவேளை, சவூதி அரேபியா ஷரிஆ சட்டப்படி 18 வயதுக்குக் குறைந்தவர்களுக்கு மரணதண்டனை வழங்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

சவூதி அரேபிய சிறையிலுள்ள ரிஷானா நபீக்கை சென்று பார்வையிடும் ஒரே இலங்கை டாக்டரான கிபாயா, சமீபத்தில் அவரது சொந்த ஊரான கண்டிக்கு வந்தபோது அமைச்சர் அவரிடம் ரிஷானா நபீக்கின் நிலை குறித்துக் கேட்டறிந்துக் கொண்டார்.

---

# வவுனியா நகர சபை உபதலைவர் இன்று அடையாள உண்ணாவிரதம்

## கொலை அச்சுறுத்தலைக் கண்டித்து

வவுனியா, ஒக.12

வவுனியா பட்டாணிச்சி புளியங்குளம் முஸ்லிம் மையவாடி அமைந்துள்ள நகரசபைக்குச் சொந்மான காணியில் கடைத்தொகுதியை நிர்மாணிப்பதை முற்றாகச் தடுத்து நிறுத்தக் கோரியும், தனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதைக் கண்டித்தும் வவுனியா நகர சபை உப தலைவர் எம்.எம் ரதன்இன்று அடையாள உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளார்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக வவுனியா அரச அதிபர் பி.எஸ்.எம்.சாள்ஸ் நேற்று வியாழக்கிழமை உரிய பதில் தருவதாக முன்னர் அறிவித்திருந்தார். எனினும் அவர் இது தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் தான் இந்த போராட்டத்தை வவுனியா நகர சபை முன்றலில் இன்று ஆரம்பிப்பதாக எம்.எம்.ரதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான காணியில் அனுமதியின்றிக் கடைத்தொகுதி அமைப்பதை நகர சபையில் இடம்பெற்ற இது தொடர்பான கூட்டத்தில் சபையினர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் கடைத்தொகுதி அமைப்பதைத் தடுத்து நிறுத்தும்படி தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு இது நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டு எதிர்வரும் திங்கட்கிழமை அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

இந்த நிலையில் 'ஜிகாத்' என்ற முஸ்லிம் அமைப்பு ஒன்று எனக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதோடு பதவி விலகுமாறும் காலக்கெடு விடுத்துள்ளது.

இவற்றைக் கண்டித்துக் கடந்த செவ்வாய்க்கிழமை அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருந்தேன். ஆனால் வவுனியா அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தன்னுடன் தொடர்பு கொண்டு உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த வேண்டாம் எனவும், வியாழக் கிழமை (நேற்று) உரிய பதில் தருவதாகவும் கூறியிருந்தார். எனினும் அவர் உரிய பதில் தரவில்லை.

எனவேதான் இன்று வெள்ளிக் கிழமை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளேன் - என்றார். (த-4-431)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோன்பின் முக்கிய அம்சங்கள்

01. ஸஹர் செய்வது. 02. ஸஹர் நேரத்தில் கடைசிவரை காலம் தாழ்த்தாது ஸஹர் செய்வது. 03.நோன்பு திறக்கும் நேரம் வந்தவுடனேயே காலம் தாழ்த்தாது நோன்பு திறப்பது. 04. பேரீச்சம்பழம் கொண்டும் அது முடியாதபோது தண்ணீரைக் கொண்டும் நோன்பைத் திறப்பதும் சுன்னத்துக்களாகும்.

05. பெருந் தொடக்கை அகற்ற ஸஹர் நேரத்திலேயே குளிப்பது. 06. நோன்பு நேரத்தில் வாசனைப் பொருள்களைத் தொடுவதையும் தடவிக்கொள்வதையும் உணவுப் பதார்த்தங்களை சுவை பார்ப்பதையும் விட்டுத் தவிர்த்து இருப்பது சுன்னத்துக்களாகும்.

07. பொய், புறம், கோள் போன்ற ஹராமானவைகளை விட்டும் உண்ணும், பருகும், கேட்கும், பேசும், ஆகுமான காரியங்கள் இருப்பினும் அவைகளை விட்டும் தவிர்த்து இருப்பதும் சுன்னத்தாகும்.

08. நோன்பாளிகளை அழைத்து நோன்பைத் திறக்க வைப்பதும், 09.சுற்றத்தார், பக்கத்து வீட்டுக்காரர்களுக்கு உதவி, உபகாரம் செய்வது. 10. குர்ஆன் ஷரீபுகளை அதிகமாக ஓதுவது ஆகியவையும் சுன்னத்தாகும்.

ஆனால் வாசனைத் திரவியங்களை நுகர்வது, தடவிக்கொள்வது, உணவுப் பதார்த்தங்களை சுவைத்துப் பார்ப்பது ளுஹர் தொழுகை நேரத்தின் பின்பு மிஸ்வாக் செய்வது(பல் தீட்டுவது) ஆகிய விடயங்கள் மக்ரு ஆன காரியங்களாகும்.

புனித அல்-குர்ஆன் இறங்கிய இந்த மாதத்தில் ஒரு சிறப்புமிக்க இரவும் உண்டு. அதாவது அந்த இரவுதான் லைலதுல் கத்ர் எனும் ஆயிரம் மாதங்களையும் விடவும் மேலான ஒரு இரவும் இருக்கின்றது. இந்த இரவில் அதிகமான நற்காரியங்கள் செய்து அல்லாஹ்வின் அன்பைப் பெறுபவர்களுக்கு நிச்சயமாக இவ்வுலகிலும் மறுவுலகிலும் விமோசனம் உண்டு என நபி(ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.

*சத்தார் எம்.ஜாவித்*

## முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு; இதுவரை 255 கோடி ரூபா செலவு

முன்னாள் விடுதலைப் போராளிகளான 11 ஆயிரத்து 664 பேருக்குமான புனர்வாழ்வு தொடர்பாக இதுவரை அரசு 255 கோடி ரூபாவ்வ செலவிட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்களுள் 8 ஆயிரம் பேர் இதுவரையில் சமுதாயமயப்படுத்தப்பட்டுவிட்டனர் என்றும் அவர் கூறினார்.

மேலும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச் சின் கீழ் நிர்வகிக்கப்படும் புனர்வாழ்வு ஆணையாளர் செயற்பிரிவின் கீழ் வவுனியாவிலுள்ள ஆறு மையங்களிலும் 2 ஆயிரத்து 900 பேர் தற்போது புனர்வாழ்வு பெற்று வருகின்றனர் என்றார் ஆணையாளர். (ஒ-22)

## சபையில் நால்வரின் அனுதாபப் பிரேரணை

காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரின் அனுதாபப் பிரேரணைகள் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டன.

காலஞ்சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.பி.போல் பெரேரா, பி.ஓ.விமலநாக, என்.எம். புஹார்டீன், சரத்சந்திர ராஜகருணா ஆகியோரின் அனுதாபப் பிரேரணைகளே சமர்ப்பிக்கப்பட்டன. (ஒ-05)

## சமய சந்நிதிகளில்

வரணி, ஓக.12

வரணி கரம்பான் வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 4 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-123)

* * *

வரணி, குடமியன் ஆதிசிவன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 4ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும், நாளை சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாப் பூசைகளை சிவஸ்ரீ இராம ஸ்ரீரங்கக்குருக்கள் நிகழ்த்துவார். (ற-122)

* * *

யாழ்ப்பாணம், ஓக.12

உரும்பிராய் காளி அம்பாள் என அழைக்கப்படும் காமாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமையும், தீர்த்தத்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் இடம்பெறும். (ற)

* * *

கிளாலி கண்மணி மாதா ஆலயத்தின் வருடாந்தத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி 3 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நற்கருணைப் பெருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டுத் திருச் சொரூப ஆசீரும் இடம்பெறும்.

கடந்த வருடம் கிளாலி கண்மணி மாதா ஆலயத்தில் நடைபெற்ற வருடாந்தத்திருவிழா இந்தவருடம் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ற)

* * *

சரவணை தேவபுரம் கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற)

* * *

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கும், மறுநாள் சனிக்கிழமை காலை 7.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

* * *

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிக்ன விநாயகர் ஆலயத்தின் வரலட்சுமி விரதமும் தீப பூசையும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

இதனைத்தொடர்ந்து ஸ்ரீ மகாலட்சுமி தேவி வீதியுலா வருவார். (ற-100)

## லயன்ஸ் கழகத்தின் இலவச வகுப்புகள்

தென்மராட்சி, ஓக. 12

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடம் சித்தியின்மையினால் இரண்டாம் தடவை இப்பாடத்துக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கான இலவச ஆங்கில வகுப்புகள் நடத்தவுள்ளனர்.

மூன்று மாத காலம் நடத்தப்படவுள்ள இப் பயிற்சி வகுப்புகளில் பங்கு பற்றவுள்ள மாணவர்கள் சாவகச்சேரி குகன் ஸ்ரூடியோவில் தமது பெயர் களைப் பதிவு செய்யுமாறு கழகத் தலைவர் லயன் கே. பிரதீபன் அறிவித்துள்ளார். (ம-207)

* * *

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

மூன்று மாத காலம் நடை பெறவுள்ள இப் பயிற்சி வகுப்பில் பங்கு பற்றவுள்ள யுவதிகள் சாவகச்சேரி குகன் ஸ்ருடியோவில் சுயவிவரங்கள் அடங்கியவிண்ணப்பங்களை கையளிக்குமாறு கழகத் தலைவர் லயன் கே. பிரதீபன் அறிவித்துள்ளார். (ம-207)


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2247 திகதி 10-08-2011

ஆங்கில எழுத்திற்கும் H

வெற்றி எண்கள் 14 33 45 65

போனஸ் இல: 30

ஜக்பொட் பரிசு ரூ. 18,648,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 212712 | 20/- | 4,254,240/- |
| 2 இல | 15262 | 100/- | 1,526,200/- |
| 3 இல | 320 | 1,000/- | 320,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8376 | 40/- | 335,040/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 555 | 1,000/- | 555,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 09 | 10,000/- | 90,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 18,648,300/- | - |
| 1 இல + போனஸ் இல | 10148 | 100/- | 1,014,800/- |
| 2 இல + போனஸ் இல | 486 | 500/- | 243,000/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 362 | 200/- | 72,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 23 | 1,500/- | 34,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | 248258 | | 9,895,180/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 330 | | 165,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 248588 | | 10,060,180/- |

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 19,228,375/-

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை

ரத்தரங் வரம

வெற்றி எண்கள் 20 21 31 34

ஆங்கில எழுத்திற்கும் W

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 330 | 500/- | 165,000/- |
| 4 இல | - | 100,000/- | - |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுன் தங்கக்காசு 43 | - |

இந்த சனிக்கிழமை தங்கக் காசுப் பொதி 45 தங்க நாணயங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை

தொ.பே: 2333546/7



சாமியே சரணம் ஐயப்பா

# அனலையம் பதி ஐயனார் ஆலயத்தில் இன்று ரதோற்சவம்



*(12.08.2011)*



அந்தப்பதிக்கு ஒரு முறை வந்து பாருங்கள். மணி கண்டனோடு மனம் விட்டு ஒரு முறை பேசிப்பாருங்கள். தீராத துயரங்கள் யாவையும் நீக்கிடுவான்.

அனைவரும் வருக! ஐயன் அருள் பெறுக!!

ஆக்கம் : காரை மணிகண்டன்



## வேலையாள்கள் தேவை

வாகன சுத்திகரிப்பு நிலையம் (Service station) ஒன்றுக்கு முன் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 0775312792

## பணி வெற்றிடம்

அச்சகத்துறையில் அனுபவம் மிக்க

- கணனி இயக்குநர் ( ஆண்/பெண்)
- முகாமையாளர் (பெண்)
- புத்தகம் கட்டுதல் வெட்டுதல்
- KOTD இயக்குநர்

(பயில விரும்புவர்களும் நேரில் வரவும்)

*பிள்ளையார் அச்சகம், நல்லூர்.*

## ஆண் விடுதிக்கு பராமரிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம், மானிப்பாயில் உள்ள எமது சிறுவர் இல்லத்துக்கு ஆண் பராமரிப்பாளர் மற்றும் தோட்ட உதவியாளர்கள் தேவை. உங்கள் சுயவிவரக் கோவையை பின்வரும் விலாசத்துக்கு உடன் அனுப்பி வைக்கவும். வயதெல்லை 35 க்கு மேற்பட்டோர்.

கிறிஸ்தவர்கள் விரும்பத்தக்கது.

**Hanna's Relief Swedish Mission,**
**19/1, Beach Road,**
**Mount Lavinia.**
**e-mail-elimcyh@gmail.com**
**Tel:- 011 - 2724110**

## Vacancies for Research Assistants Short Term Contract

Application are called from young graduates with suitable background and experience in the following research areas as the Terms of Reference (Pl visit:www.cngoj.org)

i. Social mobilization, social empowerment and social transformation
ii. Strategies for sustainable Livelihood development in jaffna district.
iii. Regulatory mechanisms of micro credit/ micro finance
iv. Rules, guidelines and laws relating to NGO registration.

The contract duration is two months. Those interested could come for a walk-in-interview on 16 August 2011 from 9.00 a.m. to 12 noon at the Council Office, with completed bio-data. A payment of Rs 20,000.00 p.m. with adequate travel allowance would be made.

*President,*
*Council of Non Governmental Organization,*
*40, Temple Road,*
*Jaffna.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அமைச்சர் ஒருவரின் மனச்சாட்சி பேசுகிறது!

★ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான போர் முடிவுற்றுவிட்டது. எனினும் அது மீண்டும் பழைய இடத்துக்கே வந்துள்ளது.

★ தமிழர்களுக்கு உரிய தீர்வு கிடைக்காவிடில் - வழங்கப்படாவிடில் - நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்குச் செல்லும்.

★ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட்டு, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க தீர்வை எட்ட வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருப்பவர் சிறுபயிர் ஏற்றுமதி ஊக்குவிப்புத் துறை அமைச்சர், ரெஜினோல்ட் கூரே.

அரசியல் தீர்வு காணும் விடயத்தில் உள்நாட்டு மட்டத்தில் மட்டும் சிந்திக்கக் கூடாது. இராஜதந்திர ரீதியிலும் சிந்திக்க வேண்டும். மகாத்மா காந்தி, ஏபிரகாம் லிங்கன் போன்றவர்களைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும் - என்றும் அமைச்சர் கூரே சுட்டிக்காட்டியுள்ளார்.

தெரண (எதிரொலி) தொலைக்காட்சியில் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்த விவாத அரங்கு 'வாதப்பிட்டி' நிகழ்ச்சியில் பங்குபற்றியபோதே அமைச்சர் ரெஜினோல்ட் கூரே இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.

இந்தத் தொலைக்காட்சி விவாதத்தில், அமைச்சர் திஸ்ஸ விதாரண, ஐ.தே.கட்சியின் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.சுமந்திரன் ஆகியோரும் கலந்துகொண்டு தமது கருத்துகளை முன்வைத்தனர்.

அமைச்சர் ரெஜினோல்ட் கூரே தொலைக்காட்சி விவாதத்தில் குறிப் பிட்ட மேற்கூறிய கருத்துக்களை, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அக்கறை கொண்டுள்ளதாக வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்ளும் அரசு, எவ்வாறு சீரணிக்கிறது, எவ்வாறு செயற்படுத்த முனைகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

சுமார் முப்பது வருடங்களாக நீடித்து நாட்டின் மக்களுக்குப் பல அவலங்களையும் இழப்புகளையும் தந்த போர் முடிவுற்று இரண்டு வருடங்கள் கடந்தோடி விட்டன. ஆனால் தேசத்தின் இரண்டு இனங்களுக்கு இடையே ஆறு தசாப்தங்களாக நிலவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் போக்கை அரசிடம் காணமுடியவில்லை. ஓர் உருப்படியான, செயற்றிட்டத்தை வகுத்து, அர்த்தமுள்ள ஒரு தீர்வைக் கண்டறிவதற்குத் தேவையான ஆர்வம் அரசிடம் காணப்படவில்லை. 'சுற்றிச் சுற்றிச் சுப்பரின் கொல்லைக்குள்' என்ற நிலையில் போக்குக் காட்டும் தோரணையிலேயே அரசின் காரியங்கள் நடைபெறுகின்றன.

அதனால் தீர்வு நாடிய செயற்பாடு மந்தம் அடைந்தும், உயிர்ப்பு இல்லாமலும், தெந்தட்டிலும், முடிவை எட்ட வேண்டும் என்ற இலக்கு இல்லாமலும் நகர்ந்து கொண்டிருக்கின்றது. அதுமட்டுமன்றி 24 வருடங்களுக்கு முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட, இனங்காணப்பட்ட மத்திமமான அதிகாரங்களைக் கூட, சுரண்டி, வெட்டிச் சீவப்பட்ட வடிவத்தில் வழங்கும் உள்ளந்தரங்கமான கபட நோக்குடன் அரசு செயற்படுகின்றது.

அதனை உள்வாங்கிச் சீரணிக்க முடியாத மனவெதும்பலின் வெளிப்பாடே, அமைச்சர் ரெஜினோல்ட் கூரேயின் முதலில் குறிப்பிட்ட கருத்து வடிவங்கள்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்காது அது நீடிக்குமானால், நாடு மீண்டும் இருண்ட யுகத்துக்கே திரும்ப நேரிடும் என்ற அவரது ''எச்சரிக்கை'' அர்த்தபுஷ்டியானது. அதேபோன்று அரசியல் தீர்வைக் காண்பதற்குக் கால எல்லை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அவர் இடித்துரைப்பதும் பேச்சு வார்த்தைக்கான பிரதான தேவையாகும்.

அமெரிக்கா பிளவுபட்டுவிடாமல் காப்பதற்காகப் பிரிவினைக் கோட்பாட்டாளர்களை எதிர்த்து உள்நாட்டுப் போர் நடத்தி வெற்றிபெற்றவர் ஏபிரகாம் லிங்கன். ஆனால் அதேவேளை அடிமை முறையை ஒழிக்கப் போராடி அதனைப் பூண்டோடு ஒழித்தவரும் அவரே. இரண்டு மாறுபட்ட இலக்குகளை - கொள்கைகளை என்றும் சொல்லலாம் - அடைவதற்கு இதய பூர்வமாக உழைத்தமை ஏபிரகாம் லிங்கனின் தலைமைத்துவப் பண்புக்கு மெருகூட்டியது. அவரை அனைத்துலக அரசியல் தலைவர்களின் வரிசையில் அமர்த்தியது. உலக மக்களின் உள்ளங்களில் அரியாசனம் கொள்ள வைத்தது.

அவரைப் போலவே அகிம்சாமூர்த்தி மகாத்மா காந்தியும் அகில உலக வரலாற்றில் ஒளிவிடும் தலைவராகத் திகழ்ந்தார்.

இந்திய மக்களை அடிமைகளாகக் கருதி அவர்களை அடக்கி ஒடுக்கிய வெள்ளையர்களுக்கு எதிராக அகிம்சைப் போராட்டத்தைக் கையில் எடுத்து வென்றவர்.

பாரத தேசம், இந்தியா, பாகிஸ்தான் என்று இருநாடுகளாகப் பிளவுபடுத்தப்பட்டபோது, அக்கினி போல் மூண்ட மதக்கலவரத்தை தமது உண்ணாவிரதத்தின் மூலம் முடிவுக்குக் கொண்டுவந்தவர்.

ஏன், பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தானுக்குக் கிடைக்க வேண்டிய 55 கோடி ரூபாவை வழங்குவதற்கு ஜவஹர்லால் நேருவின் இந்திய அமைச்சரவை மறுத்த போதிலும், உண்ணாவிரதம் இருந்து அந்த நிதியை வழங்க வைத்தவர்.

பிரிவினையை மகாத்மா ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் பிரிவினையை ஏற்றுக்கொண்டவர்களை, அதற்குரிய நியாயமான நடைமுறைகளைக் கைக்கொள்ளத் தமது சாத்வீகப் போராட்டங்கள் மூலம் ஏற்றுக்கொள்ளச் செய்தார்.

இங்கே, அமைச்சர் ரெஜினோல்ட் கூரே, ஏபிகாம் லிங்கனையும், மகாத்மா காந்தியையும் இலங்கை அரசியல் தலைவர்கள் பின்பற்றி நடக்க வேண்டும் என்று மறைமுகமாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

அதாவது, இலங்கை பிளவுபடாமல் தக்கவைக்க சிங்கள அரசியல் தலைமைகள் தமது இலக்காகக் கொண்டிருந்தாலும், தமிழர்களுக்குரிய ஆட்சி உரிமையை வழங்க வேண்டும் என்பதனைப் பூடகமாக உணர்த்துகிறார் என்று கொள்ளலாம்.

மகாத்மா காந்தியும் ஏபிரகாம் லிங்கனும் இதய சுத்தியோடு செயற்பட்டது போன்று சிங்கள அரசியல் தலைவர்களும், நியாயமான போக்குக்குத் தமது நோக்கங்களை மாற்றினால், இலங்கை ஒரே நாடாக உயரவும் வளரவும் வாய்ப்பு உண்டு என்பதனை உணர்த்துகிறார் அமைச்சர் கூரே.

இது அரச உயர்மட்டங்களுக்குச் செவிடன் காதில் ஊதிய சங்காக இல்லாமல், அமைச்சர் எடுத்துக்கூறிய யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு நல்லெண்ணத்துடன் உள்ளத்தே உள்வாங்கிச் செயற்படுவார்களா? அமைச்சரின் மனச்சாட்சி பேசுவதை அரச உயர்மட்டம் காதில் போட்டுக்கொள்ளுமா? அல்லது தாம் நினைத்ததையே செய்து முடிக்க முனைவார்களா? அதனூடு இருண்ட யுகத்துக்கு நாட்டை இட்டுச் செல்வதற்கு வழிகோலப் போகிறார்களா?

## மாநகரசபையின் 'யாழ் விருது' இம்முறை வைத்திய நிபுணர் டாக்டர் ஜெயக்குமாரனுக்கு

யாழ்ப்பாணம், ஒக 12

யாழ். மாநகரசபை வருடாந்தம் வழங்கி வரும் யாழ். விருது இந்த முறை புற்றுநோய் வைத்திய நிபுணர் என். ஜெயக்குமாரனுக்கு கிடைக்கவுள்ளது.

சிறந்த சமூக சேவையாளரும் யாழ். போதனா வைத்தியசாலையில் மட்டுமே பொதுமக்களுக்கான தனது வைத்திய சேவையை வழங்கி வரும் நிலையில் இவரைக் கௌரவிக்கும் முகமாக இந்த விருது வழங்கப்படவுள்ளது.

யாழ். மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக்குழு மாநகர ஆணையாளருமான மு.செ. சரவணபவ தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை கூடியது.

இந்தக் கூட்டத்தில் சிறந்த சேவையாளர்கள் பற்றி ஆராயப்பட்டது. இதன்போது டாக்டர் ஜெயக்குமாரனின் சேவை குறித்து ஆராயப்பட்டது.

இறுதியில் இந்த ஆண்டுக்கான யாழ். விருது டாக்டர் ஜெயக்குமாரனுக்கே வழங்கப்படவேண்டும் என்று ஒரு மனதாகத் தீர்மானித்தது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டுவிழாவில் வைத்து இந்த விருதை வைத்திய கலாநிதி ஜெயக்குமாரன் பெறவிருக்கிறார்.

(ம-7)

## 23 உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரம் விசேட உத்தியோகத்தரிடம் கையளிப்பு

கொழும்பு, ஒக.12

23 உள்ளூராட்சி மன்றங்கள் விசேட உத்தியோகத்தர் ஒருவரால் நிர்வகிக்கப்படும் என்று உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்தார்.

குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குப் புதிய தலைவர்கள் தெரிவுசெய்யப்படும் வரை அவற்றுக்கான அதிகாரங்கள் விசேட உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறவுள்ள 17 மாநகரசபைகள், 5 நகர சபைகள் மற் றும் பிரதேச சபை ஒன்று ஆகியவற்றின் பதவிக்காலம் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவுடன் முடிவடைந்துள்ளது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியால் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மேற்படி சபைகளுக்கு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(ற)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக 12

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்புக்களின் ஏற்பாட்டில் நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு ஆன்மிக சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நல்லூர் 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெற வுள்ள ஆன்மிக சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை 'நெஞ்சக் கனகல்' எனும் தலைப்பில் ச. லலீசனின் சொற்பொழிவு இடம்பெறும்.

(ம-311)

* * *

யாழ்ப்பாணம், ஒக 12

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் பெருந்திருவிழா காலத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு ''தெய்வீக இசையரங்கு'' நிகழ்வை நடத்திவருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை ஒன்பதாம் திருவிழாவில் திருமதி குமுதா உமாகாந்தன், கே. பத்மநாதன், எஸ். துரைராசா, எஸ். செந்தூரன் ஆகியோரின் இசையரங்கு இடம் பெறும்.

(ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஒக 12

நல்லூர் பெருந்திருவிழாவில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு சமய சொற்பொழிவுகளும், கலை நிகழ்வுகளும் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றன.

ஒன்பதாம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை ''ஆலயமும் ஆன்மிகமும்'' எனும் தலைப் பில் எஸ்.கே.என். தவராஜா உரை நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர்சபை அறநெறிப்பாடசாலை, யாழ்ப்பாணம் காமாட்சி அம்பாள் அறநெறிப்பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்.

(ம-313)

## கூட்டுறவுச் சமாசம் உருவாக்கம்

யாழ்ப்பாணம், ஒக. 12

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 47 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை உள்ளடக்கிய கூட்டுறவு சமாசம் உருவாக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவுச் சங்க வளவில் அமைக்கப்பட்ட தற்காலிக மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை வடக்கு மாகாண கூட்டுறவு திணைக்கள ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. குறைந்த விலையில் பொருள்களை விற்பனை செய்வது குறித்து ஆராய்வதற்காக ஐந்து பேர்கள் கொண்ட குழு ஒன்றும் இதில் நியமிக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் யாழ். கூட்டுறவு உதவி ஆணை யாளர் என். அருந்தவபாலன் மற்றும் பல. நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் கலந்துகொண்டனர்.

(ம-7)

## தானத்தில் சிறந்தது அன்னதானம்

தானங்களில் எல்லாம் சிறந்தது அன்னதானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தானம் வாங்குகிறவனுக்குத் திருப்தி ஏற்படுத்தும் தானம் அது ஒன்று தான். எவ்வளவு பணம் கொடுத்தாலும், வஸ்திரதானம் செய்தாலும், பூதானம் கொடுத்தாலும், வாங்குகிறவன் போதுமென்று சொல்வது இல்லை. ஆனால் அன்னதானத்தில் எவ்வளவு சாப்பிடமுடியுமோ அவ்வளவு சாப்பிட்டுவிட்டால் போதும் என்று சொல்லிவிடுவான். அதற்கு மேல் ஒரு கவளம் கொடுத்தாலும் வேண்டாமென்றே சொல்லுவான்.




இவ்விதம் போதுமென்று சொல்கிறவரையில் திருப்தி ஏற்படுத்தக்கூடிய தானம் அன்னதானம் ஒன்றுதான்.

ஆனால் இந்தத் தானத்திலும் ஒருவேளை சாப்பிட்டபின் அப்பொழுது போதும் என்று சொன்னாலும் கூட அந்தத் திருப்தி அப்பொழுது மாத்திரமே தவிர அடுத்த வேளையில் பசிவரும் போது மறுபடியும் அன்னத்தின் மீது நாட்டம் ஏற்படும். இந்த நிலையை மாற்ற முடியாது.

நன்றி; ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் இணைப்புப் பொறிக்குள் தூசிகள்; மின்தடைக்கு இதுவே காரணமாம்

## சதி எதுவுமில்லை என்கிறது மின்சாரசபை

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ்.குடாநாட்டில் உள்ள மின் இணைப்பு பொறிகளுக்குள் அளவுக் கதிகமாக தூசிகள் படிதல் மற்றும் காற்றால் ஏற்படும் உராய்வுக்ளின் போது உபகரணங்கள் பழுதடைதல் போன்ற காரணங்களாலேயே அடிக்கடி மின்தடைகள் ஏற்படுகின்றன என்று மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித் தன.

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாள் களாக அடிக்கடி மின்சாரம் தடைப்படு வதால் பரீட்சைக்கு தயாராகும் மாண வர்களும், அலுவலர்கள் மற்றும் பொது மக்களும் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது குறித்து மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக் கப்பட்டதாவது:


மின்தடை என்பது திட்டமிட்ட சதி ஒன்றும் இல்லை. கடந்த வருடம் உயர்தரப் பரீட்சையின் போதும் இவ் வாறாக இரவு வேளைகளில் மின்சாரம் தடைப்பட்டது என்று மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.

இருந்த போதும் தற்போது இவ்வாறு மின் தடை ஏற்படுவது ஒன்றும் திட்ட மிட்ட செயல் இல்லை என்பதை அனை வரும் புரிந்து கொள்ள வேண்டும். 33 ஆயிரம் வோல்ரேச் மின்சாரம் பாய்வதற்கு தடைவிதிப்பவை தூசிகளே

குடாக்கடலில் தற்போது நீர் ஊற்றுக் கள் போதியளவு இல்லை. இதற்கு போதி யளவான மழை வீழ்ச்சிகள் இல்லை.

மழைவீழ்ச்சிகள் இருந்தால் தூசிகள் நீரில் கரையும் பருவ மழை பெய்யாமை யும் மின் தடைக்குக் காரணம் என்று தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையிலும் மின்தடை கள் ஏற்பட்டால் உடனுக்குடன் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம் என்று மேலும் தெரிவித்தார். (ம-311)



கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் உயர்தர மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த ஒன்றுகூடல் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவனும் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தருமான இ. ஜெகானந்தன், அதிபர் நா. நவநீதமணி மற்றும் விருந்தினர்கள்மேடையில்அமர்ந்துள்ளனர். (ம-190)

# சிறைக் கைதிகள் நலன்புரி சங்கம் யாழ். சிறைச்சாலையில் உருவாக்கம்

யாழ்ப்பாணம், ஓக.12

யாழ். சிறைச்சாலையில் முதல் தடவையாக சிறைக்கைதிகள் நலன்புரிசங்கம் ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

ஏனைய பல சிறைச்சாலைக ளில் சிறைக்கைதிகள் நலன்புரி சங்கங்கள் ஏற்கனவே ஆரம் பிக்கப்பட்டுஇயங்கி வருகின்றன.

1997 ஆம் ஆண்டு யாழ். சிறைச் சாலை ஆரம்பிக்கப்பட்ட போதும் அதற்கென இந்தச் சங்கம் உரு வாக்கப் பட்டிருக்கவில்லை. வீடொன்றிலேயே யாழ். சிறைச் சாலை இன்று வரை இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் சிறைக் கைதி களின் நலனைக் கருத்தில் கொண்டு இந்தச் சங்கம் ஆரம் பிக்கப்பட்டுள்ளது. இந்தச் சங்கத் தை உருவாக்குவதற்கான தெரிவுக்கூட்டம் யாழ். சிறைச் சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்க நாயக்க தலைமையில் யாழ். சிறைச் சாலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதன் போது இந்தச் சங்கத்துக்கான நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

அதன்படி இந்தச் சங்கத்தின் தலைவராக அரச சட்டதரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங் கமும், செயலாளராக சிறைச் சாலை நலன்புரி அதிகாரி பி.சுசி தரனும், பொருளாளராக சமா தான நீதிவான் எம்.யூலியஸும் தெரிவு செய்யப்பட்டனர்.

உப தலைவர்களாக முன் னாள் விரிவுரையாளர் எஸ்.ஈஸ் வரசர்மா, வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கே. பொன்னம் பலம் ஆகியோரும் உபசெயலா ளராக சட்டத்துறை விரிவுரை யாளர் ஏ.குருபரனும் கணக்குப் பரிசோதகர்களாக முறைசாராக் கல்விப்பிரிவுப் பிரதி ப்பணிப்பா ளர் எம்.ராசநாயகம், சட்டத்தரணி செல்வி கே.நிலுசா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். போசக ராக சிறைச் சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்க நாயக்க தெரிவுசெய் யப்பட்டார்.

நீதி மன்றினால் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுசிறைச்சாலைக்கு செல்வோருக்கு உடனடி உதவிகள் வழங்கவும் சிறைக் கைதிகளில் வறுமைப்பட்ட குடும்பத்தவர் களுக்கு சிறு உதவி வழங்குவ தற்கும் இது செயற்படும்.

அது மட்டுமன்றிக் கைதிகள் தினம் போன்ற நாள்களில் நிகழ்வு கள் நடத்தவும் அதற்கான உதவி களை இந்தச் சங்கத்தினூடா சிறைச்சாலைக்கு வெளியே உள்ளவர்களிடமிருந்து பெற் றுக்கொடுக்கவும் இந்தச் சங்கம் செயற்படும். ஒவ்வொரு மாதமும் இறுதி வெள்ளிக்கிழமையில் இந்தச் இச்சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம- 4)

# வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் - 12.08.2011

## ஆசிச்செய்தி


அண்ட சராசரங்களையும் தனது பெருங்கருணையினாலும் பேரன்புத் திறத்தினாலும் ஆட் கொண்டு உவமையிலாக் கலைஞான மாய் உணர்வரிய மெஞ்ஞானமாய் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியனாய் நிறைந்தருளுபவள் அன்னையாவாள். அவள் அடிய வர் மீதுகொண்ட அளப்பெருங்கருணையினால் ஈழத்திரு நாட்டில் நூற் றாண்டுகளைக் கடந்து தமிழர்களால் வழிபடப் பட்டு வரும் புராதன ஆலயங் களில் ஒன்றான வேலணைப் பெருங் குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆல யத்தில் நித்தமும் அருளாசி நல்கி வருகின்றமை சிறப்புக்குரியதாகும்.

அன்புக்கும் பண்புக்கும் சமூக ஒற்றுமைக்கும் நிலைக்களனாக விளங்கும் இந்த ஆலயத்தில் மஹோற்சவங்களில் சிறப்புக்குரிய தாகிய தேர்த்திருவிழாவில் உலக அன்னையாகிய ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேதேறி தீயனவெல்லாம் அழித்து அடியவர்களுக்கு அருளாசி நல்கிட அன்னையின் திருப்பாதங்களைப் பணிந்து ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். இந்தவகையில் இந்த ஆலயத்தை அமைத்து வருடம்தோறும் மஹோற்சவங்கள், விழாக்களைச் சிறப்புற நிகழ்த்தி வருகின்ற இந்தத் தேவஸ்தானத்தின் பெருமைக்கும் பாராட்டுக்கும் உரிய அறங்காவலர்கள், அடியவர்கள் அனைவருக்கும் அம்பிகை யின் திருவருட்கடாட்சம் கிட்டும் என்பது திண்ணமே.

அன்னை தேரேறி வேலணைப் பெருங்குளம் அடியவர்களுக்கு மட்டுமன்றி இலங்கைவாழ் அனைத்து மக்களுக்கும் அருட்கடாட் சத்தினை வாரி வழங்கி உய்வித்திடவும் தேர்த்திருவிழா சிறப்புறவும் ஆசியினை வழங்கி மகிழ்கின்றேன்.

''நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு
அம்பிகையை சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாம்''

மு.நந்தகோபாலன்.
பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை.



## தேரில் எழுந்தருளும் முத்துமாரியம்மன்

வாரங்களில் இறைவனுக்குரிய நாளாகப் போற்றப்படும் வெள்ளிக்கிழமை ஆன இந்தப் பொன்னான நாளில் வேலணைப்பகுதியில் பெருங்குளத்தடியில் எழுந்தருளி இருக்கும் அடியார்களுக்கு அருளாசிகளை அள்ளிச் சொரியும் முத்துமாரியம்மன் தேரேற உள்ளாள்.

இந்த நன்நாளில் அடியவர்களின் தீய பாவங்களை அழித்து நன்மைகளை அம்மன் அடியவர்களுக்கு வழங்குவாள் என்பது எமது அசைக்கமுடியாத நம் பிக்கை. எல்லாம் வல்ல முத்துமாரியம்மன் தேரில் எழுந்தருளி பவனிவரும் காட்சியைப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் சொரியாத அடியவர்களே இல்லை. இந்த நன்நாளில் அம்மன் சகலருக்கும் சகல சௌபாக்கியங்களையும் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்.

நா.பாலச்சந்திரன், தலைவர்.

## அருள் சொரியும் அம்மன்

எமது மக்களைக் காப்பாற்றுவதற்காக வேலணைப்பதியில் குடி கொண்டிருக்கும் முத்துமாரியம்மன் தேர் பவனி வரும் இந்நாளில் அம்மன் தனது அருளாசிகளை பக்கதர்களுக்கு அள்ளிச் சொரிய உள்ளாள்.

தீயன அழித்து நன்மைகளைச் சொரிய உள்ள இந்நன்நாளில் பக்கதர்களின் நன்மைக்காக அம்மனைப் பிரார்த்திப்போம் ''கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' எனும் வாசகத்துக்கேற்ப அம்மன் என்றும் தன்னை நம்பியோரைத் தன் கூடவே நின்று காத்தருளுவாள். இந்த நன் நாளில் அம்மனின் திருவடியைத் தியானித்த இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வோமாக.

சு.சுந்தரலிங்கம், செயலாளர்.

## வேலணை பிரதேச சபைச் செயலாளரின் செய்தி

தெட்சண கைலாயம் எனச் சிறப்புப் பெயர்பெற்ற இலங்கைத் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்மேற்கே சிறந்து விளங்குகின்ற வேலணைப் பதியிலே கோயில் கொண்டு அருளாட்சி செய்கின்ற பெருங்குளத்து முத்துமாரி அம்மன் இன்று தேரேறிவரும் தெய்வீகக் காட்சியைக் காண்பதற்கு திக் கெல்லாமிருந்து திரள்கின்றனர் பக்தர்கள். பராசக்தியானவள் மாரி யம்மன் வடிவிலேயே பக்தர்களுக்கு அதிகளவில் அருள் செய் கின்றாள் என்பது பாமர மக்களது உறுதியான நம்பிக்கையாகும்.

இந்த வகையில், இந்த ஆலயத்தை நாடி வரும் பக்தர்களுக்கு நல்ல ருளை வழங்க வேண்டும் என்று முத்துமாரி அம்மனை அன்போடு இறைஞ்சுகின்றோம்.

மகமாரி என்றுனை நினைப்போர் தமக்கு
வாதமொடு பித்தம் சிலேற்பனம் கண்நோய்
பகை தேசமான தொரு நோய் கிரக தீவினைகள்
பாடுபட்டோடும் உன் நாமங்கள் கேட்டால்
அகமகிழ்ந்தஞ்சேலென்றுன்கிருபை தருவாய்
அவலெனும் கனல் தணித்தாள நினையம்மா
சகல கலைவல்லியே கன்னனூர் வந்த
சக்தியே சித்தியே கமலாசனத்தியே
(மாரியம்மன் தாலாட்டில் ஒரு பாடல்)

கெ.தவராசா,
செயலாளர், வேலணைபிரதேச சபை.

## பிரதம குருவின் ஆசியுரை

தெய்வீக அருட்தலங்கள் பல விளங்கும் இலங்கையின் வடபால் யாழ்ப் பாணத்தின் தென் புறத்தே தீவகற்பத்தில் தனவந்தர்களும், கல்விமான்களும் சைவசீலர்களும் தமிழ்பற்றாளர்களும் விவசாயிகளும் நிரம்பி பல திருக்கோயில்கள் உள்ளதாற் சிறப்புற்று சைவ மணம் கமழும் புண்ணிய பூமியாம் வேலணை கிராமத்தில் பெருங்குளம் எனத் தலப் பெயர் கொண்டு அமைவுறும் பதியில் தாயாரின் கருணை வடிவாகச் சக்தியின் அருள் தோற்றமாக ஸ்ரீ முத்துமாரி அம்மனாக கோயில் கொண்டு தனை நாடி வரும் அடியவர்களின் இன்னல் இடர்களை களைந்து அருள் ஆசி வழங்கும் அம்பிகையின் வருடாந்த மஹோற்சவ பெருவிழாவின் தேர் உற்சவ விழா 12.08.2011 இன்றைய தினம் சிறப்பாக இடம்பெறும். அந்த வேளையில் அம்மனின் அடியார்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து காட்சியைக் கண்டு களித்து அம்பிகையின் திருவருள் ஆசி கிடைக்கப் பெற்று சகல செல்வங்களோடு இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஸ்ரீ லலிதா மகாதிரிபுர சுந்தரி முத்துமாரி அம்பிகையிடம் வேண்டுதலும் பிரார்த்தனையும் செய்வதோடு எனது நல்லாசிகளைக் கூறிக்கொள்கிறேன்.

சர்வேஜனாக சுகினோ பவந்து
சாதகப் பிரவீனா, கிரியா கலாபமணி, கிரியா வித்தகர்
[illegible] சுப்பிரமணிய வைத்தீஸ்வரக் குருக்கள்
[illegible] பிரதம குரு

## அம்மனின் தேருலா

இறைவன் ஒருவனே. அவர் பல உருவங்களில் எம்மை வந்து ஆட் கொள்ளுகிறார். அவ்வாறு அம்மனாக வந்து வேலணைப்பதியில் எம்மை ஆட் கொண்டுள்ளாள்.

வரலக்ஷ்மி விரதநாள் மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய இப்பொன் னான அம்மனுக்குகந்த நன்நாளில் அம்மன் தனது அடியவர்களின் குறைக ளைத் தீர்ப்பதற்காகத் தேருலா வரு கின்றாள். அம்மன் அலங்கரிக்கப்பட்டு வரும் கண்கொள்ளாக் காட்சியைக் காண எமக்கு கண்கோடி வேண்டும். அம்மனின் மலர்ப்பாதங்களை வணங்கி அவரின் அருளாசிகளைப் பெறுவோ மாக.

ஜ.ரதீஸ்வரன், பொருளாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொழில்கள் அபிவிருத்தியடைய வடபகுதியில் செயற்பாடுகள் அவசியம்

யாழ்ப்பாணம், ஓக. 12

வடபகுதியில் கைத்தொழில் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமம.

இதன்மூலம் இங்கு கைத்தொழிற் பேட்டைகளை உருவாக்க வேண்டும்.

இதற்கு தேவையான செயற்பாடுகளை மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார் பனை அபிவிருத்தி சபைத் தலைவர் என்.சீவரத்தினம்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் துணிகளில் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள்களை உருவாக்கும் பயிற்சி நெறி நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தென்னிலங்கையில் சிங்கள மக்கள் கற்றுக்கொண்ட சிறுகைத்தொழில்கள் , குடிசைக் கைத்தொழில்கள் ஆகியவற்றை தமிழ் மக்களும் கற்றுக்கொள்ளவேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியிலும் கைத் தொழில்கள் அபிவிருத்தி அடைய வேண்டும். வடபகுதிகளில் கைத்தொழிற் பேட்டைகள் உருவாக வேண்டும்.

சிங்கள மக்களின் தொழில் நுட்பங்கள், வடிவமைப்புக்களை தமிழ் மக்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் பல கைத்தொழில்களை மகளிருக்காகவும் இளைஞர்களுக்காகவும் யாழ்.மண்ணில் அறிமுகம் செய்து வருகிறோம்.

**எமது மக்கள் மத்தியில் குடிசைக் கைத்தொழில்கள் உருவாக வேண்டும் . இதனூடாக வடக்கில் கைத்தொழிற் பேட்டைகள் தோற்றம் பெறும்.**

கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து தேசிய வடிவமைப்பு நிலையத்தின் மூலமாகவும் கைத்தொழில் அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இளைஞர்களின் எதிர்காலம் வளமானதாக அமையவும் அவர்கள் சுயமாக உழைக்கக் கூடிய தன்மை உடையவர்களாக வரவேண்டும் என்பதற்காகவும் இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது தேசம் தொழிலில் முன்னேற்றம் அடைவதோடு அனைவரது எதிர்பார்ப்புகளும் வளமானதாக அமைய வேண்டும்.

எந்தவொரு சுயதொழில் முயற்சிக்கும் அமைச்சும் அரச வங்கிகளும் உறுதுணையாக இருக்கும் என்று அவர் மேலும் கூறினார். (ம-311)

## நல்லைக்குமரன் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 12

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாநகர சபை சைவ சமய விவகாரக் குழு நல்லைக்குமரன் மலரை எதிர் வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்து வெளியிட்டு வைக்கவுள்ளது.

யாழ்.மாநகர ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான மு.செ. சரவணபவ தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து கொண்டு நல்லைக்குமரன் மலரை வெளியிட்டுவைப்பார்.

வருடாந்தம் இந்த மலர் வெளியிட்டு வைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## காசுக்கான வேலை செய்தாலே 25 ஆயிரம் ரூபா கிடைக்குமாம்

### மக்கள் அதிருப்தி

கொழும்புத்துறை, ஓக.12

மணியந்தோட்டப் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் மீள் குடியமர்வுக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபாவைப் பெற வேண்டுமாயின் காசுக்கான வேலைத்திட்டத்தில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இடம்பெயர்ந்த பகுதிகளில் மீளக்குடியமரும் மக்களுக்கு எவ்வித நிபந்தனையும் இன்றி வழங்கப்படும் உதவிக் கொடுப்பனவை வேலை செய்தால் தான் வழங்க முடியும் என்பது எவ்வகையில் நியாயமானது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

காசுக்கான வேலைத் திட்டத்தின் கீழ் மணியந்தோட்ட கிராம வீதிகள், பொது இடங்களை சீரமைக்கும் பணிகளில் ஈடுபடவேண்டும். இந்த வேலைகளில் ஈடுபடும் குடும்பங்களின் பெயரில் 650 ரூபா வங்கியில் நாளாந்தம் வைப்பிடப்படும்.

25 ஆயிரம் ரூபா சேர்ந்ததும் வங்கியிலிருந்து பயனாளிகள் பெற்றுக்கொள்ள முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்ததாக மக்கள் கூறுகின்றனர்.

மீள் குடியமர்வு கொடுப்பனவில் இப்பகுதிக்கு பின்பற்றப்படும் முரணான நடவடிக்கையால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

ஏனைய பகுதிகளைப்போன்று நிபந்தனையற்ற முறையில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-135)

### கல்விக்காக...



ஆரம்பம்: காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட டிஜிற்றல் நூலகத்தின் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது. பிரதம விருந் தினராக கலந்துகொண்ட போக்குவரத்து பிரதி அமைச்சர் றொகான் திசநாயக்கா பாடசாலை மாணவருடன் இணைந்து கட்டடத்தைத் திறந்து வைக்கிறார். (ம-250)

## பகல் நேரத்திருடர்கள் அதிகரிப்பால் அச்சநிலை

கொழும்புத்துறை, ஓக.12

திருநெல்வேலிச் சந்தைப் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் பகல் திருடர்களின் கைவரிசை அதிகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் இந்தப் பகுதியில் உள்ள இரும்பகம் ஒன்றில் காலை வேளை 25 ஆயிரம் ரூபா பணத்துடன் இருந்த கைப்பை திருடப்பட்டுள்ளது.

கடையின் உரிமையாளர் காலைவேளை கடையைத் திறந்து சுத்தம் செய்வதற்காக பின்பக்கம் சென்றபோது காசாளர் மேசைக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த 25 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பொருள்களுடனான கைப்பை மாயமானதாகக் கூறப்படுகிறது.

இது போன்ற பல்வேறு சம்பவங்களும் இடம் பெற்றுவருவதாகக் கூறப்பட்டது.

கடை உரிமையாளர்களின் நடவடிக்கைகளைக் கவனித்து நாசூக்காக திருட்டை மேற்கொள்ளும் கும்பல்களின் நடமாட்டம் சந்தைப் பகுதியில் அதிகரித்துள்ளதால் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். (ம-135)

## மின்சார கேபிள்கள் அறுந்து வீதியில் வீழ்ந்தன

கைதடி, ஓக.12

யாழ். பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவபீட மாணவர் தங்கும் விடுதிக்கு முன்னால் கண்டி வீதியில் திடீரென மின்சார கேபிள்கள் அறுந்து வீதியில் வீழ்ந்தன.

இதனால் அந்தப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அதிகாலை இரு கம்பங்களிலிருந்து மின்சார வயரும் மின்சாரக் கேபிள்களும் ஒன்றோடு ஒன்று உரசிய நிலையில் திடீரென அறுந்து வீழந்துள்ளன.

அந்த வேளையில் மக்கள் போக்குவரத்துக் குறைவு என்பதால் பாதிப்புகள் ஏற்படவில்லை. எனினும் பதற்றம் நிலவியது.

துரிதமாகச் செயற்பட்ட சித்த மருத்துவ பீட மாணவர்கள் சிலர் அந்த இடத்துக்கு எவரும் செல்லாத வகையில் தடை செய்தனர்.

மின்சார சபையினருக்கும் உடனடியாக அறிவிக்கப்பட்டது என்றும் மின்சார சபை ஊழியர்கள் முற்பகல் பதினொரு மணிக்கு பின்னரே அங்கு சென்று சீர் செய்ததாகவும் மக்கள் தெரிவித்தனர். (ம-288)

## மணியந்தோட்டம் மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

கொழும்புத்துறை, ஓக.12

கொழும்புத்துறை மணியந்தோட்டம் வசந்தபுரம் பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கையை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பகுதியில் பிரதான இடங்களில் தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டு தினமும் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான ''பவுசர் மூலம்'' நீர் நிரப்பப்பட்டு வருகின்றது.

மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள இந்தப் பகுதிகளில் இருந்த கிணறுகள் சேதமடைந்து காணப்படுவதால் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் இந்தச் சேவை இடம்பெறுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-135)

## மட்டுப்படுத்தப்பட்ட சேவையால் மக்கள் நெருக்கடி நிலையில்

ஊர்காவற்றுறை, ஓக.12

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கும் ஊர்காவற்றுறையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான 780 வழி இலக்க பேருந்து சேவை இலங்கை போக்குவரத்து சபையால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடத்தப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்கு காலை 7.30 , 8.30 இற்கும், நண்பகல் 12.30 இற்கும் பின்னர் மாலை 4 மணிக்கு 777, 780 சேர்ந்ததாகவும் பின்னர் மாலை 6.30 மணிக்கும் சேவைகள் இடம்பெறுகின்றன. ஊர்காவற்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு காலை 5.45, 6.45, 9.45, 10.30 ஆகிய நேரங்களிலும் பிற்பகல் 2.30 மணிக்கும் சேவை நடைபெறுகிறது.

இதனால் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்கள் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து மெலிஞ்சிமுனைக்கு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சேவையை 780 வழி ஊடாகவோ அல்லது 778 வழி ஊடாகவோ நடத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதனால் போக்குவரத்துச் செய்வதில் மக்களுக்கு ஏற்படும் நெருக்கடி நிலை குறையும் என்று கூறப்பட்டது. (ம-325).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஒகஸ்ட் 2011 வெள்ளிக்கிழமை


# ஆலயங்களின் திருக்காட்சிகள்



காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிரமணியர் ஆலய தேர்த் திருவிழாவின் போது ஆறுமுக சுவாமி தேரில் வலம் வருகிறார். (ம-60)




ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் அண்மையில் நடைபெற்றது. இதில் புனித அந்தோனியார் திருச்சொரூபம் பவனி வருகிறது. (ம-127)



புங்குடுதீவு பிட்டியம்பதி ஸ்ரீ காளிகாம்பாள் ஆலயத்தின் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம்.



நவாலி, சென்.பீற்றர்ஸ் ஆலயத்தில் நடைபெற்ற பெருநாளின் போது பேதுறுவானவர் ஆலயத்தில் இருந்து வீதி உலா வருகின்றார். (ம-100)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெற்ற மகாகும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்தியில் பஞ்சமூர்த்திகள் திருவீதி உலாவரும் காட்சி. (ம-250)



காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற பாலஸ்தாபன கும்பாபிஷேகத்தின் போது பிரதம குரு சிவஸ்ரீ ரு.சண்முகராஜக் குருக்கள் அம்பாளுக்கு அபிஷேகம் செய்கிறார். (ம-250)

பனை அபிவிருத்திச் சபை
PALMYRAH DEVELOPMENT BOARD

**Research Facilitation Centre Building of Palmyrah Research Institute for Palmyrah Development Board at Navatkuli, Kaithady - Jaffna**

1. The Chairman of the Palmyrah Development Board now invites sealed bids from eligible and qualified bidders for "Renovation of Palmyrah Research Institute Building for Palmyrah Development Board, Jaffna' as described below and estimated to cost of Rs. 5.50 million.

   The construction period is 120 Days.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction for grade M6/C7 or above with the Institute for Construction Training and Development (ICT AD).
4. Interested bidders may obtain further information from the Department of Building (Central), Beach Road, Jaffna or The Chairman, Palmyrah Development Board (Jaffna), and inspect the bidding documents at the same address on any working day from 8:30 hrs to 16:15 hrs. Contact numbers are Phone: 021 2222034 Facsimile: 021 2224154 & Building Department No: 021 2222781.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna from 10th August 2011 until 19th August 2011 from 8:30 hrs to 16:15 hrs upon payment of non refundable fee of,Rupees one thousand (Rs.1,000/=)
6. Bids shall be delivered or sent by registered post to The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna before 10:00 hrs on 22nd August 2011. Bids will be opened soon after closing at the Office of The Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna in presence of the bidders' representatives who choose the attend.
7. All bids shall be accompanied by a Bid Security obtain from a reputed Bank in Sri Lanka
   * In the form included in the Section 09 of the Bidding document
   * In favouar The Chairman, Palmyrah Development Board
   * For an amount of Rupees one hundred and ten thousand (Rs. 110,000.00)
   *Valid up to 07th November 2011.

**Pasupathy Seevarathnam,**
**Chairman,**
**Palmyrah Development Board**

## மகாவலி நீர்த்தேக்கப் பகுதியில் கட்டடங்களை அகற்ற நடவடிக்கை

கொழும்பு, ஓக 12

மகாவலி நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு அருகில் 100 மீற்றர் தூரத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்டடங்களையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

மகாவலி நீர்த்தேக்கப்பகுதிகளுக்கு அருகில் 100 மீற்றர் தூரத்துக்குள் கட்டடங்கள் அல்லது வேறு நிர்மாணங்களை மேற்கொள்வது சட்ட விரோதமானது என சபையின் பணிப்பாளர் டி.எம்.சி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்டடங்களையும் அகற்றுவதற்கு 30 நாள்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் காலப்பகுதிக்குள் அகற்றப்படாத கட்டடங்கள்அனைத்தும் நீதிமன்ற உத்தரவுக்கமைய அகற்றப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத் துள்ளார்.

விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு அருகில் மாத்திரம் இவ்வாறான 500 கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக சபையின் பணிப்பாளர் டி.எம்.சி.திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ற)

மணிவிழா நாயகனை வாழ்த்துகின்றோம்



இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி
காலம்: 14.08.2011 பி.ப. 2 மணி
(ஞாயிற்றுக்கிழமை)
பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாகக் கருதிச் சமுகம் தரவும்.

பல்கலையில் பலநூறு பயிலுநர்கள் - நின்வழியில்
பள்ளிகளில் பல்வேறு பணிவிடைகள் நின்தயவில்
சொல்லில் அடங்காத சுடர்கொண்ட நாயகனே
புகழோடு நீடூழி வாழிய வாழியவே!

வாழ்த்துவோர்: தேவா மணிவிழாச் சபை
செந்தூரம்- கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15.06.1927 மறைவு 24.07.2010



திருமதி சிவபாக்கியம் நடராஜா

திதி: சதுர்த்தசி 12.08.2011

ஓடிப்போனதம்மா ஒருவருடம்
உங்களை மறந்ததே இல்லை
ஒரு நிமிடம்
ஆறாது தவிக்குது எங்கள் உள்ளம்
அழுது வெறுமையானது எங்கள் இல்லம்
தெய்வத்திடம் சென்ற உங்களை
என்றென்றும் நினைத்திருப்போம்.

சங்குவேலி தெற்கு, மானிப்பாய் குடும்பத்தினர்.
(6750)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## மலையகத்திலும் கிழக்கிலும் என்னவோ நடக்குது; மர்மமாய் இருக்குது...!

தவறாகச் செயற்படும் ஒருவனைப் பார்த்து என்ன மனிசனப்பா நீ? எனக் கேட்கிறோம். மனிதர்கள் என அடையாளங் காண முடியாத வேளை அவர்களை மர்மநபர்கள் என்று சுட்டுகிறோம். கடந்த காலங்களில் தெருத்தெருவாக தமிழ் இளைஞர்கள் சுடப்பட்டு எரியூட்டப்பட்ட போதும், லசந்த விக்கிரமதுங்க, டி.பி.சிவராம் எனப் பத்திரிகையாளர்கள், ரவிராஜ், மகேஸ்வரன் என அரசியல்வாதிகள் சுட்டுக் கொல்லப்பட்ட போதும் அவை மர்மநபர்களின் கைவரிசையாகவே காட்டப்பட்டது. அவர்கள் இனங் காணப்படவில்லை.

இப்போது மர்ம மனிதர்கள் பற்றி அதிகம் பேசப்படுகிறது. முன்னரும் இத்தகைய மனிதர்களின் நடமாட்டம் குறித்து வதந்திகள் வந்து மக்களை அலைக்கழித்துள்ளன. வேற்றுக் கிரக மனிதர்கள் பறக்கும் தட்டுக்களில் வந்திறங்கிச் சென்றதாக இலங்கை, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் அவ்வப்போது கதைகள் உலவின. இமாசலப் பகுதியில் பனிமனிதனின் நடமாட்டம் பற்றி படங்களுடன் செய்திகள் வெளிவந்திருந்தன. அவையெல்லாம் பழங்கதைகள்.

இப்போது இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம்கள் செறிந்துள்ள அம்பாறையிலும், மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் செறிந்து வாழும் பல பிரதேசங்களிலும் கடந்த சில தினங்களாக கிறீஸ் பூசிய மர்ம மனிதர்களின் நடமாட்டம் குறித்து அதிகளவு பேசப்படுகிறது. இப்பிரதேசங்களில் மக்கள் அச்சத்தில் உறைந்து போயுள்ளனர். வதந்திகள் கை, கால் வைத்து இறக்கை கட்டிப் பறக்கின்றன. மிரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பது போலப் பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதும் வெவ்வேறான இரு பிரதேசங்களில் எவ்வாறு ஒரே விதமான மனிதர்கள் தோற்றம் பெற்றுள்ளனர் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும், இனி இலங்கை மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழலாம் எனவும் நாட்டு மக்களுக்கும், சர்வதேசத்துக்கும் படங்காட்டும் அரசாங்கம், இந்த மர்ம நபர்களின் விடயத்தில் மௌனம் சாதிப்பது வேடிக்கையான விடயம் என்று இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சே.வேலாயுதம் கேட்பது அங்குள்ள நிலவரத்தின் பாரதூரத் தன்மையைப் புலப்படுத்துகின்றது.

மலையகத்திலும் சரி,அம்பாறையிலும் சரி பெண்களே கரிய உடையணிந்த கிறீஸ் மனிதர்களால் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். மலையகத்தைப் பொறுத்தவரை பெண்கள் தேயிலைக் கொழுந்து பறிக்கச் செல்லும் போது தேயிலைப் புதர்களுக்கிடையில் மறைந்திருந்து அவர்கள் மீது நகங்களால் கீறியும், கடித்தும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அங்க சேஷ்டைகள் புரியப்பட்டுள்ளது. 20 வயது முதல் 45 வயது வரையான தமிழ், முஸ்லிம் பெண்கள் மீதே இவை நடத்தப்பட்டுள்ளன. பதுளை, நுவரெலியா, கொட்டகலை, சஹுவத்தை பிரதேசங்களில் இரவில் மர்மமனிதர்களின் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகவும், மர்மநபர்களின் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்கள் பதுளை, லுணுகலை, பசறை வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மயங்க வைக்கும் இரசாயனங்களைப் பயன்படுத்தி உடற் கவசமணிந்த நபர்களே இப் பீதியூட்டும் செயலில் ஈடுபடுகின்றனர். நன்றாக வேவு பார்த்து ஆண்கள் இல்லாத வேளையில் இச் கைங்கரியம் அரங்கேற்றப்படுகிறது. அவர்களைப் பிடிக்க முயன்றால் நன்கு பயிற்சி பெற்றவர்கள் போல மின்னல் வேகத்தில் ஓடி மறைந்து விடுகின்றனர்.மர்ம மனிதர்கள் வருகிறார்கள் என வதந்தி பரவ, மக்கள் விழுந்தடித்துச் கொண்டு ஓட, எரியிற வீட்டில் பிடுங்கிறது இலாபம் எனப் பொருள்களை அபகரிப்பதும் அண்மை நாட்களில் இங்கு தொடர்கதையாகவுள்ளது. பிடித்துப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட மர்ம மனிதன் மனநோயாளிகளென அறிவிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதாக பசறையிலுள்ள வர்த்தகரொருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இதனால் ஆண்கள் வேலைக்குச் செல்லாமல் தமது பெண்களுக்குக் காவலர்களாக இருந்து வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. பனையாலே விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல விலைவாசி உயர்வு மலையக மக்களை வதைக்கும் நிலையில் இந்தப் பிரச்சினையும் இடியாய் இறங்கியுள்ளதாக மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கோரி வரும் நிலையில் இத்தகைய அச்சமூட்டும் தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளன. பொலிஸாரோ நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக கட்டுக்கதை என முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கின்றனர். வடக்கு, கிழக்கில் மக்கள் இராணுவதாரிகளின் கீழ் வாழ்க்கை நடத்திய சூழலை மலையகத்திலும் ஏற்படுத்துவதற்காகவே இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறுவதாக சே.வேலாயுதம் சந்தேகம் வெளியிட்டுள்ளார். இரு மாதங்களுக்கு முன்னர் காவத்தைப் பகுதியில் நடந்த கொலைச் சம்பவத்தில் நடவடிக்கை எடுக்காமையே இத்தகைய சம்பவங்கள் தொடர்வதற்கக் காரணம் எனவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அம்பாறைப் பிரதேசத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பின்தங்கிய கிராமங்களான இறக்காமம், வரிப்பத்தான்சேனை ஆகிய இடங்களிலும், வாழைச்சேனையிலும் இத்தகைய "கிறிஸ் பூதங்கள்" கைவரிசையைக் காட்டியுள்ளனர். முஸ்லிம்களின் நோன்புச் காலத்தில் இது இடம்பெறுகின்றமை முக்கியமானது. விதவைகள், கணவன் வெளிநாட்டில் உள்ளோர், கணவன்மார் இரவு வேலைக்குச் செல்வோர் ஆகியோரது வீடுகளே இவர்களால் இலக்கு வைக்கப்பட்டுள்ளன. இவ்விடங்களில் இரவு வேளை தோன்றும் மர்ம மனிதர்கள் பெண்களை அச்சுறுத்தி, அவர்கள் மீது பலாத்காரம் புரிய முயன்றுள்ளனர்.

இப்பகுதிகளில் மர்ம மனிதர்கள் தோன்றுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர்தான் புலிகளின் அச்சுறுத்தலில் இருந்து தம்மைப் பாதுகாக்கும் பொருட்டு முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகள் மீளப் பெறப்பட்டிருந்தன.இதனால் மர்மமனிதர்களை மடக்குவதற்கு ஆங்காங்கே இளைஞர்கள் கூரிய ஆயுதங்களுடன் தமது கிராமங்களைப் பாதுகாக்க முனைகின்றனர். இந்நிலையில் இறக்காமத்திலும், வரிப்பத்தான் சேனையிலும் இருவர் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட போதும் அவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர். ஒருவர் பொலிஸ் சப் இன்ஸ்பெக்கர்,மற்றையவர் மனநோயாளி என்பது இறக்காமம் பொலிஸ் அதிகாரியின் கருத்து. அதை எதிர்த்து மக்கள் பொலிஸ்நிலையம் மீது கற்களாலும், போத்தல்களாலும் தாக்குதல் நடத்தியுள்ளனர். வாழைச்சேனையிலும் இதே போல் நடந்துள்ளது.

மலையகத் தமிழ்ப் பெண்களையும் கிழக்கில் முஸ்லிம் பெண்களையும் இலக்குவைத்து நடக்கும் மர்ம மனிதர்களின் பின்னணி அந்தப் பகுதிகளிலும் வடக்கைப் போன்று பாதுகாப்புப் படையினரின் பிரசன்னம் அதிகம் தேவை உண்டென்ற நிலையை உருவாக்கும் உத்தியோ எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

'என்னவோ நடக்குது உலகத்திலே மர்மமாய் இருக்குது' என்று தமிழ்ப் படத்தில் சந்திரபாபு பாடுவது போல நமது முஸ்லிம் மற்றும் மலையக அரசியற் தலைவர்கள் பாடிக் கொண்டிருப்பார்களோ? அல்லது நிலைமையின் தீவிரத்தையும், அதன் சூட்சுமத்தையும் புரிந்து கொள்வார்களோ?

விழிச்சான் குஞ்சு.

# ஐ.தே.க. தலைமைத்துவத்தில் டிசெம்பர் வரை மாற்றமில்லை

## காமினி ஜயவிக்கிரம பெரேரா கூறுகிறார்

கொழும்பு, ஓக.12

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பொறுப்பில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாது என கட்சியின் தவிசாளர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தலைமைத்துவ சர்ச்சை தொடர்பில் நீண்ட விவாதம் நடத்தி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படும். அது கட்சியின் யாப்பு விதிகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென சிரேஷ்ட தலைவர்கள் வலியுறுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கட்சித் தலைமைப் பொறுப்புக்கு கரு ஜயசூரியவை நியமிக்க வேண்டும் என்பதில் சஜித் தரப்பினர் தீவிரம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கட்சித் தலைமைப் பொறுப்பில் மாற்றம் ஏற்படுத்த முடியும் என கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி கட்சியின் விசேட செயற்குழுக் கூட்டமொன்று நடத்தப்பட உள்ளதாகவும் இந்தக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)



மஹாபொல புலமைப்பரிசில் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு எதிரான மனுவொன்றில் கையெழுத்திட்டனர்.

# காணி உரிமை விண்ணப்பங்களை 2 மாதங்களில் கையளிக்க வேண்டும்

## காணி அபிவிருத்தி அமைச்சர்

-கொழும்பு, ஓக. 12

வடக்கில், காணிகளின் உரிமையாளர்கள் அனைவரும், பிரதேச செயலாளர் அலுவலகங்கள் ஊடாக அரசு வழங்கும் காணி உரிமை தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து, எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அரசிடம் கையளிக்க வேண்டும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்க பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ளவர்கள், வெளிநாடு சென்றவர்கள், வடக்கில் இருந்து தென் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் என அனைத்து மக்களுக்கும் வடக்கில் தமக்கு இருக்கும் காணிகள் தொடர்பில் விண்ணப்பிக்க முடியும் எனக் கூறியுள்ளார்.

விண்ணப்பப்படிவங்களை நிரப்பி பிரதேச செயலகங்களிடம் வழங்கி, தமது காணிகள் தொடர்பில் சட்டரீதியான உரிமைகளை உறுதிப்படுத்தாத எவருக்கும் வடக்கில் காணிகள் வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இருந்து வெளிநாடுகளுக்கு சென்றுள்ள இலங்கையர்கள் காணி ஆணையாளர் திணைக்களத்தின் இணையத் தளத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும். இதன் பின்னர், விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, காணி உறுதிகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# 2000 குற்றவாளிகள் தப்பியோட்டம்

மோசமான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 2000 குற்றவாளிகள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

படுகொலைகள், கொள்ளைகள், பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

காவல்துறைத் திணைக்களத்தினால் அண்மைய அறிக்கையில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் குற்றவாளிகள் அரசியல்வாதிகளின் ஒத்துழைப்புடனும் தப்பிச் சென்றுள்ளனர்.

வெளிநாடுகளில் பதுங்கியிருந்த, மோசமான குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சில குற்றவாளிகள் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளனர். மீன்பிடிப் படகுகள் மற்றும் போலிக் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

# அரசியல் தீர்வின்றி பிரச்சினை நீடித்தால் மீண்டும் இருண்ட யுகத்துக்கே நாடு செல்லும்

## அமைச்சர் ரெஜினோல்ட் கருத்து

தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்காமல் பிரச்சினை நீடிக்குமானால் மீண்டும் இருண்ட யுகத்துக்கு நாடு செல்ல நேரிடுமென சிறுபயிர் உற்பத்தி ஊக்குவிப்பு அமைச்சர் ரெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

அததெரண தமிழிணையத்தின் சகோதர ஊடக சேவையான தொலைக்காட்சி தெரணவில் கடந்த செவ்வாய் இரவு ஒளிபரப்பாகிய அரசியல் நேரடி நிகழ்ச்சியான விவாத அரங்கில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ரெஜினோல்ட் குரே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: புலிகள் இயக்கத்துக்கும் அரசுக்கும் இடையிலான யுத்தம் நிறைவுக்கு வந்துள்ள போதும் இலங்கை மீண்டும் பழைய இடத்துக்கு வந்துள்ளது.

நாட்டைப் பிளவுபடுத்த முயன்ற புலிகளின் தீவிரவாதத்தை அரசால் வெற்றி கொள்ள முடிந்த போதும் நாட்டை ஒன்று சேர்க்கும் தமிழர்களுக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதில் அரசு வெற்றி பெறவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

வரலாற்றில் தமிழ் இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்த அரசியல்வாதிகளே காரணமாக இருந்ததாகக் கூறிய அவர் தமிழர்களுக்குத் தீர்வு வழங்க கிடைத்த சந்தர்ப்பங்கள் நழுவவிடப்பட்டதாகவும் கூறினார்.

அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மாத்திமன்றி அனைத்து கட்சி பிரதிநிதிகளுடனும் கதைத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற தீர்வை எட்ட வேண்டும். இவைகள் அனைத்தும் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டு செயற்படுத்தப்படவேண்டும்.

அரசியல் தீர்வு விடயத்தில் உள்நாட்டு ரீதியாக மாத்திரம் சிந்திக்காமல் இராஜதந்திர ரீதியில் சிந்தித்து ஆபிரகாம்லிங்கன், மகாத்மா காந்தி போன்றோரை பின்பற்றி செயற்படவேண்டும் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SINGER
160
EXCELLENCE

160 ஆண்டுகளாக
நாம் தலைமுறைகளை
இணைக்கிறோம்



இலங்கையரின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ள அதிநவீன தொழில்நுட்பம்

உலகின் முதலாவது தையல் மெஷின் தொடக்கம் அதிநவீன LED தொலைக்காட்சி வரை, தரமுயர்ந்த பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதில் 160 ஆண்டு காலமாக முன்னணி வகிக்கும் சிங்கர் நிறுவனம். புதிய உற்பத்திப் பொருள்கள் மற்றும் சேவைகள் மூலம் அடுத்த 160 ஆண்டுகளிலும் இதே முன்னணி நிலையைத் தொடர்ந்து பேணவிருக்கின்றது. உங்கள் திருப்தியே எங்கள் முன்னேற்றத்திற்குக் காரணமாகும். வருங்காலத்தைப் புதிய நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் நாம், எமது முன்னேற்றத்திற்கு உந்துசக்தியாக அமைந்த எமது முன்னாள் ஊழியர்கள், தற்போதய ஊழியர்கள், தலைவர்கள், பணிப்பாளர்கள், வழங்குநர்கள், நிறுவனப் பங்காளிகள், பங்குதாரர்கள், வங்கியாளர்கள் ஆகியோருக்கும், அதைவிட முக்கியமாக எமது வாடிக்கையாளர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். தரச்சிறப்பிற்கான எமது அர்ப்பணிப்பை இன்று மீள வலியுறுத்தும் நாம், அடுத்த தலைமுறையினருக்கும் உயர்ந்த தரச்சிறப்பையும் வசதிகளையும் வழங்க உறுதிபூணுகிறோம்.

SINGER®
TRUSTED EXCELLENCE

Q&E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வருவேன்

## அமைச்சர் ரிஷாத் பதியுதீன்

மன்னார், ஒக.12

மன்னார் மாவட்டம் அதிகளவான மீன்பிடி தொழிலாளர்களையும் அதிகளவான மீன் வளங்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. இந்த நிலையில் அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மன்னாருக்கான பயணமானது மன்னார் மாவட்டத்துக்கு இன்னும் பல அபிவிருத்திகளையும் நீண்டகாலமாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்ற வேலைத்திட்டங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் ஏற்ற நாளாக அமைந்துள்ளதாக வர்த்தகத்துறை மற்றும் கைத்தொழில்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட கடற்றொழில் அமைப்பின் மாவட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்று கடந்த 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மன்னார் பள்ளிமுனை லூசியா மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

கடந்த 30 வருட யுத்தத்தால் நொந்துபோன மக்களாக மன்னார் மாவட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். எத்தனையோ சகோதரர்கள் இந்தியாவில் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அதே போல புத்தளத்திலும் எமது மாவட்ட மக்கள் அகதிகளாக சொந்த இடத்தில் மீளக் குடியமர முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றபோதும் மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக உரிய அமைச்சர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். அதேபோன்றுதான் மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

இந்த மாவட்டத்தில் இடம்பெறுகின்ற அபிவிருத்திக்குத் தடையாக, மறைமுகமாக இந்த மாவட்டத்தில் குழு ஒன்று செயற்பட்டு வருகின்றது.

கடந்த 30வருடங்களாக இனத்தாலும் மதத்தாலும் உடல் ரீதியாகவும் பிரிந்திருந்ததால் எத்தனையோ விதமான துன்பங்களை அனுபவித்துள்ளதாகவும் அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (எ-601)

# மன்னார் மீனவர் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல்



மன்னார்,ஒக.12

மன்னார் மாவட்ட கடற்றொழில் அமைப்பின் மாவட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மன்னார் பள்ளிமுனை புனித லூசியா ம.வி பாடசாலையில் இடம்பெற்றது.

இதன்போது கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன, கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிஷாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், மன்னார் மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன் உட்பட அரச திணைக்களங்களைச் சேர்ந்த பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட கடற்றொழில் அமைப்பின் மாவட்ட சம்மேளன உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

மேலும் மன்னார் பள்ளிமுனைக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்நோக்கும் தொழில் பிரச்சினைகளான பாஸ் நடைமுறை, இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பாக அமைச்சர்களினதும் , நாடாளுமன்ற உறுப்பினரதும் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இந்த நிலையில் இந்தப் பிரச்சினைகளுக்கு உடன் நடவடிக்கை எடுப்பதாக கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

(எ-601)

## நூல் வெளியீடு

மன்னார், ஒக.12

மன்னார் ஜே.ஆர்.மயூரன் எழுதிய ''நிழலில்லா தடயங்கள்'' கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்னார் சமூகத்தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநர் அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் நகர சபைத் தலைவர் ச.ஞானப்பிரகாசம் கலந்து கொள்வாரென அறிவிக்கப்பட்டுள்ளது. (க-601)



அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டியில் கிளி/ வேரவில் இந்து மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி கு.சக்தீனா கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். இவருக்கு பாடசாலை அதிபர் திருமதி ப.சோதிலிங்கம் பாராட்டி பரிசில் வழங்குவதையும் அருகில் பிரதி அதிபர் திருமதி கி.மதுரநாயகம் ஆகியோர் உள்ளனர். (எ-127)

## கானகன் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி, ஒக.12

கிளிநொச்சி உருத்திரபுரீஸ்வரம் கானகன் மழலைகள் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி கடந்த மாதம் 25 ஆம் திகதி பரந்தன் அ.த.க.பாடசாலை அதிபரும், மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியுமான திருமதி இ.சூரியகுமாரி தலைமையில் நடைபெற்றது. (எ)

## மழைநீர் ஓடக்கூடிய முறையில் பாலத்தைப் புனரமைத்துத் தருக

கிளிநொச்சி, ஒக.12

உருத்திரபுரம் சிவன் வீதி கானகன் முன்பள்ளிக்கு முன்பாவுள்ள பாலத்தின்கீழ் சிறிய குழாய் வைத்துப் புனரமைக்கப்பட்டு வருவதால் மழைக் காலங்களில் நீர் ஓட முடியாமல் தேங்கக் கூடிய அபாயம் ஏற்படும் என அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மழைக் காலங்களில் மேற்படி பாலத்தை மேவி மழை முறிப்புக்குளம், கந்தன்குளம், உருத்திரபுரம் குளம், 8 ஆம் வாய்க்கால் போன்றவற்றின் மூலம் நீர் பெருமளவாகப் பாய்ந்து செல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் மழைக் காலங்களில் இந்த வீதியூடான போக்குவரத்தும் பாதிக்கப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, இந்தப் பாலத்தின் கீழ் பெரிய குழாய் வைத்து நீர் ஓடக்கூடிய முறையில் அமைத்துத் தருமாறு மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-426)

# சாதனையாளர் விருது விழா

கிளிநொச்சி, ஒக.12

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் இருந்து வடக்கு மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்குச் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சியில் கடந்த 3 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த விழாவில் 96 மாணவர்கள் விருதுகளைப் பெற்றனர். தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப்போட்டி, மெய்வல்லுநர் போட்டி, கூட்டுறவு தின விழாப் போட்டி உட்பட பல்வேறு போட்டிகளில். வெற்றி பெற்ற மாணவர்கள் இந்த விழாவில் விருதைப் பெற்றுள்ளனர்.

அத்துடன், கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைத்துறையில் தோற்றி தேசிய மட்டத்தில் 15 ஆம் இடத்தைப் பெற்ற மாணவிக்கும் விருது வழங்கப்பட்டது.

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு விருது வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

விருந்தினர்களாகக் கலந்து கொண்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம், கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.கௌரிதாசன், ஓய்வுபெற்ற ஆங்கிலபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.தனராஜா உள்ளிட்ட விருந்தினர்கள் மாணவர்களுக்கான விருதுகளை வழங்கிக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் மாணவர்களது கலை நிகழ்வுகள் சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெற்றன. (எ-405)

# நீரின்றி அலையும் கால்நடைகள்

பூநகரி, ஒக.12

பூநகரி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சில கிராமங்களில் காணப்படும் குட்டைகளில் நீர்வற்றிக் காணப்படுவதால் கால்நடைகள் குடிதண்ணீருக்காக அலைந்து திரிவதாகக் கூறப்படுகின்றது.

செல்லையா தீவு, செட்டியகுறிச்சி, கணுக்காய்த் தீவு, ஞானிமடம், சித்தங்குறிச்சி, பரமன் கிராய் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பட்டியாக வளர்க்கப்படும் கால்நடைகளும் ஏனைய கால்நடைகளும் இவ்வாறு நீர் தேடி அலைந்து திரிகின்றன.

மேலும் போதிய நீர் அருந்தாததால் கால்நடைகள் உடல் மெலிந்து கீணப்படுவதாகவும் நோய்களின் தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது கால்நடை வளர்ப்பதைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

மேலும் கால்நடைகள் மூலம் கிடைக்கும் வருவாய்களிலிருந்து தமது வாழ்க்கையை நகர்த்தி வருகின்றனர். தற்போது கால்நடைகள் குடிதண்ணீர் இன்றி அழிவடையும் நிலையில் காணப்படுகின்றமை இவர்களுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே மழையின்றி அனைத்தும் வரண்டுபோயுள்ள நிலையில் நீர்க்குட்டைகளை அதிகளவு நீர் கொள்ளக் கூடியவாறு புனரமைத்து நீர்ப்பற்றாக் குறைக்குத் தீர்வு காணுமாறு கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுக்கின்றனர். (க-406)

# வாகன இலக்கத் தகடுகளை கிளிநொச்சி செயலகத்தில் பெறவும்

கிளிநொச்சி,ஒக.12


கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் மோட்டார் போக்குவரத்துக் கிளையில் விண்ணப்பித்தவர்களுக்கான மேலும் ஒரு தொகுதி வாகன இலக்கத் தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் உரியவர்கள் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| HF-2797, | JT-1167, | HN-6606, | JR-6263, | QF-4352, | RA-1196, | GP-3779, |
| JR-2282, | GO-8902, | PE-6468, | HX-8843, | KF-4062, | RA-3040, | GV-0213, |
| ND-2266, | HW-1568, | YC-9108, | QH-5146, | QG-7746, | JE-2185, | GX-5252, |
| HU-2969, | GM-1664, | QS-4056, | QN-0131, | JL-6728, | UM-2232 | LB-7561, |
| GS-0703, | JC-2996, | HV-0808, | LD-8462, | LC-6586, | GD- 5218 | HF-0682, |
| JI-8224, | QE-8995, | JH-5968, | QA-4001, | GO-6303, | JG- 0435 | HC-4646, |
| QF-1441, | QR-6345, | QU-1243, | QA-5688, | HZ-2287, | JH-3008 | GA-1461, |
| HM-1365, | HR-3276, | QA-0966, | QE-0806, | GS-6765, | GE-9263, | JP-3359, |
| GS-5266, | JV-5390, | QF-0964, | QB-8656, | GM-5400, | MO-1153, | JK-4873, |
| ND-1873, | QF-4120, | QG-0473, | JU-5132, | HJ-3049, | GL-6193, | LG-4622 |
| NA-0087, | QK-1504, | QU-1662, | GR-0572, | JW-4537, | NA-3492 | |
| QD-8215, | QJ-5340, | HG-1320, | QG-7319, | | | |

(தொடரும்)(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்துபோகும் நிலையில் .COM




1980 ஆம் ஆண்டுகளில் அறிமுகமான இணையத்தள பெயர்களை தனியாக அடையாளப்படுத்த அவற்றின் இணைய முகவரியின் இறுதியில் .com அல்லது .net மற்றும் .org என்ற மூன்று பெரும்பிரிவுகளாக வகைப்படுத்தி இருந்தனர். அதன்பின்னர் 2000 ஆண்டின் தொடக்கத்தில் இணையத்தளங்களின் எண்ணிக்கை அசுர வளர்ச்சியடைந்ததால், அவற்றின் பின்னொட்டு (Suffix) அடையாளங்களில் மேலும் சில வகைகளை அறிமுகப்படுத்தினர். குறிப்பாக .cc, .co போன்றவற்றைச் சொல்லலாம்.

மென்மேலும் வளர்ச்சியடைந்த இணையத்தில், முகவரிகளில் நாடுகளின் பெயர்களையும் .in, .us, .de மற்றும் .info, .biz என ஏழுவகைகளுடன் மொத்தம் முன்னூறு வகைப்படுத்தி, இணைய தேடல்வசதி எளிமையாக்கப்பட்டது. உலகின் அனேக நாடுகள் தனித்தனி வழங்கிகளில் இணைய சேவை யைச் செயற்படுத்தத் தொடங்கிய பின்னர் மேலும் வகைப்படுத்த வேண்டிய தேவை எழுந்ததால் Internet Corporation for Assigned Names and Numbers (ICANN) என்ற அமைப்பு மேலும் சில புதிய வகைப் பிரிவுகளை அறிமுகம் செய்ய வேண்டி உருவாக்கப்பட்டது.

ஏற்கனவே புழக்கத்திலுள்ள 300 இற்கும் மேற்பட்ட பின்னொட்டு (Suffix) களில் 180இற்கும் மேற்பட்டவை நாடுகளின் பெயரால் அறியப்படுகிறது. அதையே சர்வதேச நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்களின் பெயர் (Brand) மற்றும் நிறுவனப் பெயரால் வகைப்படுத்துவதை அங்கீகரிக்க வேண்டி இன்று ICANN அமைப்பு சிங்கப்பூரில் ஆலோசனை நடத்துகிறது.

Posted in தொழில்நுட்பம்

# ஹொலிவூட் தரத்தில் வீடியோவைத் தரவிறக்க இலவச மென்பொருள்

வீடியோ எடிட்டிங் செய்யும் வாசகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான தகவல் வெளியாகியுள்ளது. எமது வீடியோவை எடிட்டிங் செய்து ஹொலிவுட் தரத்தில் காட்ட ஒரு இலவச மென்பொருள் வந்துள்ளது. வீடியோ எடிட்டிங் செய்ய பல மென்பொருள்கள் வந்தாலும்கூட சில மென்பொருள்கள் எம்மை அறியாமலே ஈர்த்துச் சென்று விடும்.

அந்த வகையில் இன்று நாம் பார்க்க இருக்கும் வீடியோ எடிட்டிங் இலவச மென்பொருள் பயன்படுத்துவதற்கு மட்டுமல்ல வழங்கிவரும் அதிகளவான சேவையிலும் எமக்கு பிரமிப்பை ஏற்படுத்துகிறது.

மென்பொருள் தரவிறக்க முகவரி : http://www.lightworksbeta.com. இந்தத் தளத்துக்குச் சென்று Download now என்கிற பொத்தானை சொடுக்கி இந்த வீடியோ எடிட்டிங் மென்பொருளை இலவசமாகத் தரவிறக்கலாம்.

ஏனைய வீடியோ எடிட்டிங் மென்பொருள்களை விடவும் பத்து மடங்கு சேவையை நாம் இந்த மென்பொருள் மூலம் பெற முடியும்.

ஒரு முறை நாம் பயன்படுத்திவிட்டால் எம்மை தொடர்ந்து ஈர்க்கிறது.

வீடியோ எடிட்டிங் செய்யத் தெரியாது என்று சொல்பவர்களுக்குக் கூட எப்படி வீடியோ எடிட்டிங் செய்யலாம் என்பதை அழகாகச் சொல்லியும் கொடுக்கிறது.

வீடியோ எடிட்டிங் செய்ய விரும்பும் அணைவருக்கும் இந்தப்பதிவு பயனுள்ளதாக இருக்கும்.

# கூகுளின் 3D Destop Technology ஸ்பெஷல் வீடியோ!

கூகுளின் அடுத்த தலைமுறைக்கான 3டி டெஸ்க்டொப் மற்றும் இதைப் பற்றிய சிறப்பு வீடியோவைப் பற்றித்தான் கூகுளின் அதிவேக வளர்ச்சிக்கு முன் வேறுயாரும் அருகில் கூட நிற்க முடியாது என்று மறுபடியும் நிரூபித்து இருக்கிறது. இதன் வேகம் மட்டுமல்ல விவேகமும் தான் இதன் அசுர வளர்ச்சிக்கு காரணம் என்று கூறினாலும் அது மிகையாகாது. கூகுளின் அடுத்தக்கட்ட வளர்ச்சி தான் இந்த கூகுள் டெஸ்க்டாப் 3டி தொழில்நுட்ப விண்டோஸ் மட்டுமல்ல மேக் ஒப்பரேட்டிங் சிஸ்டத்திலும் இதுவரை இல்லாதவாறு அனைத்து டெஸ்க்டொப் அப்ளிகேசனும் 3டி -யில் காட்டி வியக்க வைக்கின்றனர்.

அதுமட்டுமின்றி டெஸ்க்டொப்பில் அப்ளிக்கேசன் ஐகொனை வைத்து மிகப்பெரிய விளையாட்டை நம் கண்முன் காட்டி அசத்தியுள்ளனர். டெஸ்க்டொப்பில் உள்ள ஐகொனை சுவரில் மாற்றி தொங்கவிடுவது போல் தொங்க விடலாம். அதோடு படங்களைப் பார்க்கவும் 3டி யில் காட்டி அசத்துகின்றனர். இது கூகிள் இற்கு சொந்தமான ஒன்று அல்ல. இது அதுமாதிரியான ஒன்றை பயன்படுத்திப் பார்த்தால் ஒரு வித்தியாசமும் ஏற்படமாட்டாது.



# பட்டியல் போட உதவும் இணையம்

பட்டியல் போடுவதில் உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா? அப்படியென்றால் பட்டியல் போடுங்கள், பகிர்ந்து கொள்ளுங்கள் என்று அழைப்பு விடுக்கிறது லிஸ்ட்கீக் இணையத்தளம்.

லிஸ்ட்கீக் மூலமாக யாரும் தாம் விரும்பும் பட்டியலை உருவாக்கி அதனை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளலாம். மற்றவர்களின் பட்டியலை பார்வையிட்டு கருத்து தெரிவிக்கலாம்.

பட்டியல் என்றால் எது பற்றி வேண்டுமானாலும் இருக்கலாம். நீங்கள் ரசித்து பார்த்த படங்கள், உங்களுக்குப் பிடித்தமான தலைவர்கள், நீங்கள் சிறந்தது என கருதும் இடங்கள் என எப்படி வேண்டுமானாலும் பட்டியல் அமையலாம்.

இவற்றைத்தான் பட்டியலிட வேண்டும், இப்படி தான் பட்டியலிட வேண்டும் என்று எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் உறுப்பினர்கள் தங்கள் மனதில் உள்ள எந்த விடயம் பற்றியும் பட்டியலை உருவாக்கிக் கொள்ளலாம்.

பொதுவாக பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் மிகச்சிறந்த பட்டியலை அவ்வப்போது வெளியிடுவது உண்டு. இவற்றில் டொப் -10 பட்டியல் மிகவும் பிரபலம் வாய்ந்தது.

இந்த பட்டியல்கள் எப்போதுமே சரியாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. பல நேரங்களில் இவை பாரபட்சம் மிக்கவையாக இருப்பதாகக் கருத்தப்படலாம். எல்லா பட்டியல்களிலுமே விடுபட்டவர்கள் பற்றிய மனக்குறையும் ஏற்படலாம். சில பட்டியல்கள் சர்ச்சையையும் உண்டாக்கலாம்.

இந்த பட்டியல்கள் பற்றி புலம்புவதை விட எமக்கான பட்டியலை நாமே உருவாக்கிக் கொண்டால் என்ன? அதை தான் லிஸ்ட் கீக் மிக அழகாகச் செய்கிறது.

இந்தத் தளத்தை பயன்படுத்துபவர்கள் தாம் விரும்பும் பட்டியலை இங்கே சமர்ப்பிக்கலாம். அதற்கு அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம் இந்தத் தளத்தில் உறுப்பினராக வேண்டியது மட்டுமே. உறுப்பினரான பின் தங்களுக்கான பட்டியலை தயார் செய்து சமர்ப்பிக்கலாம்.

மனதைக் கவர்ந்த பாடல்கள், இனிமையான ராகங்கள், சிறந்த பேச்சாளர்கள், பயன்மிகு கண்டு பிடிப்புகள் என எப்படி வேண்டுமானாலும் உறுப்பினர்களின் பட்டியல் அமையலாம். இந்தப் பட்டியலில் [illegible] விடயங்கள் பற்றியெல்லாம் கூட பகிர்ந்து கொள்ளலாம்.

பட்டியலை உருவாக்கி சமர்பிததும் அடுத்ததாகச் செய்ய வேண்டியது என்னவென்று பார்க்கலாம். பட்டியலை பேஸ்புக் மற்றும் டிவிட்டர் வழியே நட்பு வட்டாரத்தில் பகிர்ந்து கொள்ளலாம். அதைப் பார்த்து விட்டு நண்பர்கள் அவர்கள் கருத்தை தெரிவிப்பார்கள். அதே போல இந்தத் தளத்தில் உள்ள சக உறுப்பினர்கள் பட்டியலைப் பார்த்து கருத்துத் தெரிவிப்பார்கள். நீங்களும் கூட ஏனைய உறுப்பினர்களின் பட்டியலை பார்வையிடலாம், கருத்துத் தெரிவிக்கலாம். உறுப்பினர்களின் பட்டியலைப் பார்த்து நீங்களும் அதே போல ஒரு புதிய பட்டியல் தயாரிக்கலாம் அல்லது எதிர் பட்டியல் போடலாம்.

உறுப்பினர்கள் பட்டியலில் பகிரும் விடயங்கள் பல நேரங்களில் புதிய புரிதலை ஏற்படுத்தலாம். நாமும் இப்படி பட்டியல் போடலாமே என யோசிக்க வைக்கலாம். புதிய உறுப்பினர்களின் பட்டியலைப் பார்த்து புதுப்புது விடயங்களாகத் தெரிந்து கொள்ளலாம். அந்த அளவுக்கு உறுப்பினர்கள் விதவிதமான பட்டியல்களை உருவாக்கி வைத்துள்ளனர். உறுப்பினர்கள் பட்டியலும் பட்டியலின் பட்டியலும் தனித்தனியே இடம்பெற்றுள்ளன. இவை தவிர பட்டியலை தேடிப்பார்க்கும் வசதியும் இருக்கிறது.

பேஸ்புக் மற்றும் டிவிட்டரில் இருப்பது போல சக உறுப்பினர்களை பின்தொடரும் வசதியும் உண்டு. நீங்களும் மற்றவர்களால் பின்தொடரப் படலாம். பட்டியல் சார்ந்த நட்புறவை வளர்த்து கொள்ள இந்த தளம் உதவும். **http://listgeeks.com/**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்தில் 'மர்ம மனிதர்'கள் நடமாட்டம்; அரசு தொடர்ந்து மௌனம் சாதிப்பது ஏன்?

**ஊவா மாகாணசபை உறுப்பினர் கேள்வி**

பதுளை, ஓக.12

மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ள நிலையில் இந்த விடயம் குறித்து அரசு மௌனம் சாதிப்பது ஏன்? இது அனைவருக்கும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஊவா மாகாண சபை உறுப்பினர் கே. வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த சில நாள்களாக நாட்டின் பல பகுதிகளில் மர்ம மனிதர்களின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன. நகர்ப்புறங்களை விட தோட்டப் பகுதிகளில் இவர்களின் சேஷ்டைகள் அதிகமாகக் காணப்படுகின்றமை வேதனைக்குரியது. குறிப்பாக மலையக மக்கள் கூடுதலாக செறிந்து வாழும் பதுளை, நுவரெலியா, கொட்டகலை, மாத்தளை, கஹவத்தையில் இந்த மர்ம மனிதர்கள் இரவு நேரத்தில் உலாவுவதோடு சில பகுதிகளில் பட்டப் பகலில் தோட்டப்புற பெண்களையே கூடுதலாக அச்சுறுத்துகின்றனர்.

அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றத்தினால் வாடித் தவிக்கும் மலையக மக்களுக்கு இம்மர்ம மனிதர்கள் பிரச்சினை மற்றுமொரு தலையிடியாக இருக்கிறது.

பெண் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல தயங்குவதோடு ஆண்களும் வேலைக்குச் செல்லாமல் பெண்களின் காவலர்களாக வீட்டிலேயே தங்கியுள்ளனர். நாடளாவிய ரீதியில் ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகள் பரீட்சைக்குச் செல்ல தயங்குவதோடு மேலதிக வகுப்புகளுக்குச் சென்று கற்பதற்கும் தயக்கம் காட்டுகின்றனர். இதனால் மலையகத்தின் ஒட்டுமொத்த இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் வெளியில் வேலைக்குச் சென்ற பின்னர் மர்ம மனிதர்கள் தோட்டப்புற பகுதிகளில் ஊடுருவி சந்தர்ப்பம் வரும் வரை வேவுபார்த்த பின்னரே தாக்குவதற்கு தயாராகுவதாகவும் மயங்க வைக்கும் இரசாயனப்பொருள்கள், உடல் கவசங்களைக் கொண்டு மக்களை பீதியடையச் செய்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த மர்ம மனிதர்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பதுளை, பசறை, லுணுகலை ஆகிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களை மடக்கிப் பிடிக்க முனைகின்ற வேளையில் மின்னல் வேகத்தில் தப்பிச் செல்வது பயிற்சி பெற்ற ஒரு குழுவினரைப் போன்றே காணப்படுவதாகவும் அவ்வாறு பொது மக்களால் பிடிக்கப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தோட்ட நிர்வாகங்களும் மலையக தோட்டப்பகுதிகளில் அத்துமீறி நுழையும் சந்தேக நபர்களை விசாரித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டதாகவும் இனி இலங்கை மக்கள் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழலாமெனவும் நாட்டு மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் படம் காட்டும் அரசு இந்த மர்ம மனிதர்கள் விடயத்தில் மௌனம் சாதிப்பது வேடிக்கையான விடயமாகும் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-38)

## போதைப்பொருள் விற்பனை: 32 பேர் கைது

கண்டி, ஓக.12

எசல பெரஹெர காலப் பகுதியில் கண்டி நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 32 பேர் சட்டவிரோத போதைப் பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கலால் திணைக்களம் தெரிவிக்கிறது.

கண்டி நகர் மற்றும் நகரை அண்மித்த பகுதிகளில் போதைப் பொருள் தொடர்பான சுற்றிவளைப்புகள் தீவிரப்படுத்தப்படவுள்ளன.

சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கலால் அத்தியட்சகர் பிரபாத் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

கண்டி நகரில் போதைப் பொருள் விற்பனை செய்கின்றவர்கள் குறித்து தகவல்களை வழங்குமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ச)


## மர்ம மனிதனை தேடிச் சென்றவர் மரணம்

கொழும்பு, ஓக.12

மர்ம மனிதனைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த ஒருவர் பன்றி பிடிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த மின் வேலியில் சிக்குண்டு நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தவுலகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தவுலகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெலம்பொடை கிராமத்தில் மர்ம மனிதர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படும் நிலையில் இரவு வேளைகளில் பிரதேச இளைஞர்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)



திருகோணமலை நகரசுத்தி தொழிலாளர்கள் நகராட்சி மன்றத்துக்கெதிராக நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நீண்ட காலமாகத் தற்காலிக அடிப்படையில் வேலை செய்யும் தங்களை நிரந்தரமாக்கவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்கள் தெரிவித்தனர்.

## கால்நடை வளர்ப்பில் நாடு தன்னிறைவு பெறும்

**அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கூறுகிறார்**

கண்டி, ஓக.12

இலங்கையின் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றுக்கு புத்துயிர் அளித்து இவற்றில் நாடு 2016 ஆம் ஆண்டளவில் தன்னிறைவு அடைவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கால்நடை வள சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

குண்டசாலை, கரந்தகொல்ல விவசாயப் பாடசாலையில் டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறிய தாவது:-

பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகள் இலங்கையில் நீண்டகாலமாக முதன்மை பெற்று விளங்குகின்றன. இவற்றை அபிவிருத்தி செய்வதற்கு கால்நடை வளம் மற்றும் மனித வளம் என்பவற்றை ஒன்றிணைத்து அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளோம்.

கால்நடை வைத்தியம் என்பது ஏனைய துறைகளை விட வித்தியாசமானது. அதேவேளை பால் உற்பத்தி விவசாயத்துறையில் மிக முக்கியமானதாகும். ஏனெனில் ஆரம்ப காலம் முதல் நம் நாட்டின் உயிர் நாடியாக இத்துறை விளங்கி வருகின்றது.

அத்துடன் உயிரியல், மருத்துவம் முதலான இருதுறைகளையும் ஒன்றிணைத்ததாக இத்துறை உள்ளது. இந்த இரு துறைகளிலும் பேரார்வம் கொண்டவர்களாலேயே இதனை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும்- என்றார்.

## வைத்தியசாலையில் சத்துணவுத் திட்டம்

நாவிதன்வெளி, ஓக.12

கிழக்கில் முதன் முதலாக சத்துணவு வழங்கும் செயற்றிட்டம் நிந்தவூர் அரச ஆயுள்வேத வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

ஆயுள்வேத மூலிகைகளின் மூலம் தயாரிக்கப்படும் உணவே இதில் வழங்கப்படும் என வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் நக்பர் தெரிவித்தார்.

இதையடுத்து ஏனைய வைத்தியசாலைகளுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சூழலில் கிடைக்கும் சத்து மிகுந்த தாவரங்களைப் பயன்படுத்தி உணவுகளைத் தயாரிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## ஓட்டமாவடி பிரதேச பதற்ற நிலை தணித்து தற்போது பூரண அமைதி

**பொலிஸ் பேச்சாளர் கூறுகிறார்**

மட்டக்களப்பு, ஓக.12

ஓட்டமாவடிப் பிரதேசத்தில் நிலவிய பதற்ற நிலை தற்போது தணிந்து நிலைமை தற்போது கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு பொலிஸார் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

இதேவேளை, ஓட்டமாவடிப் பிரதேசத்தில் இராணுவத்தினரும் பாதுகாப்புக்கடமையில்ஈடுபட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாழைச்சேனைப் பிரதேசத்தில் பெண்ணொருவரை தாக்கிய நபர் ஒருவரை பொலிஸார் விடுவித்துவிட்டதாக வதந்தி பரவியதையடுத்து ஓட்டமாவடி பிரதேசத்தில் பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஏற்பட்ட மோதலைஅடுத்து பதற்ற நிலை ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தோட்டங்களில் அதிரடிப்படையினர்; பின்னணி பற்றிச் சிந்திக்கவேண்டும்

கொழும்பு, ஓக12

மலையகப் பெருந்தோட்டங்களில் தோன்றியுள்ள அச்சத்தைக் காரணம் காட்டி தோட்டங்களில் விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனதொழிற் சங்கவாதி ஒருவர் கூறியிருப்பது விளையாட்டுத்தனமான தாகத் தோன்றுகின்றது - என்று இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கப் பிரமுகர் லெட்சுமணன் பாரிதாசன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தற்போது தோட்டப் பகுதிகளில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் பற்றி வதந்திகள்தான் பரவுகின்றனவே தவிர இது இன்னும் முற்றாக உறுதி செய்யப்படவில்லை.

விளக்கமில்லாத குழப்பத்தில் மக்கள்தான் தடுமாறுகிறார்கள் என்றால் அவர்களுக்கு விளக்கமளிக்கவேண்டிய அல்லது அவர்களைக் காப்பாற்றவேண்டிய நாம் தடுமாறிவிடக்கூடாது.

இந்த அற்பமான விடயத்தை இதுவரை யாருமே விளங்கிக் கொள்ளாத நிலையில் இதனைத் தடுப்பதற்கு தோட்டங்களுக்கு அதிரடிப்படையினரை அழைப்பதாகக் கூறுவது பல்வேறு சந்தேகங்களை உருவாக்குகின்றது.

தற்போது மலையகத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஒவ்வொன்றும் கிட்டத்தட்ட 40, 50 தோட்டங்களை உள்ளடக்கியுள்ளன. எந்த லயத்தில் எந்த மூலையில் சட்ட விரோத மதுபானம் விற்கப்படுகிறது என்ற தகவல்கள் பொலிஸாருக்கு துல்லியமாகத் தெரியும் நிலை உள்ளது.

இந்த நிலையில் ஊர்ஜிதம் செய்யப்படாத மர்ம மனிதனைப் பிடிப்பதற்கு அதிரடிப்படையை அனுப்புவது தவறானதாகும்.

மறைமுகமாக, தொழிலாளர்களை இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையாக இது அமைந்துவிட்டால் கிறீஸ் பேயை விடவும் ஆபத்தான நிலைமை தொழிலாளர்களுக்கு ஏற்பட்டாலும் வியப்பில்லை.

எனவே, இந்தவிடயம் தொடர்பில் தொழிலாளர்கள் மிகுந்த விழிப்புடன் செயற்படவேண்டும் - எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:**
தொழில் சூழ்நிலை ஆறுதல், சந்தோஷம் தரலாம். குடும்ப உறுப்பினர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். உடன் பிறப்புக்கள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியக் குறைவுகளுக்கு ஆள்படலாம். பல நாள்களாக தள்ளிப்போட்டு வந்த காரியத்தை, இன்று நண்பர்கள் உதவியுடன் முடிக்க முற்படுவீர்கள்.



**இடபம்:**
எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர்கள் உதவி கேட்டு தொந்தரவு கொடுக்கலாம். எங்காவது வெளியில் புறப்படும் நேரத்தில், யாராவது வந்து தமது பிரச்சினைகளைச் சொல்லி வெறுப்பேற்றலாம். மாற்று இனத்தவர்கள் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி இருப்பது நல்லது. கடுமையாக முயற்சித்தும், சில காரியங்கள் தடைப்படலாம்.



**மிதுனம்:**
எண்ணக் கனவுகள் இனிதே நிறைவேறும் நாள். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். நண்பர்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். வெளிவட்டாரத் தொடர்புகளை அதிகரிப்பீர்கள். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காகவே சில செலவுகளைச் செய்வீர்கள். ஆறுதலான நாள்.



**கடகம்:**
பெரிய மனிதர்களின் பாராட்டுக்களைப் பெறலாம். அலைச்சல் இல்லாமல், இருந்த இடத்தில் இருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சிறு பணவரவுகளைப் பெறலாம். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும்.



**சிங்கம்:**
சில முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். உறவினர்கள் விடயங்களில் தலையிடாமல் ஒதுங்கிக் கொள்வீர்கள். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. பிள்ளைகள் வழியில் சிறு வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆட்படலாம்.



**கன்னி:**
வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்க, கணிசமான பணத்தைச் செலவிடலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்காமல், அனைத்தையும் நீங்களே செய்ய முற்படுவீர்கள். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணிபுரியலாம். உங்களின் கோபத்தை தூண்டும் வகையில், சிலர் நடந்து கொள்ளலாம். அலைச்சல் உண்டு.



**துலாம்:**
புதிய அனுபவங்களைப் பெறலாம். உறவினர்களுடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். மாமன், மைத்துனர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்கள் மூலம் பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் ஆதாயம் பெற நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். பலர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் பங்கேற்கலாம்.



**விருச்சிகம்:**
வரவுகளை எதிர்பார்த்து சில செலவுகளைச் செய்வீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற, துடிப்போடு செயற்படுவீர்கள். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக வராத உறவினர் ஒருவர், உங்களின் வீட்டிற்கு வரலாம். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சோம்பல் கூடும்.



**தனுசு:**
எதிலும் பொறுப்பு, அக்கறையுடன் செயற்படுவீர்கள். மற்றவர்கள் மீதுள்ள கோபத்தை சிலர் உங்கள் மீது காட்டலாம். நாளை வரும் என நினைத்த பணவரவு இன்றே வரலாம். தேக ஆரோக்கிய விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். நெருங்கிய நண்பர் ஒருவருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். ஆபத்தான பொருள்களை கவனமாகக் கையாள வேண்டும்.



**மகரம்:**
மதிப்பு, மரியாதை பாதிக்கப்படலாம். சக ஊழியர்களின் போட்டி, பொறாமைகளுக்கு ஆள்படலாம். உத்தியோத்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. கடும் முயற்சிக்குப் பின்னர் காரியம் ஒன்று முடிவுக்கு வரலாம். பிரியமான ஒருவரைப் பிரிய நேரிடலாம். குடும்பத்தினருடன் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.



**கும்பம்:**
ஆரம்பித்த காரியங்கள் துரிதமாக நடக்கும் நாள். சக ஊழியர்களால் ஏற்பட்ட தொந்தரவுகள் குறையும். இனிமையான அனுபவங்களைச் சந்திக்கலாம். வீட்டில் சுபகாரிய விடயங்களுக்கு அடித்தளம் அமைப்பீர்கள். நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கும். பழைய பொருள்களை மாற்றி, புதிய பொருள்கள் வாங்குவீர்கள்.



**மீனம்:**
வேடிக்கையாகச் செய்த சில காரியங்கள் கூட, அனுகூலமாக முடியலாம். சிலரிடம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். காத்திருக்க நேரிட்டாலும், சில வேலைகளை கச்சிதமாக முடிப்பீர்கள். விருந்தினர் வருகையால், வழக்கமான உங்களின் சில வேலைகளை மாற்றி அமைப்பீர்கள். கடன் பாக்கி ஒன்றை கண்டிப்புடன் கேட்டு வாங்குவீர்கள். நல்லது நடக்கலாம்.

# சமய நிறுவன ஊர் ஊராக அறப் பணி விஸ்தரிக்க

**யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் திகதிகளில் யாழ்ப்பாணம் நீராவியடி நஜவலர் ஆ இலங்கை சைவ மாநாட்டில் சிறப்புரையாற்ற தமி சரவணன் வருகை தந்திருந்தார். சென்னை விவேகானந்தாக் கல்லூரியில் தற்போது உ இவருடனான நேர்காணல் இங்கு தரப்படுகிறது.**

*சைவசித்தாந்தத்தைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு எவ்வாறு ஏற்பட்டது?*

சைவசித்தாந்தத்தை முதன்முதலாக எனது இளங்கலைப் பட்டப் படிப்புக்குரிய (B.Lit.) ஒரு பாடமாகக் கற்றேன். அதன்போது எனக்குள் ஏற்பட்ட ஆர்வம் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தில் முதுகலைமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களைப் பெறுவதற்கு ஆர்வத்தை ஏற்படுத்தியது. அத்துடன் நான் பிறந்த இடம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள இடைக்கழிநாடுயில் உள்ள நல்லூரிலேயே நான் பிறந்தேன். சங்க நூல்களுள் ஒன்றான சிறுபாணாற்றுப் படையைத் தந்த நல்லூர் நத்தனார் என் ஊரவர். சங்க இலக்கியப் புலவனுடைய ஊரில் பிறந்திருக்கிறேன். இவர் வழியில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் என்னுள் இளமையிலேயே ஏற்பட்டுவிட்டது. சைவ சமயம் மீதான பற்றுதலும் பட்டப் படிப்பின் போது பேராசிரியர் வை. இரத்தினசபாபதி போன்ற ஆசான்கள் ஏற்படுத்திய ஆர்வமுமே என்னுள் சைவ சித்தாந்தத்தை ஆழக் கற்க வேண்டும் என்ற விருப்பை உருவாக்கியது.

*சைவசித்தாந்தம் மீது தமிழகத்தாருக்குள்ள ஆர்வத்துக்கும் ஈழத்தவருக்கு உள்ள ஆர்வத்துக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளைக் காண்கின்றீர்கள்?*

தமிழகத்தில் சமய நூல்களைக் கற்பதற்கான வாய்ப்புப் பாடசாலைக் கல்வியைப் பெறும் ஒருவருக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இங்கு பள்ளிப் பருவத்திலே சமய பாடத்தைப் பிள்ளைகள் கற்கின்றனர்.

இங்குள்ள வீடுகளில் சமயப் பழக்கங்களைப் பெற்றோர் போதிப்பதைப் பார்க்கிறேன். அரசியல் நிலைமைகளால் இந்தச் செயற்பாடுகளில் சிறு தளர்வுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் சைவ சித்தாந்தக் கொள்கைகளை மக்கள் இயக்கமாகச் செயற்படுத்த வல்லவலு இலங்கையில்தான் உள்ளது.

*சைவசித்தாந்தத்தின் மூலம் மக்களை ஒருங்கிணைக்கலாம் என்று கருதுகின்றீர்களா?*

ஆமாம். ஒரு கொள்கையை எடுத்துக் கொண்டு அந்தக் கொள்கையிலே விடிவு இருக்கிறது, உழைக்கும் மக்களுக்கான பங்களிப்பு இருக்கிறது என்ற நம்பிக்கை ஏற்படுமானால் அது மக்கள் சக்தியாக மாற்றம் பெறும். பல்லவர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் சைவசமய நெறியைப் பக்தி இயக்கமாகக் கைக்கொண்டனர். சமய குரவர்கள் பக்தி இயக்கத்தின் ஊடாக அரசியலை ஒழுங்கு படுத்தியிருந்தார்கள். அதைப்போல் பெருமான் என்கின்ற தலைவன் அருள் செய்வான் என்ற நம்பிக்கையில் இங்குள்ள சைவர்கள் ஒரு குடைக்கீழ் ஒற்றுமைப்படுவார்கள் ஆயின் மக்கள் இயக்கமாக அது வலுப்பெறும்.

*கோயில்களை நிர்வகிக்கின்ற அறங்காவலர்கள் மற்றும் குருமார்கள் சைவ சித்தாந்தம் தொடர்பாக அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பது குறித்த உங்களுடைய கருத்து என்ன?*

சமூகப் பொருளாதாரத் தளத்தில் ஓரளவு மேம்பட்டவரைத்தான் ஆலயங்களில் அறங்காவலர்களாக அமைத்துக்கொள்ளும் வழக்கம் உள்ளது. அவர் சுரண் டல் செய்யமாட்டார் என்ற நம்பிக்கையில்தான் அவரைத் தெரிவு செய்கிறோம். சுரண்டல் செய்யாமல் இருப்பதற்கு கடவுள் நம்பிக்கை அவசியமானது. சமய நம்பிக்கையில் பற்றில்லாதவர்களாலேயே பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சமய ஆசாரம், ஒழுக்கம் என்பவற்றைப் பேணி நடப்பதற்குச் சைவசித்தாந்த அறிவு அவசியமாக உள்ளது. கடவுள் பற்றிய உண்மையை விளங்கியவர் ஒழுக்கப் பிறழ்வுகளில் ஈடுபடமாட்டார்.

*சைவசமயத் தளத்திலே சமூகப் பணி நலிவடைந்திருப்பதாகக் கருதுகின்றீர்களா?*

கண்டிப்பாக. மக்களுடைய துன்பத்திலே அவர்களுக்குக் கைகொடுக்க வேண்டிய பொறுப்பு சமய நிறுவனங்களுக்கு உள்ளது. சமய நிறுவனங்கள் ஊர் ஊராகத் தமது பணியை விஸ்தரிக்க வேண்டும்.

நலிவுற்ற மக்களுக்குத் தொண்டு செய்வதில் சமய நிறுவனங்கள் கூடிய அக்கறை காட்ட வேண்டும். தமிழ்நாட்டில் சம தளத்தில் சமூகப் பணி என்று எடுத்துக் கொண்டால் அது சாதிப் பிரச்சினையாகவோ மொழிப் பிரச்சினையாகவோ உருமாறி விடும். இங்குள்ள நிலைமை அவ்வாறு இல்லை. எனவே தாராளமாக சைவ சமயவாதிகள் அடிநிலை மக்கள் மட்டத்துக்கு இறங்கித் தொண்டாற்ற வேண்டும். உழைப்பு மற்றும் உற்பத்தியைச் சார்ந்த தளத்திலேயே சமயத்தை வளர்க்க முடியும்.

*சைவசித்தாந்தத்தின் மீதான யாழ்ப்பாணத்தவரின் நம்பிக்கை எப்படியிருக்கிறது?*

யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம் எனக் கூறுவர். சைவசித்தாந்தத்தை வெளிப்படுத்தும் சிறந்த நூல் கந்தபுராணம். இங்குள்ளவர்கள் இந்த நூல் தொடர்பான அறிவை பெற்றிருக்கிறார்கள். அதைவிட வேதாந்தம் - சைவ சித்தாந்தம் என்ற வகையில் வேதாந்தத்தில் இருந்து சைவ சித்தாந்தத்தைத் தெளிவாக நிலை நிறுத்துவோம் எனச் செயற்படுபவர்கள் ஒரு தொகுதியினர். பட்டத்தைப் பெறுவதற்காகக் கற்பவர்கள் ஒரு தொகுதியினர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஐம்பது பேர் சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப்

**பத்துக்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளன. இவற்றைக் காலையிலே திறந்து பார்த்தால் ஒரு மணி நேரத்துக்குப் பக்தி என்ற பெயரில் எதை எதையோ எல்லாம் காட்டுகிறார்கள். அறிவியலையோ தத்துவவியலையோ போதிப்பதற்கு அவர் கள் முயற்சிப்பதில்லை. மக்களை மூட நம்பிக்கைகளின் வழி உட்படுத்தவே விரும்புகிறார்கள். இது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றின்படி நடப்பதாகவே கருதுகின்றேன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வனங்கள் ...ாகச் சென்று ...ரியை ...ங்க வேண்டும்

...யினரால் இந்த மாதம் 5 ஆம் , 6 ஆம், 7 ஆம் ...ாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்ட அகில ...ரயாற்ற தமிழ் நாடு நல்லூரில் இருந்து முனைவர் சா. ...சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மிஷன் ...போது உதவிப் பேராசிரியராகப் பணியாற்றும் ...ரப்படுகிறது.



பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். தற்போது ஐம்பது பேர் கற்கின்றனர். தமிழ்நாட்டுடன் ஒப்பிடும் போது இது மிகப் பெரிய விடயம். அதைவிடச் சைவசித்தாந்த பண்டிதர், சைவப் புலவர் முதலிய தேர்வுகளும் நடத்தப்படுகின்றன. இவை வெறும் பட்டங்களுக்கான கல்வியாக இருக்கக் கூடாது. இவர்கள் மொழியையும் சித்தாந்தத்தையும் மக்கள் மத்தியில் பரப்புரை செய்து கடவுள் நம்பிக்கையை மேம்படுத்த வேண்டியவர்களாகவும் சைவ வாழ்வியலுக்கு வழிகாட்ட வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

*தமிழ்நாட்டில் சைவ சித்தாந்தத்தைக் கற்பதற் கான கல்வி வாய்ப்புக்கள் பற்றிக் கூறுங்கள்?*

தமிழ் நாட்டில் மதுரைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் சைவ சித்தாந் தத்துறைகள் உள்ளன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் நந்தினி என்ற மாணவி சென்னைப் பல்கலைக்கழகத்தில் சைவ சித்தாந்தத்தில் எம்.ஏ. மற்றும் பி.எச்.டி. பட்டங்களைப் பெற்றுள்ளார். யாழ்ப்பாணத்தவர்கள் தமிழகத்துக்கு வந்து இந்தப் பல்கலைக் கழகங்களில் பட்டங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

*கே: தமிழ்நாட்டு மக்களின் சமய நம்பிக்கைகள் பற்றி உங்கள் பார்வை என்ன?*

அங்கு தற்போது தொலைக்காட்சி நாடகப் பண் பாடே வேரூன்றியுள்ளது. தமிழ்நாட்டுக் கல்வியாளர்கள் தொலைக் காட்சிப் பண்பாட்டையே எதிர்த்துக் குரல் கொடுக்க மாட்டாதவர்களாக இருக்கிறார்கள் என நான் அடிக்கடி வேதனைப்பட்டுக் கொள்வேன். இந்த நாடகங்கள் ஏற்படுத்தும் தாக்கம் வலிமையானது. தமிழ் நாட்டு நாடகங்களை உலகளாவிய ரீதி யில் உள்ள தமிழர்கள் தொலைக்காட்சி ஊடாகப் பார்க்கிறார்கள். இந்த நாடகங்களில் ஒன்றில்தானும் ஒற்றுமையாகக் குடும்பம் நடத்துவதாகச் சித்திரிக்கப் படுவதில்லையே.

இதைவிடத் தமிழ்நாட்டில் சமயப் பண்பாட்டை விட சோதிடப் பண்பாடே காணப்படுகின்றது. திராவிடர் கழகத்தைச் சேர்ந்த தொலைக்காட்சி அலைவரிசைகள் கூட புராணங்களுக்கும் சோதிடத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றன. சைவ சமயத்தின் உண்மையை விளக்குவது சைவசித்தாந்தம். ஆனால் புராணங்களை ஒளி பரப்புதற்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கி மூட நம்பிக்கைக்கான தளத்தை விரிப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றனர். அங்கு பத்துக்கும் மேற்பட்ட தொலைக்காட்சி அலைவரிசைகள் உள்ளன. இவ்வற்றைக் காலையிலே திறந்து பார்த்தால் ஒரு மணி நேரத்துக்குப் பக்தி என்ற பெயரில் எதை எதையோ எல்லாம் காட்டுகிறார்கள். அறிவியலையோ தத்துவவியலையோ போதிப்பதற்கு அவர்கள் முயற்சிப்பதில்லை. மக்களை மூட நம்பிக்கைகளின் வழி உட்படுத்தவே விரும்புகிறார்கள். இது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரல் ஒன்றின்படி நடப்பதாகவே கருதுகின்றேன்.

*யாழ்ப்பாண மக்களின் சைவ சித்தாந்த அறிவை மேம்படுத்த உங்களால் எத்தகைய பங்களிப்புக்களை வழங்க முடியும் எனக் கருதுகின்றீர்கள்?*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத் துறை ஒன்று ஏற்படுத் தப்பட வேண்டும். அதில் சைவசித்தாந் தப் பேராசிரியர்கள் நியமிக்கப்பட வேண் டும். தற்போது இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர்களும் மற்றும் சைவ சித்தாந் தம் அறிந்த வெளியாள்களுமே சைவ சித்தாந்த பாடத்தைப் போதிக்கின்றனர். பாடம் போதிப்பது தொடர்பில் என்னாலான உதவிகளை மேற்கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்.

*கே: உங்களின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிச் சொல்லுங்கள்?*

கிடைத்தற்கரிய நூல்களைத் தேடிப் பெற்றுத் தொகுத்து வெளியிட வேண் டும் என விரும்புகின்றேன். சிவஞான முனிவரின் 32 நூல்களைப் பெற்றுத் தொகுத்து வெளியிட்டுள்ளேன். இதே போல மறைமலை அடிகளின் ஆசிரியரான சூளை சோமசுந்தர நாயகரின் 45 நூல்களைத் தேடிப் பெற்று இரண்டு பகுதிகளாகத் தொகுத்து வெளியிட் டுள்ளேன். சைவத்தின் பார்வைகளை இணைத்து இளைஞர்களுக்கான ஒழுக்க வியல் பற்றிய நூல் ஒன்றை எழுதி வெளி யிட வேண்டும் என்ற எண்ணத்தில் இருக்கிறேன். இதன் மூலம் சைவம் பற்றிய தெளிவான பார்வையொன்றை இளைஞர்கள் மத்தியில் பதிய வைக்க எண்ணியுள்ளேன். ✱

செவ்வி:
**மதியணி யெம்மான் சேய்**

## மன்னிப்பின் மறுபக்கம்



பெரியவர் ஒருவர் ஒரு கிரா மத்தினூடாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்போது ஒரு தடியோடு அவர் பின்னால் வந்த ஒருத்தன் அந்தப் பெரியவரை அடித்து விட்டுத் திரும்பி ஓடுகிறான்.

அப்படித் திரும்பி ஓடும் போது அவன் கையில் இருந்த தடி கீழே விழுந்தது. பெரிய வர் அதை எடுத்து ''தம்பி! உன் தடியை வாங்கிக்கொண்டு போ'' என்று சொல்லி அவன் பின்னால் ஓடினார். எதிரில் வந்து கொண்டிருந்த ஒருத்தன் இதைப் பார்த்தான்.

''ஐயா! பெரியவரே! உங்களுக்கு என்ன பைத்தியமா? அந்த மனிதன் உங்களை அடித்துவிட்டு ஓடுகிறான். அவனிடமே அந்தத் தடியைத் திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று கவலைப்படுகிறீர்கள் இது நியாயமா? என்றார். அவனை இவர் திட்டவேண்டும் என்று இவன் எதிர்பார்க்கிறான்.

அதற்குப் பெரியவர் ''ஐயா! நேற்று ஒரு மரத்துக்கு அடியில் நான் உட்கார்ந்து இருந்தேன். அப்போது ஒரு கிளை முறிந்து என்மேல் விழுந்தது. அப்போது நான் அந்த மரத்திடம் எதுவும் சொல்லவில்லை. இன்றைக்கு ஒரு மனிதனின் கையில் இருந்த ஒரு குச்சி என்மேல் விழுந்தது. அவ்வளவுதான் இதற்காக அந்த மனிதனிடம் நான் ஏதாவது சொல்ல வேண்டுமா?'' என்றார்.

இவன் குழம்ப ஆரம்பித்தான். இருந்தாலும் கூறினான். ''ஐயா மரத்திலிருந்து கிளை முறிந்து விழுவதும் மனிதன் கையில் இருந்த கைத்தடி விழுவதும் ஒன்றாகி விடுமா?'' என்றான்.

பெரியவர் மறுபடியும் கூறினார்; ''ஒரு தடவை நான் ஒரு படகில் போய்க் கொண்டிருந்தேன். வெற்றுப் படகு ஒன்று மிதந்து வந்து என் படகை மோதியது. இன்னொரு நாள் அதேமாதிரிப் போய்க் கொண்டிருந்த போது ஒருமனிதன் செலுத்தி வந்த படகு என் படகுடன் மோதியது. என் படகோட்டி படகில் இருந்த மனிதனைப் பார்த்து பேசினார். நான் உடனே அவனைப் பார்த்து ''ஆளில்லாத படகு போதும் போது ஏன் இப்படித் திட்டவில்லை?'' என்றேன். ''படகை ஏன் திட்டப் போகிறேன்'' என்றான். படகை மன்னித்து விடுகிறான் மனிதனிடம் மட்டும் ஏன் இந்தக் கடுமையாக குணம் என்று ஏதேதோ பேசினார் அந்தப் பெரியவர்.

ஓஷோ என்ன சொல்கிறார் தெரியுமா? ஒருத்தன் கோபத்தினால் ஒருத்தரை தடியால் அடிக்கிறான். இப்படி அடிப்பதற்கு இயற்கையின் குணம்தான் வேலைசெய்கிறது.

ஒருத்தன் மது குடித்துவிட்டு பேசுகிறான். அதை நாம் தப்பாக எடுப்பதில்லை. நீதிமன்றம் கூட அதை மன்னித்து விடுகிறது. ஏனென்றால் அவன் குடிவெறியில் இருந்தான்.

ஒருவரது உடம்பில் கோபத்தின் காரணமாக விஷம் பரவியிருந்தால் அதை நாம் மன்னிப்பது இல்லை.

ஒருத்தன் கோபப்படும் போது உடம்புக்குள் என்ன நடக்கிறது. அவன் ரத்தத்தில் நஞ்சு பரவுகிறது. உள்ளுக்குள் சில சுரப்பிகள் வேலை செய்கிறது. அவர் குடிகாரர் வெளியிலிருந்து மதுவை எடுத்துக் கொள்கிறார்கள். கோபக்காரனுக்கு மது உள்ளே கிடைக்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்.

இதில் அவனிடம் கோபப்பட என்ன இருக்கிறது. இது அந்த மனிதனுக்குள் நடந்து கொண்டிருக்கும் இயற்கையான குணத்தின் பாசம். இது கீதையில் கண்ணன் சொல்லும் ஒரு கருத்து.

பெரியவர்கள் சொல்வதற்கெல்லாம் கோபப்படாமலும் இருப்பதற்கான இரகசியங்கள்.

கோபப்பட்டு சமூகக் குற்றங்கள் புரிகிறவர்களைத் தண்டிக்காமல் இருக்க முடியாது. தவறு செய்வது இயற்கையென்று சொல்ல ஆரம்பித்தோம் என்றால் வாழ்க்கை தடம் மாறிப் போய்விடும்.

தவறு செய்யாமல் இருக்கவேண்டும் என்றால் கோபப் படாமல் இருக்கவேண்டும். மனம் போதையில் மூழ்கக் கூடாது.


இரண்டு கார்கள் எதிரும் புதிருமாக வந்து மோதிக் கொண்டன. இரண்டு கார்களில் இருந்தும் லேசான அடியோடு இரண்டு பேர் இறங்கினார்கள். ஒருத்தர் பதட்டத்தோடு இருந்தார். இன்னொருத்தர் தன் காரிலிருந்து கொஞ்ச மதுவை அவரிடம் கொடுத்து ''பதட்டப் படாதீர்கள். இந்தாருங்கள் இதைக் குடியுங்கள்'' என்றார். அவர் இதை வாங்கிக் குடித்தபின் கேட்டார்; ''ஏன் எனக்கு மட்டும் கொடுத்தீர்கள். நீங்கள் சாப்பிடவில்லையா?'' என்று.

இவர் நிதானமாகச் சொன்னார் கொஞ்ச நேரத்தில் பொலிஸ் விசாரிக்க வருமா அதன்பின் சாப்பிடுவேன் என்றார்.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஓகஸ்ட் 2011 வெள்ளிக்கிழமை



கடந்த வருடம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த, நெல்லியடி கொமர்ஷல் வங்கிக் கிளையில் அருணலு சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் சுமார் 42 மாணவர்கள் நெல்லியடி முருகமூர்த்தி திருமண்டபத்தில் வைத்து பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

(ம–236)

# திசைமாறிப்போகும் தமிழைப் பேணுவதற்கு மாணவர்களிடையே எழுத்தாற்றல் தேவை

**யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர்**

யாழ்ப்பாணம், ஓக.12

திசைமாறிப் போகும் தமிழ் மொழியைப் பேணுவதற்கு பாடசாலைகளில் மாணவர்களின் ஆக்கங்கள் தாங்கிய மலர்கள் வெளியீடு செய்வது அவசியமாகும்.

மலர் வெளியீடு மாணவர்களின் எழுத்தாற்றலையும், சொற்பிழைகளைத் திருத்துவதற்கும் ஏதுவாக அமையும். இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா.

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் தமிழ் மன்றத்தால் அண்மையில் "வேம்பூ" மலர் வெளியீட்டு நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்தாவது:

ஈழத்துப் பண்பாடுகளில் மரங்களின் பெயர்களைக் கொண்ட இடங்களே அதிகமாக உள்ளன.

அதேபோல் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பெயரும் வேப்ப மரத்தின் பெயரைக் கொண்டு அமைந்துள்ளது.

வேம்புக்கு தனித்துவமான மகிமையும், மருத்துவ ரீதியாகவும் தனிச் சிறப்பு உள்ளது.

பெயருக்கு ஏற்றால் போல் பிரபல்யமான பெண்கள் பாடசாலையாகத் திகழ்கின்றது.

இவ்வாறு தனிச் சிறப்பு வாய்ந்த ஈழத்தில் தமிழ்மொழி திசைமாறிப் போய்க் கொண்டிருக்கின்றது.

இதற்கு முக்கியகாரணம் தமிழ் மொழியில் உருவாகும் எழுத்துப் பிழைகள்தான்.

பாடசாலைகளில் மாணவர்களிடையே எழுத்தாற்றல் உருவாக்க வேண்டும். இதன் மூலம் எழுத்துப் பிழைகளைத் தவிர்க்கமுடியும். இதன் மூலம் தான் தமிழ் மொழியை பாதுகாக்க முடியும்.

ஏனெனில் மாணவர்கள் தான் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக உருவாக்கப்பட வேண்டியவர்கள்.

அத்துடன் சிறிய ஆக்கங்களை எழுத ஊக்கிவித்து மலர்கள் வடிவில் வெளியிடப்பட வேண்டும். திசைமாறிப் போகும் தமிழ்மொழியின் போக்கை மாற்ற மாணவர்கள் முன்வர வேண்டும்.- என்றார்.

(ம-வ-313)

# இந்து தர்மம் கூறும் வாழ்க்கை முறை சிறப்பான வாழ்வியலுக்கு அடிப்படை

**பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய**

யாழ்ப்பாணம், ஓக.12

இந்து தர்மத்தில் கூறப்பட்டுள்ள தத்துவங்களையும் வாழ்க்கை முறைகளையும் பின்பற்றி நடந்தால் எமது வாழ்க்கை சிறப்பாக அமையும். இது எமது கலாசாரப் பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் ஏதுவான ஒன்றாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.சின்மய மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்ய.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் கொடியேற்றத் தினத்தன்று இடம்பெற்ற நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

இந்து தர்மத்தின் உண்மையான பெயர் சனாதனதர்மம் என்பதாகும். இதில் சனாதனம் என்பது பொருள் அழிவற்றது. புராதனமானது, பெருமை வாய்ந்தது என்று கூறலாம்.

தர்மம் என்பது எல்லா ஜீவராசிகளையும் எந்த ஒன்று இணைக்கின்றதோ அது தர்மம் எனலாம். எனவே அழிவற்ற எல்லோரையும் இணைக்கும் ஆதாரம் சனாதனதர்மம் ஆகும். இவ்வாறான பெருமை வாய்ந்தது இந்து தர்மம்.நாம் அனைவரும்தேடிக்கொண்டிருக்கும்ஆனந்தத்தைஎப்படி அடைவது என்று இந்து தர்மம் கூறுகிறது.

இந்து கலாசாரத்தின் சிறப்பை எடுத்துக்காட்டும் ஒரு செயலாக குத்துவிளக்கு வைத்தலைக் குறிப்பிடலாம். இந்தக் கலாசார முறை மூலம் ஒருவித சக்தி கிடைப்பதுடன் மருத்துவ ரீதியாக உடலுக்கும் நல்ல பயனைத் தரும். இது போன்ற பல கலாசார முறை களை இந்து சமயம் எடுத்துக் கூறியுள்ளது.

சிறந்த வாழ்க்கையையும் பண்பாட்டு விழுமியங்களையும் நாம் பெற்றுக் கொள்வதற்கு இந்து தர்மம் கூறும் தத்துவங்களையும் வழிமுறைகளையும் பின்பற்றி நடக்க வேண்டும். இதன் மூலம் எமது வாழ்க்கை சிறந்ததாக அமையும். - என்றார்.

(ம-வ-313)

# வடமராட்சி வலய கணித புதிர் போட்டி முடிவுகள்

வடமராட்சி,ஓக.12

வடமராட்சி வலயதில் இடம் பெற்ற கணிதப்புதிர் போட்டி முடிவுகள் வெளியாகியுள் என போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரம்வருமாறு.

**தமிழ் மொழிமூலம்**

சிவநேசன் ஜதுர்சன் (ஹாட்லிக்கல்லூரி), ரவீந்திரன் கஜிராஜ் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), ஜெயராசா விபுலன் (ஹாட்லிக்கல்லூரி), சிவசண்முகமூர்த்தி சிவதர்சன் (ஹாட்லிக்கல்லூரி), சபாபதிப்பிள்ளை கோபிதன் (ஹாட்லிக் கல்லூரி),குலேஸ்வரன் ஜான்சன்(உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), தபேந்திரன் அபிஷேகா (நெல்லியடி ம.ம.வி), நவரட்ணம் நிதுசன்(ஹாட்லிக்கல்லூரி), கருணாநிதி ராகுலன் (ஹாட்லிக்கல்லூரி),சுப்பிரமணியம் வரதராஜன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), சிவலிங்கராசா ரிசிகோபன் (ஹாட்லிக் கல்லூரி), சபாபதிப்பிள்ளை துவாரகன் (ஹாட்லிக்கல்லூரி), குணராசா ரிதுர்சன் (ஹாட்லிக்கல்லூரி), கலாமணி மதனா கரன் (நெல்லியடி ம.ம.வி), கோபிகா வேணுகோபால வாணிதாசன் (மெதடிஸ்த பெ.உ.பா), சஞ்சியா தர்மகுலசிங்கம்(வல்வெட்டி இ.த.க.பா), கணேஸ்வரன் கபிலன் (ஹாட்லிக் கல்லூரி), ஆனந்தராஜா ரகுராமன் (ஹாட்லிக் கல்லூரி)

**ஆங்கில மொழி மூலம்**

குகனேந்திரன் மாலன்பன் (ஹாட்லிக்கல்லூரி), நல்லநாதன் விதுசன்(ஹாட்லிக் கல்லூரி), பபுகரன் கிஷானி (நெல்லியடி ம.ம.வி), சிவகுமார் லஷ்சிகா (நெல்லியடி ம.ம.வி), புஸ்பாகரன் பிருந்தாபன் (விக்னேஸ்வராக் கல்லூரி), புலேந்திரன் தயாபரன் (ஹாட்லிக்கல்லூரி), தயாளன் தயாரூபன்(ஹாட்லிக்கல்லூரி), சங்கீர்த்தனா மோகன் (வடமராட்சி மத்திய கல்லூரி), சுப்பிரமணியம் திலக்ஷன் (ஹாட்லிக்கல்லூரி), மனோகரன் துஷிதா (நெல்லியடி ம.ம.வி), கனகரட்ணம் கஜரூபன் (ஹாட்லிக்கல்லூரி), சுஜீவா ஸ்ரீப வன் (மெதடிஸ்த பெ.உ.பா), லிங்கரட்ணம் விதுர்ஷா (நெல்லியடி ம.ம.வி), கனகசபை மகிந்தன் (ஹாட்லிக்கல்லூரி), க.ரூபினி(வட இந்துமகளிர் கல்லூரி), சிவமூர்த்தி விஸ்ணுப்பிரதாப் (ஹாட்லிக்கல்லூரி), ஜெகநாதன் ராஜேந்தர் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), கீர்த்தனா உதயமூர்த்தி (வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரி).

(ம-236)

## இலக்கியப் போட்டி வெற்றியாளர்

யாழ்ப்பாணம், ஓக.12



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு 4 இலக்கணப் போட்டியில் முதலாமிடத்தையும், தேசிய மட்டப்போட்டியில் இரண்டாமிடத்தையும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி மாணவி கணே சமூர்த்தி கீதாஞ்சலி பெற் றுள்ளார்.

(ம-190)

## நவாலி சங்கக் கிளை திறப்பு

யாழ்ப்பாணம், ஓக.12

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நவாலி கிளை 7 மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலம் நவாலி மணி மண்டத்தில் இயங்கி வந்த இந்தக் கிளை வருமானமின்றி நட்டத்தில் இயங்கி வந்ததைத் தொடர்ந்து சிறிது காலம் மூடப்பட்டிருந்தது.

தற்போது மீண்டும் பாவனையாளர்களின் நன்மை கருதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனால் சகல மக்களும் பயனடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-100)

## ஆங்கில தின போட்டிகளில் இரண்டாமிடங்கள்

யாழ்ப்பாணம், ஓக.12

தேசிய ரீதியில் இடம்பெற்ற ஆங்கில தினப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி இரண்டு போட்டிகளில் மூன்றாம் இடத்தைப் பெற்று வடமாகாணத்துக்கு பெருமை சேர்த்துள்ளது.

2010 ஆம் ஆண்டில் இடம் பெற்ற தேசிய மட்டப்போட்டி முடிவுகளே இவ்வாறு கிடைக்கப் பெற்றுள்ளன.

தனிநபர் போட்டிகளில் செல்வி சாம்பவி சிவாஜி பேச்சிலும் செல்வி றொஸ்னா ஜேசுதாசன் தனி நடிப்பிலும் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

(ம-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் கொடுப்பார் இதற்கான தீர்ப்பை?

நல்லூர் கொடியேற்றத் திருவிழாவுக்குப் போக வேண்டும் என்று காலை 7 மணிக்கே பஸ் தரிப்பிடத்துக்குச் சென்றுவிட்டேன். வேட்டி கட்டிக் கொண்டு போனதால் கூட்டம் குறைந்த மினி பஸ்ஸில் ஏறுவோம் என்று பல மினி பஸ்களைத் தவறவிட்டேன். கூட்டம் குறைந்த மினி பஸ்ஸைப் பார்த்த வண்ணம் இருந்தேன். ஏனெனில் போன முறை நல்லூர்க் கோயில் திருவிழாவுக்குப் போறதுக்கு வேட்டி கட்டிக் கொண்டு கூட்டம் நிறைந்த மினி பஸ்ஸில் ஏறி கொண்டக்டர் மரியாதை இல்லாமல் தள்ளிப் போ தள்ளிப் போ என்று கத்த நானும் பயத்திலை அந்த சன நெரிசலை நெருங்கி சனத்தைத் தள்ளிக் கொண்டு போய் மினி பஸ்ஸின் பின்னே நின்று பார்த்தேன். வேட்டியின் தலைப்பு மினி பஸ்ஸின் வாசலடியில் இழுபட்டுக் கொண்டு நிற்குது.

ஒருவாறு வேட்டியை இழுத்து எடுத்துச் செருகினேன். மினி பஸ்ஸில் நின்றவர்கள் எல்லோரும் என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டார்கள். அதற்குப் பிறகு எந்தக் கோயிலுக்குப் போனாலும் கூட்டம் குறைந்த பஸ்ஸில் தான் ஏறிப் போவேன்.

அன்றும் அப்படித்தான் கூட்டம் குறைந்த பஸ்ஸைப் பார்த்துக் கொண்டு நின்றேன். அந்த பருத்தித்துறை வீதியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நின்ற ரைம் கீப்பர் என்னைப் பார்த்து ஐயா கூட்டம் குறைந்த பஸ்ஸைப் பார்த்துக் கடைசியில் நல்லூர்க் கொடியேற்றத்துக்குப் போக முடியாமல் போகப் போகுது. ஏதாவது ஒரு பஸ்ஸில் ஏறிப் போங்கோ என்றான். நேரம் இருப்பதால் அவர் சொல்லையும் பொருட்படுத்தாமல் நின்று பார்த்தேன். இதற்கிடையில் ஒரு சில மினி பஸ் அந்தத் தரிப்பிடத்தில் வந்து நிற்கும்போது அந்த மினி பஸ் கொண்டக்டர்கள் அந்தத் தரிப்பிடத்தில் நிற்கும் இளம் யுவதிகளைச் சிரித்த முகத்துடன் ஏற்ற முட்படுவார்கள். ஆனால் அவர்கள் ஏறுவதில்லை. அந்த யுவதிகளும் என்னைப் போல பல மினிபஸ்களைத் தவறவிட்ட வண்ணம் நின்றனர். நான் அவர்களைப் பார்த்த வண்ணம் நின்றேன். எனக்கு வேட்டி பிரச்சினை அவர்களுக்கு என்ன பிரச்சினையோ என்று தெரியாமல் யோசித்துக் கொண்டு நிற்பதை ரைம் கீப்பர் கண்டு விட்டார்.

எனக்குப் பக்கத்தில் வந்த அவர் என்ன பாக்கிறியள் என்றவர் அந்த யுவதிகளின் கதையை சொல்ல வெளிக்கிட்டார்.

750 இலக்கம் கொண்ட மினி பஸ்ஸில் ஏறுவதற்கு இளம் யுவதிகள் பயப்படுகிறார்கள் ஐயா. சிரித்த முகத்துடன் ஏற்றிவிட்டு அந்த சனத்துக்குள் அந்த யுவதிகளைப் படுத்தும்பாடு வார்த்தைகளில் சொல்ல முடியாது. ஏன் எனக் கேட்டேன். அதற்கு அவரோ எனக்குப் பக்கத்தில் இன்னும் நெருங்கி வந்து ஒருநாள் 750 இலக்க மினி பஸ்ஸில் வந்து இந்த பஸ் தரிப்பிடத்தில் இறங்கிய இரு யுவதிகள் அந்த மினி பஸ்ஸைப் பார்த்துத் திட்டிக் கொண்டு இறங்கினார்கள். என்ன நடந்தது என்று அந்த யுவதிகளைக் கேட்க முதல் அந்த இரு யுவதிகளும் சென்றுவிட்டார்கள் என்றார். அடுத்த நாள் அந்த இரு யுவதிகளும் இதே தரிப்பிடத்துக்கு வந்து, பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு நின்றார்கள். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்துக்குப் படிக்கப் போகிறவர்கள் என்பது நன்கு தெரிகிறது.

எனக்கு அருகில் நின்ற அந்த யுவதிகளிடம் கேட்டால் ஏன் 750 இலக்க மினி பஸ்ஸில் ஏறவில்லை என்பது தெரியவரும் என்று நினைத்தேன். அந்த இரு யுவதிகளுக்கும் கிட்டப் போய் கேட்டேன். அதற்கு அந்த இருவரில் ஒரு யுவதி பஸ்ஸில் ஏற்றியதும் சனத்துக்குள் நெரித் துக் கொண்டு நிற்கும்போது அந்த நெருக்கம் என்று பாராமல் கொண்டக்டர் சனத்தை இடித்துக் கொண்டு உள்ளே வந்து ரிக்கெட்டுக்குக் காசு கேட்கிற சாட்டில் அங்க இங்க கை வைக்கிறாங்கள் என்று அழாத குறையாக யுவதி சொன்னார்.

பார்த்தியளா ஐயா மினி பஸ்ஸுக்குள்ள என்ன நடக்குது என்று சொன்னார் ரைம் கீப்பர். உடனே நானோ ஏன்? மினி பஸ் சங்கத்திடம் முறையிட வேண்டியதுதானே என்று கேட்டேன்.

மினி பஸ் சங்கத் தலைவரிடம் சொன்னனான். அவர் அந்த மினிபஸ் நம்பரை அறிந்து சொல்லும் படி சொல்லி இருக்கிறார் என்றார். சனக் கூட்டம் இல்லாத 750 இலக்க மினிபஸ் வந்தது. அதில் ஏறிய போது ரைம் கீப்பரோ கவனம் வேட்டி என்றார்.

நானும் சிரித்துக் கொண்டு பஸ்ஸின் உள்ளே ஒரு சீற்றில் இருந்தேன். 750 இலக்க மினிபஸ் என்ற படியால் நல்லூர் வரும் வரை கொண்டக்டரையே பார்த்த வண்ணம் இருந்தேன்.

ஒவ்வொரு பஸ்தரிப்பிடம் வரும் போதும் சிரித்த முகத்துடன் இளம் யுவதிகளை ஏற்றுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அந்த மினி பஸ்சில் ஏறும் யுவதிகளும் கொண்டக்டரைப் பார்த்து சிரித்துக்கொண்டு ஏறினார்கள். பஸ்ஸுக்குள் கொண்டக்டர் ஒவ்வொரு இளம் யுவதிகளையும் பார்த்து எங்கே என்று சைகை மூலம் கேட்க அவர்களும் சைகைமூலம் கொப்பியைக் காட்ட கொண்டக்டர் தலையாட்ட இப்படியாக ஏதோவெல்லாம் சைகை மூலம் உரையாடல் நடந்தது. நல்லூர் இறக்கம் என்று சொன்னார் கொண்டக்டர். பெரிசு வேளைக்கு வந்து இறங்கு என்று என்னைப்பார்த்து சொல்ல நானும் வாறன் வாறன் என்று சொல்லி ஒருவாறு மினிபஸ்ஸின் கம்பிகளைப் பிடித்து இறங்கினேன். அப்பொழுதுதான் மணியைப் பார்த்தேன் 9 மணியாகி விட்டது. இரண்டு மணித்தியாலங்கள் பஸ்ஸுக்காகவும் பஸ்ஸுக்குள்ளும் நின்று நேரம் கழிந்து விட்டது. 10 மணிக்கு கொடியேற்றம் என்று எனக் குள்ளே நினைத்துக் கொண்டு நல்லூர் கோயில் முன்வாசலில் கால்களைக் கழுவிவிட்டு உள்ளே சென்றேன். பூசைகளைப் பார்த்து விட்டு கும்பிட்டு விட்டு கொடியேறியதும் மீண்டும் பஸ்தரிப்பிடத்தில் வந்துநின்றேன். மீண்டும் வந்த 750 இலக்க மினி பஸ் யாரில் முளிச்சதோ மீண்டும் இதே பஸ் வருகுது என்று சொல்லிவிட்ட எனக்கு ஒன்றும் நடக்காதுதானே என்று மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு ஏறினேன். அதே கேலிக் கூத்தோடு மினிபஸ் வெளிக்கிட்டது. எனது பஸ் தரிப்பிடம் வந்தது இறங்கினேன். அங்கே நின்ற ரைம் கீப்பர் பாத்தியளா என்று கேட்டார். எதைக் கேட்டார். அதாவது மினிபஸ்ஸுக்குள் நடக்கும் சில் மிஷங்களையா அல்லது கொடியேற்றத்தையா என்று தெரியாமல் பார்த் தேன் என்று சொல்லிவிட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

இப்ப வந்து யாரிலே பிழை சொல்லுறது எண்டு தெரியாது. ஒரு சில பேர் செய்கிற பிழையால் ஒட்டுமொத்த




சமூகமே பாதிக்கப்படுகுது. நான் சொன்னதைப் பார்த்தியளா. 750 இலக்கம் கொண்ட சில தனியார் மினி பஸ்களில் நடக்கின்ற சம்பவங்கள் அந்த இலக்கம் கொண்ட எல்லா தனியார் மினி பஸ்களையும் பாதிக்கிறது. இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த தனியார் மினிபஸ் சங்கம் நடவடிக்கை எடுத்தால் மாத்திரம் அன்றி வேறு எவராலும் கட்டுப்படுத்த முடியாது என்று கிணற்றடியில் நின்று எனக்குள்ளே சொல்லிக் கொண்டிருந்ததை எனது மனைவி கேட்டுவிட்டாள்.

இஞ்சருங்கோ முகம் கழுவப் போனியள் கழுவிவிட்டு வாறதைவிட்டு அலம்பிக் கொண்டு நிற்கிறியள் என்றாள். இப்படித்தான் எல்லோரும் நினைப்பதால் எவர் தப்பையும் தட்டிக் கேட்க முடியாத அப்பாவிகளாகப் போய்விட்டோம் என்றேன். பதிலுக்கு அவளோ அவமானப்பட்டதுகளே திரும்பியும் அந்த 750 இலக்க பஸ்ஸில் ஏறிப்போ குதுகள். நீங்கள் என்னென்றால் அது களுக்கு வக்காளத்து வாங்கப் பாக்கிறியள் என்றாள்.

இவளுக்கு என்ன விளங்கும் இவளும் இளமையாய் இருந்து இப்ப அந்த 750 இலக்க தனியார் மினி பஸ்ஸில் ஏறிப் போனால் தெரியும் என்று எனக்குள் கேட்டுக் கொண்டேன். ✱

# தமிழன் என்று கூறுவதில் பெருமிதம் கொண்டவர்தான் குமார் பொன்னம்பலம்

இலங்கையிலே வாழும் தமிழ் மக்கள் சகல உரிமைகளுடனும் அச்சமின்றி வாழ வேண்டும் என்பதற்காகத் தமது வாழ்நாளின் இறுதி மூச்சுவரை இதய சுத்தியுடன் பாடுபட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 73 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

**இன்று அவரது 73 ஆவது பிறந்ததினம்**

அவர் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்காகப் பல முக்கியமான நடவடிக்கைகளை பிரசாரங்கள் எதுவுமின்றி மேற்கொண்டார். இதில் ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு மேலாக ஏழு கட்சிகளுடன் பேச்சுக்களை மேற்கொண்டு தயாரித்த ஒப்பந்தத்தைக் குறிப்பிடலாம். இந்த ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் ஏற்காவிட்டால் சமாதானத்தை ஏற்படுத்த முடியாதெனக் கருதிச் சிங்கள அரசியல் வாதியான அநுரா பண்டாரநாயக்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த ரத்வத்தை, துணிச்சலும் நேர்மையுமிக்க சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க ஆகியோரை வன்னிக் காட்டுக்கு அழைத்துச் சென்றார்.

இத்தகைய துணிச்சலான நடவடிக்கை பற்றி யாருமே அப்போது பெரிதாக அறிந்திருக்கவில்லை.

மாமனிதர் அவர்கள் செல்வத்தில் திளைத்த நல்ல சூழ்நிலையில் பிறந்தார். இது அவரது பிறப்பு வழி உரித்து. தமது தந்தையின் வழக்கறிஞர் அங்கிங்காகத் தகைமை பெறுவது சவாலுக்குரிய ஒன்றாக இவருக்கு விளங்கியது. தந்தையானவர் ஓர் அமைதியான யுகத்தில் இருந்து கொண்டு தனது முத்திரையைப் பதித்தார். தனையனோ குழப்பமானதொரு காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டு தனது தொழிலின் நெளிவு சுழிவுகளை எட்டத் தூண்டப்பட்டார். இவரது மனவுறுதி அசாதாரணமானது. இவர் தன்னை ஒரு தமிழன் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைந்தார். ஒவ்வொரு தமிழனின் மனத்திலும் தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பிடித்துக் கொள்ளத் தேவையான அளவுக்கு அவர் பேசியும், எழுதியும் உள்ளார். குமார் பொன்னம்பலத்தின் மறைவு தமிழ் மக்களின் மன உரத்தைச் சிதைத்துவிடவில்லை. அந்த மனவுறுதி வெற்றி கொள்ளப்படவுமில்லை.

உரிமைக் குரலொன்று ஒடுக்கப்பட்டுவிட்டது. தமது வாழ்க்கைச் சுடர் அணைக்கப்படலாம் என்று குமாருக்கு அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் அவர் அச்சம் எதையும் வெளிக் காட்டவில்லை. மரணத்தையிட்டுப் பயப்படவுமில்லை.

அன்னாரது நினைவு கடைசித் தமிழன் வாழ்கின்ற காலம்வரை இந்தப் பூவுலகில் நிலைத்திருக்கும். ✱

தொகுப்பு: க.மு.தர்மராசா

## கல்விச்சுடர் விடைகள்

### பரீட்சை இல. 13 இன் வினாத்தாள் I இற்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01-A | 02-C | 03-D | 04-C | 05-C | 06-2 | 07-2 | 08-1 | 09-1 | 10-2 |
| 11-1 | 12-2 | 13-1 | 14-2 | 15-2 | 16-1 | 17-3 | 18-3 | 19-2 | 20-3 |
| 21-2 | 22-2 | 23-3 | 24-C | 25-4 | 26-தம்பி | 27-அம்மா | | 28-400m | |
| 29-முயற்சி | | 30-பழக்கவழக்கங்களி | | | 31-2 | 32-1 | 33-2 | 34-1 | 35-3 |
| 36-C | 37-D | 38-D | 39-C | 40-C | | | | | |

(புள்ளிகள் 40×2.5=100)

### பரீட்சை இல. 13 இன் வினாத்தாள் II இற்கான விடைகள்

**01**. 1. மழைக்காட்சி 2. கண்ணாடித் துண்டுகள் போல் 3. காகிதக்கப்பல் செய்து தண்ணீரில் மிதக்கவிட்டபோது 4. பால் தேநீர் போல்/ கண்ணாடித் துண்டுகள் போல் 5. மழை, தங்கை, கண்ணாடி, பால், தண்ணீர் 6. வெந்நீர் 7. தாழ்ந்தது 8. வினா 9. நகைத்தாள் 10 பால்+தேநீர்
**02**. 1. சூரியன் மாலை நேரத்தில் மேற்கே சென்று மறையும் 2. பாடசாலை யில் மாணவர் வரவு கூடுதலாகக் காணப்பட்டது. **03**.1. School 2. Tree 3.Table 4.Book **04.** 1. வைத்தியசாலை 2. திருக்குறள் 3.தாபாற்கந்தோர் 4. பூந்தோட்டம் **05.** 1. நங்கி 2. அம்ப 3. குருத்துமா 4. மேசய **06.** இணையம் **07.** புரதம் **08.** தேன் **09.** கல்வி **10.** குருத்தோலை **11**. பிழை **12.** சரி **13**. பிழை 14. பிழை **15**. சரி **16**. (4)இலங்கை மின்சாரசபை **17**. (2)வயலில் **18.** (2) மயில் **19.** (4) கண்டி **20**. (2)மாடு **21**. (2) நீரில் வாழும்போது அழித்தல் **22**. (3) 25 **23.** (4) 30ரூபா **24.** (4) பராக்கிரமபாகு **25**. (1) ரயில்வே கடவை **26.**(1) தோமஸ் அல்வா எடிசன் **27.** (2)ஆமை **28**. (4) தேனீ **29**. (1)கப்பி **30**. (2) சிகிரியா **31**. (1) ஆதர் சி.கிளாக் **32**. (1) கி.பி. 1505 **33.**(3) 10 ஆண்டுகள் **34.** (1) 3 , (2) 2, (3) 5, (4) 4 **35**. (2) கலாநிதி சி. டபிள்யு. கன்னங்கரா **36.** (1) தேக்கு/வேம்பு, (2) பாலை **37.** பாடசாலை வளவினுள் **38**. அதிபர் **39**. கொழும்பு நாமகள் வித்தியாலய மாணவர்களால் **40**. (1)நான்முகி (2) 1.iv 2.vi 3.iv **41.** ரூபாய் 180.00 **42.** ரூபா 9.00 **43.** ரூபா 120.00 **44.** 2kg சீனி/ 2m சீத்தை **45.** 2 1/2 kg **46.** ரூபாய் 284.00 **47.** 3 மணித்தியாலம் 45 நிமிடம் **48.** 5 பஸ்வண்டி **49.** [illegible] வியாழன்), (திங்கள்/ வெள்ளி) **51.** 100 **52.** ரூபா 12,750.00 **53.** ரூபாய் 300.00 ✱ பொருத்தமான வாக்கியத்திற்கு புள்ளி வழங்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஒகஸ்ட் 2011 வெள்ளிக்கிழமை

## ஐந்தாம் ஆண்டு நினைவினிலே...



அமரர்
**இரத்தினவேல் அகிலன்**

மண்ணில்: 08.08.1977
விண்ணில்: 08.08.2006

அன்புநிறை அகிலா
ஆனதுவோ ஐந்தாண்டு
ஆற்வில்லை எம்துயரம்
அகிலமதில் நின்பிரிவால்
இன்பமாக நீ வாழ்ந்த
வாழ்க்கையை
எண்ணுகையில்
எம்மிதயம் துடிக்கிறதே
இனியுனைக் காண்போமா?

156, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

## 17 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்:
07.01.1936

மறைவு:
21.07.1994

திதி: சதுர்த்தசி
(12.08.2011)

**அமரர் தம்பு துரைராசா**

அன்பின் திருவுருவே ஐயா - அணைத்தும்
அணையாத திருவிளக்கே ஐயா - நாம்
ஆண்டாண்டு தோறும் ஐயா - உங்களை நாம்
நினைத்திட என்றென்றும் - இப்புவியில்
நிலைத்திடச் செய்வீர்கள் ஐயா..!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்

சங்கானை கிழக்கு,
பண்டத்தரிப்பு,
பிரான்பற்று.

அன்பு மறவாத மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வீதிப் புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

நெடுந்தீவு, ஓக. 12

நெல்சிப் திட்டத்தின் கீழ் நெடுந் தீவில் உவாவடி தெற்கு மயான வீதி, காளாமுனை யாகப்பர் கோயில் கிழக்கு வீதி, முருகன் கோயில் கோபாலு பிட்டி வீதிகள் புனரமைக்கப்படவுள் ளன. இதற்கான ஆரம்பக்கட்ட வேலை கள் இடம்பெற்றுவருகின்றன. (ம-111)

## முதியோர் நிலையத்துக்கு கதிரைகள் அன்பளிப்பு

நாவலி, ஓக. 12

சாவற்கட்டு முதியோர் பகல் பரா மரிப்பு நிலையத்துக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் முகாமை யாளர் இ. இலட்சுமணசர்மா தனது தந் தையார் கந்தசாமி ஐயரின் ஞாப கார்த்த மாக ஒரு தொகை பிளாஸ்ரிக் கதி ரை களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (ம-100)

**ஸ்ரீ விநாயகர் ஜோதிடம்**

வெங்கடேஷ் சுவாமிகள் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரசித்தி பெற்ற ஜோதிட வல்லுனர் கைரேகை,ஜாதகம், திருமண யோகம், வியாபாரம், வெளிநாட்டுப்பயணம், கல்வி, குழந்தை பாக்கி யம், வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் இவரைச் சந்தித்து தீர்வு காணுங்கள்.

தொடர்பு இல. 112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 0773741117, 0771656527
நேரம்: காலை 7 மணிமுதல் மாலை 7 மணிவரை. கட்டணம்- 101/-

**கடைகள் வாடகைக்கு உண்டு**

சுன்னாகம், கே.கே.எஸ். வீதியில் கிழக்குப் பக்கமாக பொது சன நூலகத்துக்கு முன்பாக உள்ள புதிய கட்டடத் தொகுதியில் உள்ள கடைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு-
0771342830, 0773740773

தொழில் புரிவோர்க்கான மற்றும் பாடசாலை மாணவர்களுக்குமான பகுதி நேர கணினி வகுப்புக்கள் ஆரம்பமாகிறன

IDM
Affiliated Campus
Jaffna Branch

* DIBM
* Dip in ICT
* CCNA

பதிவுகளுக்கு முந்துங்கள்
# 216 Navalar Road, Jaffna, Sri Lanka
T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம்:
20.10.1959

மறைவு:
13.07.2011

ஆண்டது கரவருட அழகு மிகு ஆடித் திங்கள் இருபத்தெட்டில்
பூண்ட அபர திரயோதசி மிளிர-நல்விவேகமிக்க
விவேகானந்தனும் இப்பூவுலகை விட்டகன்று
பரமனடி சேரந்தான் காண்

கடந்த 13.07.2011 புதன்கிழமை சிவபதமடைந்த எமது புதல்வன்

**அமரர் சிவலிங்கம் விவேகானந்தன் (பாப்பா)**

[கொழும்பு கதிரேசன் வீதி, கதிரேசன் மண்டபம், கல்போத்த வீதி-கோட்டாஞ்சேனை]

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (12.08.2011) வெள்ளிக்கிழமை எமது கோண்டாவில் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் வ்ருகைதந்து நிகழ்வுகளில் கலந்து கொண்டும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துரைவீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

பூபதி குடும்பத்தினர்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு:
01.09.1920

உதிர்வு:
14.07.2011



திருமதி
**வேலுப்பிள்ளை சின்னம்மா**

எம்மோடு வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் அம்மா
வையத்துள் உங்கள் நாமம்
வாழ்ந்திடுமே எந்நாளும்
ஏங்கி அழும் சொந்தங்கள்
நெஞ்சங்களைத் தேற்றிட
ஏதோ ஓர் உறவில்
எம்மிடம் வருவீர்கள் அம்மா

நாளை (13.08.2011) சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று அஸ்தி செல்வச்சந்நிதி கடலில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து 14.08.2011 ஞாயிற்றுக்கிழமை சபிண்டீகரணம் நடைபெற்று பின்பு மதியபோசனம் இடம்பெறும். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

...தோட்டம், கம்பர் மலை,
...ப்பிட்டி வடக்கு, வல்வெட்டித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூர போரின் மத்தியிலும் சேதமடையாதிருந்த நுணாவில் மத்தி கந்தசுவாமி ஆலயம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நுணாவில் மக்களை காவல் காத்து அருளாட்சி செய்துவரும் நுணாவில் மத்தி கந்தசுவாமி ஆலயம் அந்தப் பகுதி மக்களின் முயற்சியால் சிறு குடிசையில் இருந்து கட்டடங்கள் கொண்ட ஆலய மாகத் தோற்றம் பெறலாயிற்று.

இவ்வாறு பெரிய கோயிலாக வளர்ச் சியடைந்த ஆலயத்தில் தேர் இழுக்க வேண்டும் என்று மக்கள் பெருவிருப் புக் கொண்டனர்.

அந்த வகையில் ஆலய தர்மகர்த் தாவின் முயற்சியாலும் பக்தர்களின் முயற்சியாலும் தேர்த் திருப்பணிச்சபை 1996 இல் ஆரம்பிக்கப்பட்டது. மக்களின் முயற்சியினாலும் முருகனின் திருவருளி னாலும் தேர் வேலைகள் விரைவில் முடிவுற்றதால் 1997 ஆம் ஆண்டு பங்குனி மாதம் சாந்தீக மகோற்சவமாக ஆரம் பித்து தேர்த்திருவிழா முதன் முறையாக நடைபெற்றது.



2000 ஆம் ஆண்டு ஆலய பெருந் திருவிழா முடிந்த ஒரு மாதத்தில் தொடங் கிய வன்செயல்கள் காரணமாக பிரதேச மக்கள் தங்கள் சொந்த இடங் களையெல்லாம் கைவிட்டு எங்கோ எல்லாம் தஞ்சம் புகுந்தனர். ஆலய அர்ச்சகர் குடும்பம் ஆவரங்காலில் தியாகராஜக் குருக் கள் வீட்டில் தங்கி யிருந்தது.

2002 ஆம் ஆண்டு பிரதேச மக்களை வீடுகள் பார்வையிட அனு மதிக்கப்பட்ட போது ஆலய அர்ச்சகர் ரவி ஐயாவுடன் வந்த ஊர் மக்கள் ஆலய த்தைப் பார்த்து பிரமிப்படைந்தனர். அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் பலத்த சேதங்களுக்கு உள்ளாகி உடைமைகளும் அபகரிக்கப்பட்டிருந்ததைக் கண்டு வேதனை யடைந்தனர். எனினும் காக்கும் தெய் வமான வைரவப் பெருமானின் திருவரு ளினால் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த அனைத்துப் பொருள்களும் வைக்கப் பட்டிருந்த இடத்திலேயே இருந்தன. ஆலய கட்டடங்களில் சிறு சேதங்கள் ஏற்பட்டிருந்ததை தவிர திருவுருவச் சிலைகளுக்கோ, கோயிலின் விமானங் களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படாது காக்கும் முருகப் பெருமானினதும் வைர வப் பெருமானினதும் அருளை எண்ணி வியப்படைந்தனர். அதன்பின் வாரம் ஒரு தடவை ஆவரங்காலில் இருந்துவரும் ரவி ஐயா ஆலயத்துக்கு வந்து அங்கிருந்த விலை மதிப்பான பொருள்களையெல் லாம் எடுத்துச் சென்று ஆவரங்காலில் வைத்துப் பாதுகாத்தார்.

(தொடரும்)

ஐயந்தன்



# நல்லூர் கந்தன்

## மஹோற்சவம் (ஒன்பதாம் திருவிழா)

### இனியொரு பயமில்லை

ஆண்டியின் கோலமே தெரிகிறது– அவன்
ஆடிய ஆடலும் புரிகிறது
வேண்டிய நலமெல்லாம் குவிகிறது – அந்த
வீரனின் அருள்நலம் கிடைக்கின்றது
இனியொரு பயமில்லை வாழ்க்கையிலே – அந்த
இனியவன் திருமுகம் நோக்கையிலே
கனிதரு வான் நலம் சேர்த்திடுவான் – நெஞ்சக்
கவலையை மறப்போமே நல்லூரிலே

கவிஞர் செ.பரமநாதன், மண்டைதீவு

### நல்லருள்தா நல்லைக் கந்தா....

நல்லையம் பதியிலே நாடுபோற்ற வீற்றிருந்து
நற்கருணை புரிந்து வரும் – முருகா
எல்லையில்லா பெருமைகளோடு ஏற்றம் பெற்று
எண் திசையும் புகழ்பரப்பி நிற்கும் – மால் மருகா
தொல்லை வினை தீர்ப்பாய் என்று உன் அடியார்கள்
தொலைதூரம் இருந்து வந்து துதிக்கின்றனர் – வேலா
இல்லை என்னாது எழில்மிகு மஞ்சம் மீது அமர்ந்து அடியவர்கள்
இன்முகத்துடன் வாழ நல்லருள் தா– நல்லைக் கந்தா

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு

விழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:

**சந்தியா மல்ரி கோட்யாட்**

இல. 531, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6960

# பிரமாண்டமான ஆலயமாகி வரும் கொடிகாமம் காளியம்மன் கோயில்

கொடிகாமம் சந்தை வீதியில் குடும்பக் கோயி லாக நீண்ட காலமாக காணப்பட்ட காளி கோயில் இன்று தென்மராட்சிப் பிரதேசத்தில் சிற்பக் கலை களுடன் பல மில்லியன் ரூபா செலவில் வடி வமைக்கப்பட்டு வருகிறது. ஒன்பதரைப் பரப்புக் காணியின் மூலையில் சிறிய கொட்டிலில் வாரம் ஒரு தடவை விளக்கு வைத்து பராமரிக்கப்பட்ட இந்தக் கோயில் ஒன்பதரைப் பரப்புக்குள் புதிய வடிவத் தில் இந்திய சிற்பாசிரியர்களால் உருவாக்கப் பட்டு வருகிறது.

நீண்ட காலமாக ஒரு குடும்பத்தினர் தமது காணி யின் மூலையில் ஒரு சிறு கொட்டில் அமைத்து அதில் காளி அம்பாள் படம் வைத்து வெள்ளிக் கிழமை தோறும் விளக்கு வைத்து வழிபட்டு வந்தனர். இந்தக்காணி சீதனமாக வழங்கப்பட்ட துரைராசா தவமணி என்பவருக்குக் காளியின் அருளால் குடும்பத்துடன் ஜேர்மன் நாட்டுக்குச் செல்லும் வாய்ப்புக்கிடைத்தது. 30 வருடங் களுக்கு முன்னர் அங்கு சென்று விட்டார். ஜேர்மன் நாட்டில் இருந்த போதிலும் தமது குலதெய் வத்தை மறக்காத இந்தப் பெண் ஆலய வழிபாட் டுக்குரிய நிதியை அனுப்பி உறவினர்கள் மூலம் வாராந்தம் ஆலயத்தில் பூஜைகள் செய்து வந்தார்.

நாட்டின் யுத்தம் ஓய்ந்து இயல்பு நிலை திரும் பிய வேளையில் குல தெய்வமான காளி அம்ம னுக்கு பிரமாண்டமான ஆலயம் அமைக்க வேண்டுமென ஆவல் பெண்ணுக்கு ஏற்பட்டது. அவ்வேளை யில் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான சிவாச் சாரியார் ஜோதிட ஆலோசகர் கலாநிதி து.கு.ஜெக தீஸ்வரக் குருக்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆலயம் அமைப்பது தொடர்பாக உரையாடினார்.

தனக்கு உள்ள வேலைப்பளு காரணமாகத் தன்னால் மேற்கொள்ள முடியாத குருக்கள் அவர்கள் நுணாவில் குளம் கண்ணகை ஆம்பாள் ஆலயக் குரு கைலாசநாத ஐயர் ஜெயந் திநாதசர் மாவிடம் அப்பொறுப்பை கொடுக்குமாறும் தனது வழிகாட்டலில் ஆகமவிதிப்படி ஆலயத்தை அமைத்துத் தருவதாகவும் வாக்குறுதியளித்தார்.

ஆலயம் அமைப்பதற்குரிய அற்ரோணி தத்துவத் தினை கைலாசநாத ஐயர் ஜெயந்திநாதசர்மா வுக்கு வழங்கி ஆரம்பப் பணிகளுக்கான நிதியையும் அனுப்பி வைத்தார். ஆலயத்தின் மூலஸ்தானம் அமைப்பதற்கான இடத்தினைத் தெரிவு செய்வ தற்காக கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் சென்று பார்வையிட்டுக் கொண்டி ருந்த வேளையில் பெண்ணின் கணவனான துரைராசா விடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. உரை யாடிக்கொண்டிருந்த வேளையில் திடீரென உருப் பெற்ற திருமதி தவமணி தனக்கு ஆலயம் அமைக் கவுள்ள இடத்தைக் குறிப்பிட்டு அந்த இடத்தில் அமைக்குமாறு அவரது கணவரிடம் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு ஆலய நிர்மாணத்துக்கான அடிக்கல் சிவாச்சாரியார்களின் வேத ஒலி முழங்க இடப்பட்டது. அதைத் தொடர்ந்து மூல விக்கிரக ஆலயத்துக்கான கட்டட வேலைக்குரிய அடிக்கல் நடப்பட்டு வேலைகள் நடை பெற்று வருகின்றன.

இந்திய சிற்ப கலைஞர்களினால் வேலைகள் நடைபெற்று வருகின்றன. மூலஸ்தானத் திருத்தலத் துக்கு மூன்று தள விமானம் அமைக் கப்பட்டு 50 சிற்பங்களுடன். மூன்று கலசங்கள் பொருத்துவதற்கான வேலை கள் நடைபெற்று வருகின்றன.

அமைக்கப்படும் கர்ண கூட்டுசாலை யில் 108 வடிவங்களுடன் கூடிய காளி அம்பாள் சிலைகள் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. பரிவார மூர்த்திகளாகப் பிள்ளையார், முருகன் ஆலயங்களும் மடப்பள்ளி குருவாசம், களஞ்சிய அறை உட்பட ஆகம முறையிலான ஆலயத்துக் குரிய அனைத்து கட்டடங்களும் அமைக் கப்பட்டு வருகின்றன. 33 அங்குல அள விலான காளிசிலையும் 25 அங்குல பிள் ளையார் சிலையும் அமைக்கப்பட்டு வரு கின்றன. ஆலயத்துக்கு இலகுவாகச் செல்ல கூடியக் வகையில் பருத்தித்துறை வீதி யில் உள்ள குளத்துக்கு அருகில் புதிய வீதி அமைப்பதற்கான வேலையும் நடைபெற்று வருகின்றது. ★

**மலிவு விற்பனை**

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளிர் சாதனப் பெட்டிகள் Sony wega flat (மேல்பட்டன்), TVகள் AR 25"-16000/=, HW,BZ-18000/=, TG21-14000/=, G21Q1-11000/= BOX அம்பிளிபயர், DVD என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு:- 0770440570, 0778449829 R.மகேஸ்வரன் (அப்பளக்கொம்பனி), ஆரம்ப பாடசாலை அருகில் (சீனிப்புளியடி),K.K.S. வீதி, இணுவில்.



**சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார்**

**வருடாந்த மஹோற்சவம் 2011** (தேர்த் திருவிழா)

சித்திர ரத்தின விசித்திர ரூபனே வடிவுமிகு
முக பத்திர காஸ்திர தேர் ஏறி திருக்காட்சி தரும்
காத்திரப் பொருளே கணபதியே கருணா சாகரமே
ஊர்த்துவ நவதின உற்சவத்தில் கொடுவினை யாவும் கெடுப்பாயே

- தி.சிவதட்சணாமூர்த்தி (சங்கை சிவம்)

சிறப்புற பிரார்த்திப்போர்:

சின்னத்துரை சூரைத்தினம், சூரைத்தினம் அன்னலட்சுமி குடும்பத்தினர், நினைவாக ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.



அளவெட்டி - நாகேஸ்வரம்

**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

13.08.2011 - 24.08.2011

**விசேட விழாக்கள்**

13.08.2011 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணி கொடியேற்றம்
20.08.2011 சனிக்கிழமை பிற்பகல் 07.00 மணி கைலாச வாகனம்
21.08.2011 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 07.30 மணி சப்பறம்
22.08.2011 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணி தேர்
22.08.2011 திங்கட்கிழமை பிற்பகல் 07.30 மணி உறியடி
23.08.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணி ஸ்ரீரங்கநாதர் பாதபூஜை
23.08.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணி தீர்த்தம்
24.08.2011 புதன்கிழமை முற்பகல் 08.30 மணி ஆஞ்சநேயர், வைரவர் பொங்கல்
24.08.2011 புதன்கிழமை பிற்பகல் 04.00 மணி திருக்கல்யாணம்

"... நாராயணர் திருவருள் பெறுக"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக மட்டத்திலான விசாரணையை இலங்கை எதிர்கொள்ள வேண்டி வரும்


## அமெரிக்கா மீண்டும் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.12

மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக அனைத்துலக மட்டத்திலான நம்பகரமான விசாரணைகளை இலங்கை மேற்கொள்ளத் தவறினால், அனைத்துலக நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று அமெரிக்கா மீண்டும் ஒருதடவை எச்சரித்துள்ளது.

நியுயோர்க்கில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்ரோரியா நுலன்ட் அம்மையார் நாளாந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

இலங்கையில் அனைத்துலக மனிதஉரிமைச் சட்டங்களும், மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்பட்டது தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து நீதியான விசாரணை நடத்தப்படுவதற்கே அமெரிக்கா ஆதரவளிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.



அனைத்துலக மட்டத்திலான விசாரணைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றே அமெரிக்கா விரும்புவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அது அனைத்துலக தரத்துக்கேற்ப இருக்க வேண்டியது இலங்கையின் தற்போதைய பொறுப்பு என்றும்அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை அரசு உடனடியாக இதைச் செய்ய வேண்டும் என்று அமெரிக்கா தொடர்ச்சியாக வலியுறுத்தி வருவதாக குறிப்பிட்ட அவர் , இலங்கை அரசு அதைச் செய்யும் என்று அமெரிக்கா நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இலங்கை அரசு விசாரணைகளை நடத்தத் தவறினால், அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (ச)

# சொத்தை சூறையாடிய பொலிஸ் அதிகாரி

கொழும்பு, ஓக. 12

நீர்கொழும்பில் கைதியொருவரின் சொத்துக்களை கொள்ளையிட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமறைவாகியுள்ளார்.

கைதி ஒருவரிடமிருந்து 20 லட்சம் ரூபா பணத்தையும் தங்க ஆபரணத்தையும் இந்தப் பொலிஸ் உயரதிகாரி கொள்ளையிட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

சம்பவத்துடன் தொடர்புடைய நீர்கொழும்பு பொலிஸ்நிலையத்தின் பொறுப்பதிகாரியை தேடுவதற்காக விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

போலியான முறையில் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி இந்த நபரைத் தடுப்புக்காவலில் வைத்து, பணம் மற்றும் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

கொள்ளையிடப்பட்ட பணம், தங்கம் மற்றும் இரத்தினக்கல் ஆபரணங்கள் கைதாகிய மற்றொரு பொலிஸ் அதிகாரிக்குச் சொந்தமானவை என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (ச)

# அரசின் பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை அமெ. கவனத்தில் கொள்ளவில்லை

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்

கடந்த மாதங்களில் அரசு மேற்கொண்ட பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை அமெரிக்கா கவனத்திற்கொள்ளவில்லை என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற வேளையில் முன்னெடுக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகத்துக்கு நாங்கள் நிரூபித்துள்ளோம். ஒவ்வொரு கேள்விக்கும் நாங்கள் பதிலளித்துள்ளோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அரசு மேற்கொண்ட பொறுப்புக்கூறும் நடவடிக்கைகள் பற்றி அமெரிக்காவுக்கு இலங்கை நேரடியாக அறிவிக்கவில்லையென அவர் தெரிவித்துள்ளார். இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நாம் பல தடவை பதில் கூறிவிட்டோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் இறுதி எச்சரிக்கையை அரசு சிறு விடயமாகக் கருதவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

ISUZU
Global Leader

உலகின் முன்னணி ISUZU நிறுவனம் மற்றும் NDB லீசிங் இணைந்து வழங்கும்

ஓர் வியப்பூட்டும் சலுகை!




NDB வங்கி சதொச மோட்டர்ஸ் உடன் இணைந்து, ISUZU ட்ரக் ஒன்றினை விசேட லீசிங் மூலம் கொள்வனவு செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்பினை வழங்குகின்றது!*

- ரூ. 50,000/- வரையான விலைக் கழிவு
- விசேட குறைந்த வட்டி வீதம் மற்றும் முன்னதாக பணத்தை செலுத்தி முடிக்கும்பொழுது மேலதிக அனுகூலங்கள்
- 2 வருடங்கள் அல்லது 40,000 Km க்கான உத்தரவாதம்
- காப்புறுதி தொடர்பாக விசேட விலைக் கழிவு
- என்ஜின் மீது 100,000 Km வரையான உத்தரவாதம் (சதொச மோட்டர்ஸ் மூலம் பராமரிக்கப்படல் வேண்டும்)
- 6 கூலியற்ற இலவச சேவை (தேவையான உதிரிப்பாகங்கள் தொடர்பாக மட்டுமே கட்டணம் அறவிடப்படும்)
- இலவச NDB வங்கி கடனட்டை

6 வருடங்கள் வரையான மீள் செலுத்தும் காலம்

இந்தச் சலுகை
2011 ஜூலை 1 முதல் ஆகஸ்ட் 31 வரை மட்டுமே!

ஜப்பானிய தயாரிப்பு

மாதாந்த தவணைக் கட்டணம் VAT அடங்கலாக ரூ.1,985/- முதல் (ரூ.100,000/-,க்கு)

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

PHOENIX O&M

SML
Sathosa Motors PLC

தலைமைக் காரியாலயம்: கொழும்பு 02.
011 2 32 73 60, 011 4 71 40 77

விநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாணம்: தொலைபேசி: 0213 207042
அம்பாறை: தொலைபேசி: 0773 314548

அழையுங்கள்:
0779 419 000, 0777 420 442
0777 354 155, 0777 420 491

NDB வங்கி:
011 2 44 88 88

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீட்பதை விட ராமேஸ்வரம் கடற்கரையை மீட்பதே அவசியமாகும்

## தமிழக அரசுக்கு மீனவர்கள் கோரிக்கை

ராமேஸ்வரம், ஓக.12

இலங்கையிடம் தாரை வார்க்கப்பட்ட கச்சதீவை மீட்பதற்கு முன்னர் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்து வரும் ராமேஸ்வரம் கடற்கரையை மீட்டுத்தர வேண்டும் என்று ராமேஸ்வரம் மீனவர்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து மீனவர்கள் விடுத்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பல நூற்றாண்டுளாக, ராமேஸ்வரம் தீவில் உள்ள கடற்கரை கிராமங்களின் கரையை அண்மித்துள்ள பகுதியில் மீன்பிடி வலைகளையும், பொருள்களையும், கட்டுமரங்களையும் வைத்து கரையோர கிராம மீனவர்கள் பராமரித்து வருகின்றனர்.

ராமேஸ்வரம் அக்னிதீர்த்தக் கடற்கரைக்கு அருகில் ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள சங்குமால்-ஒலைக்குடா மீனவ கிராம மக்களை கடற்கரையில் இருந்து முற்றிலுமாக வெளியேற்ற பல்வேறு சக்திகள் முயன்று வருகின்றன. அவர்களின் நடவடிக்கையால் இந்தப்பகுதி கடற்கரையோர பூர்வீக மீனவர்கள் மிகுந்த துயரம் அடைந்து வருகின்றனர்.

சங்குமால் கடற்கரை- சங்குமால்-ஓலைக்குடா, வடகாடு, மாங்காடு, சம்பை, சேராங்கோட்டை, கரையூர், தங்கச்சி மடம், பாம்பன், கீழக்கரை, ஏர் வாடி மற்றும் பல இடங்கள் மீனவர்களின் பயன்பாட்டில் தான் உள்ளன.

குறிப்பாக கடற்கரையோர மக்களின் குடிசைகளை அகற்றி ராமேஸ்வரம் நகரசபை, சிறுவர் பூங்கா அமைக்க முயன்று வருகின்றது.

சிறுவர் பூங்கா அமைத்ததால், கடற்கரையைச் சுற்றி வேலி அமைத்து, மீனவர்கள் நீண்ட தூரம் சுற்றி கடலுக்குச் செல்லும் நிலை ஏற்படும். எனவே, சங்குமால் மீனவர் தொகுப்பு வீடுகள் கட்டாமல் மீனவர்களை வெளியேற்றுவது நியாமற்ற செயல் என, மீனவர்கள் தரப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மேற்கண்ட கோரிக்கைகளை முன்வைத்தும், மீனவ மக்களைக் காப்பாற்றக் கோரியும், அனைத்துக் கட்சி சார்பில் ராமேஸ்வரம் நகர சபை முன்பாக கண்டனப் போராட்டம் நடந்தது. இதில் 100 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கலந்து கொண்டு நகராட்சியின் இந்த செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்து ஆர்பாட்டம் நடத்தினர். மேலும், இந்த கோரிக்கையை அனைத்து கட்சி சார்பில் தமிழக அரசுக்கு அனுப்பி வைத்துள்ளனர். (வ)

# ராஜீவ் கொலைக்குற்றவாளிகளின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன

டில்லி, ஓக.12

கடந்த 1991 ஆம் ஆண்டு திருப்பெதும்புதூரில் கொலை செய்யப்பட்ட ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி ஆகியோரின் கருணை மனுக்கள்நிராகரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி மனு தொடர்பாக உரிய அறிவுரை கேட்டு கருணை மனுக்களை மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் அனுப்பி வைத்தார். இந்தநிலையில் முருகன், சாந்தன், பேரறிவாளன், அப்சல்குரு ஆகிய நால்வருக்கும் கருணை காட்டக்கூடாது என்றும் அவர்களுக்கு உடனடியாக மரண தண்டனைவிதிக்கப்பட வேண்டும் ஜனாதிபதிக்கு உள்துறை அமைச்சகம் பரிந்துரைத்திருக்கின்றது.

ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த தடா நீதிமன்றம் தூக்குத் தண்டனை விதித்தது. பின்னர் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக் கப்பட்டது.

இந்தநிலையில் கடந்த 2002 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தாக்குதல் குற்றவாளியான அப்சல் குரு உள்ளிட்ட தண்டனைக் கைதிகள் ஜனாதிபதி பிரதீபா பாட்டீலுக்கு கருணை காட்டுமாறு மனுக் கொடுத்திருந்தனர்.

மத்திய உள்துறை அமைச்சரான ப.சிதமபரமே இந்த உத்தரவுகளை பிறப்பித்திருக்கிறார். ஆனாலும் மத்தியில் பிஜேபி கட்சியின் நெருக்கடிக்காவே இந்த முடிவை உள்துறை



அமைச்சர் சிதம்பரம் எடுத்திருந்தாலும், ராஜீவ் கொலை விடயத்தில் அதுவும் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் ராஜீவ் கொலையாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதிப்பதற்கான அழுத்தங்களை எந்த கட்சிகளும் கொடுக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைத் தமிழர் படுகொலைக்கு கருணாநிதியும் காரணம்: பண்ருட்டி

சென்னை, ஓக.12

இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப் பட்டமைக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதியும் காரணமாவார் என்று தே.மு.தி.க. அவைத்தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழக சட்டமன்றக் கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினைகள் குறித்து விவாதங்கள் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன்போது பேசுகையிலேயே அவர் மேற்கண்ட குற்றச் சாட்டை முன்வைத்தார்.

## ஈழத்தமிழர்களுக்கு தனி நாடு தீர்மானம் நிறைவேற்றுக

இலங்கையில் தமிழர்களுக்கு தனி நாடு அமைக்கும் தீர்மானத்தை முதல்வர் ஜெயலலிதா சட்டப் பேரவையில் நிறைவேற்ற வேண்டும் என பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் ஜெ.குரு வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் சட்டப் பேரவை கூடியபோது அதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானங்களை வரவேற்பதாகவும் அதனை நிறைவேற்ற மத்திய அரசை முதல்வர் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/பளை மத்திய கல்லூரி
# புதிய கட்டடத் திறப்பு விழா






## எங்கள் நல்வாழ்த்துக்கள்

கிளி / பளை மத்திய கல்லூரியின் புதிய கட்டடத் திறப்பு விழா ஆவணி 12ஆம் திகதி வைப்பதாக அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் திருவடியில் சாஷ்டாங்கமாக வணங்கி இக் கல்விக்கூடம் என்றும் சிறப்புற விளங்க அன்னையிடம் மனதார வேண்டுகிறோம்.

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடல்ல மற்றை யவை" [திருக்குறள்]*

இறைபணியில் அன்புள்ள, அன்னையின் அடியவன்,
சுவாமி சித்ரூபானந்தா.

## மனநிறைவோடு வாழ்த்துகின்றோம்



பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் தாய்ப்பாடசாலையாக விளங்கும் கிளி/பளை மத்திய கல்லூரி 1952 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலை பல கல்வி மான்களை உருவாக்கிய தலைப் பெருமை அதற்குண்டு எனினும் 1996க்கு பின்னர் இக்கல்லூரி போர்ச் சுமைகளுக்கு முகம் கொடுத்து மாணவர்களுக்கு உரிய கல்வியை வழங்கி வந்தது.

2006 ஆம் ஆண்டு ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக பாடசாலை முற்றாக அழிக்கப்பட்டது. இதனால் மாணவர் கல்வி ஸ்தம்பிதம் அடைந்ததோடு, சொத்துக்கள், ஆவணங்களும் அழிக்கப்பட்டன. மீண்டும் 2010 இல் மீள ஆரம்பிக்கப்பட்டது. நிழலிலும் ஓலைக் கொட்டில்களிலும் மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.

குறுகிய காலப்பகுதிக்குள் அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் நிதி ஊட்டத்துடன் யுனிசெவ் நிறுவனத்தினரால் நவீன வசதிகளுடன் கட்டடத் தொகுதி அமைக்கப்பெற்று கிளிநொச்சி மாவட்டத்திலே தலை நிமிர்ந்து புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கின்றது. இக்கல்லூரி மேன்மேலும் வளர்ச்சி அடைவதுடன் மாணவர்களின் கற்றல் செயல்பாடுகளும் மேலோங்கி வளர எனது வாழ்த்துக்களையும், ஆசியையும் கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

க.குணபாலசிங்கம், அதிபர்



## உளமார வாழ்த்துகின்றேன்

மிருசுவில் பங்குத்தந்தையாகிய நான் கடந்த 5 வருட இடப்பெயர்வுகளுக்குப் பின் புதிதாக கட்டட நிர்மாணப்பணிகள் நடைபெற்று இப்பாடசாலை திறந்து வைக்கின்ற இந்த பொன்னான நாளிலே கிளி/பளை மத்திய கல்லூரிச் சமூகத் தினரை மகிழ்ச்சியோடு உளமார வாழ்த்துகிறேன். பலவிதமான இடப்பெயர்வுகள் நெருக்கடிகள், வசதியின்மைகள் மத்தியிலும் தரம் வாய்ந்த ஒரு பாடசாலையாக விளங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். எதிர்கால கல்வி சமூகத்தை உருவாக்கும் உயர்ந்த உன்னதமான பணியிலே ஈடுபடும் அனைவரையும் இறைவன் தனது அருளால் வழிநடத்த வேண்டும் என்று ஆசிக்கின்றேன்.

அருட்பணி ம. பத்திநாதர்
புனித் நீக்கிலார் ஆலயம், மிருசுவில் பங்கு.

## புதிய நம்பிக்கை தருகின்றது



எமது சமூகத்தை அழிந்ததிலிருந்து ஆக்கத்தின் பாதையில் அழைத்துச் செல்லும் எங்களுடைய பயணத்தின் மேலுமொரு அடையாளமாக கிளி/ பளை மத்திய கல்லூரியின் மீளமைப்புப் பணிகள் அமைந்துள்ளன. தமிழ் பேசும் சமூகத்தினரைக் கடுமையாகப் பாதித்த பெரும் போரினால், பச்சிலைப்பள்ளிப் பிரதேசமும் அழிவடைந்தது. எனினும் போர் முடிந்த பின்னர் எம்மால் முன்னெடுக்கப்பட்டு வரும் துரித அபிவிருத்திப் பணிகளின் மூலம் இந்தப் பிரதேசம் மீண்டும் புதிய வளர்ச்சி நிலைக்குக் கொண்டு வரப்படுகிறது.

இந்த வகையில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் தாய்ப் பாடசாலையாக இருக்கும் பளை மத்திய கல்லூரி இப்பொழுது முழுமையாக மீளமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இந்த பிரதேச மக்களின் கைகளில் வழங்கப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அதேவேளை இந்த பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளின் முன்னேற்றத்துக்கு பாடசாலையின் அதிபரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் கல்லூரியின் பழைய மாணவர்களும், பிரதேச மக்களும் ஒருங்கிணைந்து நின்று கடுமையாக உழைக்க வேண்டு என்பதை வலியுறுத்துகின்றேன்.

தமிழ் மக்களின் பெயரால் நடத்தப்பட்ட கொடிய போரில் எமது மக்கள் உயிர்கள், சொத்துக்கள், வளங்கள் என ஈடுசெய்யமுடியாத பெரும் இழப்புக் களைச் செய்துள்ளனர். இழக்கப்பட்டவைகளில் உயிர்களைத் தவிர ஏனைய அனைத்தையும் மீண்டும் பெற்றுக்கொள்வோம் என்ற உறுதிப் பாட்டை முன்மொழியும் அதேவேளை எமது இந்த உயரியதும் கடியமான துமான முயற்சியில் மக்களும் இணைந்து கொள்ள வேண்டும். சோர்ந்து விடாத முயற்சி செய்தால் கட்டம் கட்டமாக வெற்றிகளைப் பெற முடியும். அதற்கு சிறந்த சான்றாகவே இந்தக் கல்லூரியின் மீளமைக்கப்பட்ட வள நிலையங் களைத் திறந்து வைக்கும் நிகழ்வைக் காண்கின்றோம்.

என்றும் மக்கள் சேவையிலுள்ள கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சு)



## Message From Hon Governor, Northern Province

I have a great pleasure in extending my appreciation on the opening ceremony of the rebuilt school, Kn\ Pallai Central College, under the " Vadakkin Vasantham' program with the funding of Aus Aid throuugh UNICEF.

I was really to see the new school complex in place of the old destroyed one With the resettlement in Pachchilaipalli Division educatoin activities in the school commenced in Temporary Learning shelters.On the requirement of the government UNICEFhas agreed to the College from the expected norms with the funding from AusAID the college was rebuilt within a record period of four months with classrooms and high order spaces with modern architecture .

I am very proud of opening the college and hand over to the children of pachchilaipalli division with the expectation of achieving high in education and co-curricular activities in the near future. I sincerely thank UNICEF and specifically the people of Australia for the generous funding.

I congratulate principal staff members students and the school society to have maximum benefit out the newly built college.

**Wish you all the very best.**
**HON.G.A.Chandrasiri**
**Governor,Northern Province**

## Message from the Australian High Commissioner

It is my great pleasure to send this message on the occasion of the ceremonial opening of the reconstructed Pallai Central College in Kilinochchi.

Education is a foundation for individual achievement and success. Pallai Central College has over the years played a vital role in the education of children in this community, being one of the largest schools in the district and the only feeder school in the area with class rooms from grades 1 up to Advanced Level. The School was largely destroyed as a consequence of decades of conflict that caused such suffering in the lives of so many Sri Lankans.

When the Australian Govern ment of Sri Lanka, stepped in to fund the reconstruction of this school, it could only cater to around 800 students under poor conditions. Most classes were conducted in the open air, water and sanitation facilities were limited and teaching staff were unable to conduct full days of learning.

The new structures that have been constructed will provide abetter learning environment with larger classrooms and improved facilities. It will help create an inclusive, healthy and protective school for up to 1,500 children in the community. this will allow Pallai Central College to once again play its central role in this district as a leading educational institution.

The Australian Government is proud to have been a partner in the progress of this school. I convey my best wishes to all students and their families and wish you every success, and peace and security, in the future.

Kathy Klugman

## புதுப் பொலிவில் புளகாங்கிதம்



பளை மத்திய கல்லூரி புதுப்பொழிவு பெறுவது கண்டு முதலில் மகிழ்ச்சி. பச்சிலைப் பள்ளியின் கல்விக்கலங்கரையாக விளங்கும் இப்பள்ளியின் வரலாற்றில் போர் தந்த காயங்கள் ஏராளம். போர்க்களத்தில் தன் வாழ்நாளை கடந்த பாடசாலை என்றே இதைச் சொல்லலாம். ஆயினும் அதன் மிடுக்கு எப்போதும் குறைந்ததில்லை. கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வித் தரத்தை பறைசாற்றுகின்ற அடையாளங்களில் பளை மத்திய கல்லூரிக்கும் தனி முத்திரை உண்டு. இப்பள்ளியின் அதிபர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு, மாணவர்களின் பாடசாலைப் பற்று பெற்றோர் நலன் விரும்பிகளின் தோள்கொடுப்பு என்பன பளை மத்தியகல்லூரியை வீழாது காத்த போதும் போரினால் ஏற்பட்ட கட்டட அழிவுகள் பௌதீக வளமின்மைகள் பெரும் வலியாக சுமையாக இப்பாடசாலையை இடர்ப்படுத்தியது என்பது யதார்த்தம். இப்போது அவுஸ்ரேலிய நிதியூட்டத்துடன் யுனிசெவ் அனுசரணையுடன் அந்த இடர்தீர்கின்ற து. இரண்டு புதிய மாடிக் கட்டடத்தொகுதிகள் புனரமைக்கப்பட்ட புதிய கட்டடம் என பாடசாலையின் பௌதீக வளத்திற்கு பலமாக வரையாக்கப்பட்டுள்ளது. மிகவும் மகிழ்ச்சி. உதவிய உள்ளங்களுக்கு மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] கள். புதிய கட்டடத்திறப்பு விழா மகிழ்ச்சியில் கலந்திருக்கும் பாடசாலைச் சமூகத்தோடு நாங்களும் இணைந்து கொள்கிறோம்.

அன்புடன் சிவஞானம் சிறீதரன் (நாடாளுமன்ற உறுப்பினர் யாழ். மாவட்டம்).

## Message from UNICEF, Sri Lanka

UNICEF has been working throughout the nation as one of the Government of Sri Lanka's principal development partners since 1969. UNICEF operates in more than 100 district secretariat divisions in the areas of health, education, water and sanitation, and the protection of vulnerable children.

UNICEF is very happy to be able to reconstruct Kn/Pallai Central College. These new structures will provide a better learning environment with larger class rooms, water and sanitation facilities, better equipment and more play space to over 1500 students from grades 1 up to Advance Level. UNICEF has ensured that this 'child - friendly' approach is applied to all school reconstruction and it also serves as a model for modern educa tional standards across to nation. This is a UNICEF developed framework for rights-based,

child-friendly educational systems and schools that are characterized as "inclusive, healthy and protective for all children, effective with children, and involved with families and communities - and children".

This is a project developed together with AusAID in cooperation with Ministry of Education. UNICEF has support ed the school during the early stages of re-settlement by providing temporary classrooms, furniture, learning materials, bags and bottles. UNICEF is very happy to be able to continue this partnership and bring about much needed change in this school. UNICEF wishes you all the best in your endeavors.

## மிக்க மகிழ்கின்றேன்



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் கல்வி மையமாக இருக்கும் பளை மத்திய கல்லூரி, மீண்டும் புதிய வளங்களுடன் நிமிரத் தொடங்கியிருப்பதையிட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த ப் பாடசாலை எமது மாவட்டத்தில் ஒரு முன்னணிப் பாடசாலையாக வளர்ச்சியடைய வாழ்த்துகிறேன்.


இந்தப் பாடசாலையின் பழைய மாணவராக இருந்த போது 25 ஆண்டு காலத்தின் பின்னரே மீண்டும் இந்தப் பாடசாலைக்கு என்னால் வருகை தர முடிந்தது. போருக்குப் பின்னர் மீண்டும் நான் இந்தப் பாடசாலைக்கு வருகை தந்தபோது, மரநிழல்களின் கீழும் சிறு கொட்டகைகளில் இருந்துமே மாணவர்கள் படித்துக் கொண்டிருந்தனர். அடிப்படை வசதிகளே அற்ற நிலையில் தான் ஆசிரியர்களும் அதிபரும் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். ஆனால், மிக விரைவாகவே இந்தப் பாடசாலையை நாம் புதிதாக அமைத்துத் தருவோம் என்று வழங்கிய வாக்குறுதிக்கமைய இப்போது இந்தப் பாடசாலைக்கான கட்டடங்கள் முதல் கற்றலுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை நாம் உருவாக்கியுள்ளோம். யாருமே எதிர்பாராத அளவில் இன்று இந்தப் பாடசாலைக்கான வளங்கள் இப்பொழுது அமையப்பெற்றுள்ளன.

பளைப் பிரதேசத்தின் தாய்பாடசாலையாக இருக்கும் இந்தப்பாடசாலை இந்தப் பிரதேசத்துக்கு ஆற்றிய கல்விச் சேவை பாராட்டத்தக்கது. நடந்து முடிந்த போர், இந்தப் பிரசேத்துக்கும் பிரதேசத்தின் மக்களுக்கும், அவர்களுடைய வாழ்க்கைக்கும் இந்தப் பாடசாலைக்கும் மிகப் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் போருக்குப் பின்னரான இந்த இரண்டாண்டு காலத்தில் எம்மால் உருவாக்கப்பட்ட அமைதி, அபிவிருத்தி, பிரதேச முன்னேற்றம் என்பதற்கான சான்றாக இந்தப் பிரதேசத்தின் முன்னேற்றங்களும் பாடசாலையின் இன்றைய வளர்ச்சியும் இந்தப் புதிய வளங்களும் அமைந்திருக்கின்றன. அழிவின் யுகமொன்று முடிவடைந்து ஆக்கத்தின் யுகமொன்று உருவாகியுள்ளது என்பதற்கான சான்றாக இதை விளங்கிக்கொள்ளலாம். ஆகவே இந்த ஆக்கத்தின் பாதையில், இந்த வளங்களைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் இந்தப் பாடசாலையின் மாணவர்கள் கல்வியிலும் ஆளுமையிலும் ஆற்றலிலும் சமூகப் பொறுப்புணர்வான நடவடிக்கைகளிலும் சிறந்து விளங்கி இந்தப் பிரதேசத்துக்கும் நாட்டுக்கும் பணியாற்ற வேண்டும் என்று விரும்புகிறேன்.

மு. சந்திரகுமார்
(நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித்தலைவரும்
பச்சிலைப்பள்ளிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும்)

## Message from Secretary, Ministry of Education, Cultural Affairs & Sports, Northern Province



It gives an immense pleasure to give message to the opening ceremony of newly constructed school which was completely damaged during due to the confrontatoin the last decide.

About 1000 students who displaced were provided an opportunity to restart the education in the village they were living.After the resettlement UNICEF has come for assistant with the help of AUSAID to provide complete building with CR& higher order spaces.

I appreciate and thank the UNICEF&AUSAID to tprovide an opportunity for the students in patchilaipalli division to have an eQual opportunity as the students in town school.I request principal staffs,students & school society make use of the building to provide together learning & service to the community to complete with the knowledge society.

**L.Ilaangovan**

## மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



நில வளமும் நீர்வளமும் மிக்க பளைப் பிரதேசத்தின் கலங்கரை விளக்காக விளங்கும் கல்லூரிகளில் பளை மத்திய கல்லூரி முதன்மையானது. நெருக்கடி நிலைக்குப் பின்னர் துரிதமான பல அபிவிருத்திகளை பளை கண்டு வருகிறது. அந்த வரிசையில் தரமான கல்வியை வழங்குவதன் மூலம் செயற்திறன் மிக்க சமூகத்தினை உருவாக்கும் அரசின் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அனைத்து வளங்களும் நிரம்பிய வகுப்பறைகள், நூலகம் ,விஞ்ஞான ஆய்வுகூடம்,கணிணி ஆய்வுகூடம் உள்ளிட்ட முழுமையான பாடசாலைத் தொகுதி இன்று சமூகத்தின் கரங்களில் கையளிக்கப்படுகிறது.

ப.விக்கினேஸ்வரன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்.

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்து



கடந்த மூன்று தசாப்பதங்களாக யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கித்தவித்து அதன் வடுக்களை தன் மீது சுமந்து நின்ற கிளி/ பளை மத்திய கல்லூரி தனது 59 ஆவது அகவையை பூர்த்தி செய்துள்ள இன்றைய நிலையில் புதுப்பொலிவு பெற்று நிமிர்ந்து நிற்கின்றது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவின் தாய் பாடசாலையாக விளங்கும் இக் கல்லூரி ஒரு காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் முதனிலைப் பாடசாலையாகத் திகழ்ந்தமை எவரும் மறக்கமுடியாத உண்மை. இந் நிமிர்வினைத் தொடர்ந்து மீண்டும் இக்கல்லூரி மேலும் பல சாதனைப் புதல்வர்களை உருவாக்கி எமது நாட்டு கல்விப்புலத்தில் வீறு நடை போட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பளை மத்திய கல்லூரி கிளிநொச்சி மண்ணில் வரலாற்றுப் பெருமை மிக்க கல் லூரியாகும். நிறைவோடு சேவையாற்றிய அதிபர்கள் இங்கு கண்ணியமான கடமைகளைச் செய்துள்ளார்கள். இவர்களில் தலை சிறந்த ஒருவராக நிமிர்ந்து நிற்பவர் அமரர் அ.பொ. செல்லையா ஆகும். கறுப்பு வெள்ளை உடையுடன் கறுப்பு, நீலம், சிவப்பு பேனாக்களை தன் பையில் தரித்துக் கொண்டு செம் மொழி பேசி மாணவர்களை தம்வசப்படுத்தி பல்லாண்டு காலம் சேவையாற்றிய நெஞ்சம் மறவாத கல்வியியலாளர்ஆவார்.

இப்பாடசாலை எழில் மிகு அழகு கொண்டு கட்டப்பட்டுள்ள இக் கட்டடத் தொகுதியின் அங்குரார்ப்பண நாளில் [illegible] இக்கல்லூரியின் எழுச்சிக்கும் வரலாற்றும் சாலப் பொருத்தமாக இருக்குமென நம்புகின்றோம். வட புலத்திலே காணப்படாதவாறு யுனிசெவ் நிறுவனத்தின் ஆஸ்திரேலிய நாட்டின் நிதியீட்டத்துடன் இக் கட்டடத் தொகுதி [illegible] கின்றார்கள். மாணவர்கள் நவீன வகுப்பறைக் கூடங்களில் நல்ல காற்றோட்ட வசதியுடன் தங்கள் பாடங்களைக் கற்க வசதிகள் செய்து கொடுத்திருக்கின்றார்கள்.

வலயக்கல்விப் பணிப்பாளர், த. குருகுலராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. வீரர் 30 பேரின் சாவுக்கு பதிலடி; தாக்குதல் நடத்திய தலிபான்கள் அழிப்பு

## சிறப்புப் படைத்தளபதி தெரிவிப்பு

வாஷிங்டன்,ஒக.12

ஆப்கனில் ராணுவ ஹெலிகொப்டரை சுட்டுவீழ்த்தியதில் 30 அமெரிக்க ராணுவ வீரர்கள் பலியான சம்பவத்துக்கு பதிலடித் தாக்குதல் நடத்தியதில் 10-க்கும் மேற்பட்ட தலிபான்கள் பலியாகினர்.

ஆப்கானிஸ்தானில் காபூலில் அமெரிக்க ராணுவ ஹெலிகொப்டர் மீது தலிபான்கள் ரொக்கெட் குண்டு வீசித் தாக்கியதில் சிறப்பு அமெரிக்க ராணுவத்தினர் 30 பேர் பலியாகியுள்ளனர். இத்தாக்குதலுக்கு காரணமான தலிபான்களே அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பலியானதாக அமெரிக்க சிறப்புப் படையின் புதிய தளபதி ஜெனரல் ஜோன் அலன் தெரிவித்தார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது,கடந்த சனிக்கிழமை ஆப்கனின் வர்டாக் மாகாணத்தில் டாங்கே பள்ளத்தாக்குப் பகுதியில் பறந்து கொண்டிருந்த அமெரிக்க ராணுவக் ஹெலி கொப்டர் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தியதில் 30 வீரர்கள் பலியாகினர். இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக கடந்ததிங்கட்கிழமை நேட்டோப் படைகளின் உதவியுடன் தலிபான்கள் மீது எப்-16 ரக போர் விமானம் மூலம் குண்டுவீசித் தாக்குதல் நடத்தினோம். இதில் 10க்கும் மேற்பட்ட தலிபான்கள் பலியாகியுள்ளனர். கடந்த சனிக்கிழமை நடந்த சம்பவம் குறித்து அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்டகன் மீது கடும் விமர்சனம் எழுந்தது. இந்த விமர்சனங்களை போக்கும் விதமாக தலிபான்களுக்கு தக்க பதிலடி கொடுத்துள்ளோம் என்றார்.



பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் (வலது) நாட்டில் நிலவிவரும் கலவரத்தை அடக்கும்முறை குறித்து பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

# சீனாவின் விமானந் தாங்கி கப்பல் சோதனை உலக நாடுகள் பலவும் கவலை

பீஜிங்,ஒக.12

சீனா தன் முதல் விமானந் தாங்கிக் கப்பலை நேற்றுமுன்தினம் சோதனைக்கு விட்டது. இதனால், சீன ராணுவத்தின் அதிவேக நவீனமயம் குறித்த கவலை, உலக நாடுகளிடையே அதிகரித்துள்ளது.

உக்ரைன் நாட்டின் விமானந் தாங்கிக் கப்பலை வாங்கி மறு சீரமைப்பு செய்த சீனா, லியாஓனிங் மாகாணத்தின் டலியன் துறைமுகத்தில் இருந்து, நேற்றுமுன்தினம் அந்தக் கப்பலை சோதனைக்கு விட்டது. 'வர்யாக்' என்ற அந்தக் கப்பல், முன்னாள் சோவியத் யூனியன் அரசால் வடிவமைக்கப்பட்டது. 1991 இல் சோவியத் யூனியன் குலைந்த போது, கட்டுமானம் பாதியில் நிறுத்தப்பட்டது. அக்கப்பலை உக்ரைன் அரசு வாங்கியது. இதையடுத்து, சீனா அந்தக் கப்பலை வாங்கி, கடந்த 10 ஆண்டுகளாக மறுசீரமைப்பு செய்து வந்தது. 14ஆம் திகதி வரை நடக்கும் சோதனை ஓட்டம் முடிந்து, துறை முகத்துக்குத் திரும்பிய பின்னும் மறுசீரமைப்பு தொடரும் என, 'ஷின்ஹுவா' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

விமானந்தாங்கிக் கப்பல் சோதனை மற்றும் சீன ராணுவத்தின் அதி நவீனமயம் மற்றும் தென் சீனக் கடலில் அந்த நாட்டின் ஆதிக்கம் அதிகரிப்பது ஆகியவை குறித்து, தென் கிழக்காசிய நாடுகள் மத்தியில் கவலை அதிகரித்துள்ளது.

# பாகிஸ்தானுக்காக சீனாவின் புதிய செயற்கைக்கோள்

பீஜிங்,ஒக.12

பாகிஸ்தானுக்காக சீனா முதன்முறையாகத் தொலைத் தொடர்பு செயற்கைக் கோளினைத் தயாரித்து விண்ணில் செலுத்தவுள்ளது. இதன்மூலம் பாகிஸ்தான்- சீனா இடையே இருதரப்பு பரஸ்பரம் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் விண்வெளித் துறையில் உதவ சீனா முன்வந்துள்ளது.

இதன்படி பொக்சாட்- 1 ஆர் என்ற தொலைத்தொடர்பு செயற்கைக் கோளினை சீனா பாகிஸ்தானுக்காக வடிவமைத்துள்ளது. 3-பி டிரான்ஸ்பான்டர்கள் கொண்ட இந்த செயற்கைக் கோள் காலநிலை மாற்றம் அறிந்து கொள்ளுதல், உயர் அழுத்த தொலைத் தொடர்புகள், இராணுவம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பயன்படுத்தும் வகையில் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைக் கோள் சீனாவின் தென்மேற்குப் பகுதியில் ஜிசாங் செயற்கைக் கோள் ஏவு மையத்திலிருந்து விரைவில் விண்ணில் செலுத்தப் படவுள்ளது.

முன்னதாக கடந்த 2007ஆம் ஆண்டு சீனா- பாகிஸ்தான் இடையே விண்வெளித் திட்டம் குறித்து ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இது குறித்து சீனாவுக்கான பாகிஸ்தான் தூதர் மசூத் கான் பீஜிங்கில் செய்தியாளர்களிடம் கூறுகையில்,பொக்சாட்-1பிஆர் செயற்கைக் கோள் மூலம் சீனா-பாகிஸ்தான் விண்வெளி மற்றும் அறிவியல் துறையிலான உறவு மென்மேலும் வலுப்பெற்றுள்ளது என்றார்.

## 25 மில்லியன் டொலருக்காக ஒசாமாவை காட்டிக் கொடுத்த அதிகாரி

அல்குவைதா இயக்கத்தின் தலைவர் ஒசாமாவின் இருப்பிடத்தை பாகிஸ்தான் ஐ.எஸ். ஐ அதிகாரியொருவர் 25 மில்லியன் டொலருக்காக காட்டிக் கொடுத்ததாக தகவல் வெளியாகியுள்ளது. பாகிஸ்தான் ராணுவம் மற்றும் உளவுப் பிரிவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.க்கு தெரியாமல் இந்தத் தாக்குதல் நடைபெற்றது.

தற்போது பாகிஸ்தான் உளவு பிரிவை சேர்ந்த ஹில் ஹவுஸ் பெண் 25 மில்லியன் டொலர்களுக்காக பின்லேடனை காட்டி கொடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

# பிரிட்டனின் பல இடங்களிலும் பரவிய கலவரத்தை அடக்க அதிரடி நடவடிக்கை

லண்டன்,ஒக.12

பிரிட்டன் தலைநகர் லண்டனில் கலவரம் குறைந்து அமைதி திரும்புகிறது. எனினும், அந்த நாட்டின் ஏனைய பல நகரங்களில் நான்காவது நாளாகவும் கொள்ளை, தீ வைப்பு, தாக்குதல் சம்பவங்கள் தொடர்ந்தன. இதையடுத்து, கலவரக்காரர்கள் மீது ரப்பர் குண்டுகள், தண்ணீர் பீரங்கித் தாக்குதல் நடந்த பிரதமர் டேவிட் கமரூன் அனுமதி அளித்துள்ளார்.

லண்டனில் தொடங்கிய கலவரம், பிர்மிங்காம், நாட்டிங்காம், பிரிஸ்டல், லிவர்பூல், மான்செஸ்டர், லீசெஸ்டர், சால்போர்டு, வெஸ்ட்ப்ரோம்விச், வொல்வர்ஹேம்ப்டன், க்ளவ்செஸ்டர் ஆகிய நகரங்களுக்குப் பரவியது. இந்த நகரங்களில் உள்ள மார்க்அண்ட் ஸ்பென்சர், சோனி போன்ற பிரபல கடைகள் கலவரக்காரர் களால் சூறையாடப்பட்டன. பொலிஸ் நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கலவரக்காரர்கள் தாக்கியதில், இதுவரை 111 பொலிஸார் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதற்கிடையில், லண்டனில் பொலிஸார் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் அமைதியை நிலைநாட்டியுள்ளனர். கலவரம் தொடங்கிய கடந்த சனிக்கிழமை முதல் இதுவரை 1,100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இளைஞர்கள் என்பதோடு, இவர்களில் இளம் பெண்களும் உள்ளனர். லண்டனின் பல பகுதிகளில், மக்கள் தங்கள் வீடுகள், கடைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 786 பேர் லண்டனில் மட்டும் கைதானவர்கள். இவர் கள் அனைவர் மீதான வழக்குகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. பிரதமர் டேவிட் கமரூன் நேற்றுமுன்தினம் அவசர கால அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி ஆலோசித்தார். பின் பொலிஸ் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டியில்,கலவரக் காரர்களைத் திருப்பித் தாக்க வேண்டிய நேரம் வந்து விட்டது. அவர்களை அடக்க உறுதியான நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. கடைகளுக்குள் புகுந்து கொள்ளையடித்தவர்கள், அங்குள்ள சி.சி. டிவி., கமராக்களில் பதிவான காட்சிகள் மூலம் அடை யாளம் கண்டறியப்பட்டு கைது செய்யப்படுவர். சட்டத்தின் கடுமையான தண்டனைகள் அவர்களுக்குக் காத்திருக்கின்றன என்றார்.

# கடாபியின் கடைசி மகன் உயிருடன் இருக்கிறார்

திரிபோலி, ஒக.12

நேட்டோ படைத் தாக்குதலில் கொல்லப்பட்டுவிட்டார் எனக் கருதப்பட்ட கேணல் கடாபியின் இளைய மகன் உயிருடன் தான் இருக்கிறார் என லிபிய அரசு தொலைக்காட்சி தகவல் வெளியிட்டுள்ளது. அவர் பாதுகாப்பாக இருக்கும் வீடியோ விவரங்களையும் தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

கடாபிக்கு 7 குழந்தைகள் உள்ளனர். இதில் கடைசி 7ஆவது மகன் கமீம் கடாபி. இவர் கடந்த வாரம் நேட்டோ படைகள் ஜிதான் பகுதியில் நடத்திய வான் தாக்குதலில் கொல்லப்பட்டார் என நம்பப்பட்டது. இவர் கொல்லப்பட்டார் என்ற தகவல் கூட்டுப் படையினருக்கு புதிய உற்சாகத்தை அளித்து இருந்தது. ஆட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தும் மக்களும் மகிழ்ச்சியில் இருந்தனர்.

கடந்த ஒகஸ்ட் 5ஆம் திகதியே நேட்டோ படையின் இந்த வான்வழித் தாக்குதல் நடந்தது. அதன் பின்னர் முதன்முறையாக கடாபியின் 28 வயது இளைய மகன் தற்போது பொதுமக்களிடம் தோன்றி உள்ளார். அவர் நேட்டோ தாக்குதலில் காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர்களைப் பார்த்தார். அந்தக் காட்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

# கல்வித்துறையில் சீர்திருத்தம் மேற்கொள்ளக் கோரி சிலி நாட்டில் அதிபருக்கு எதிராக மாணவர் ஆர்ப்பாட்டம்

கல்வித்துறையை சீர்திருத்தம் செய்யக்கோரி சிலி நாட்டில் அதிபருக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் ஏற்பட்ட வன்முறையில் 23 பொலிஸார் காயமடைந்தனர். 270 பேர் கைது செய்யப்பட்டனர். லத்தீன் அமெரிக்க நாடான சிலி நாட்டின் அதிபராக செபஸ்டியன் பெனிரா உள்ளார்.

இந்த நாட்டில் கடந்த ஒரு வருடங்களில் பொருளாதார வளர்ச்சி விகிதத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது இதன் மூலம் அரசின் வருவாய் இனங்கள் வேறுவழியில் செலவழிக்கப்படுவதாகப் புகார் எழுந்தது.

மேலும் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு பட்ஜெட்டில் போதிய நிதி ஒதுக்கி சீர்திருத்தம் மேற்கொள்ள அதிபர் செபஸ்டியன் பெனிரா தவறிவிட்டதாகப் புகார் எழுந்தது.

இதனைக் கண்டித்து தலைநகர் சான்டியாகோவில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இவர்களுக்கு பொதுமக்களும் ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் ஏற்பட்ட வன்முறையில் 23 பொலிஸார் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கலைத்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் 270 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே இந்தாண்டு உயர்கல்வித்துறைக்கு 4 பில்லியன் டொலர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனினும் இது போதாது என மாணவர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலகல் முறையில் உதைபந்து: சென்.யூட் சம்பியனானது



யாழ்ப்பாணம், ஒக.12

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சங்கமும், உதைபந்தாட்ட சங்கமும் இணைந்து, யு.என்.டி.பி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திய 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் வண்ணன்குளம் சென்யூட் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை உடுப்புகுளம் மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வண்ணன்குளம் சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அளம்பில் இளந் தென்றல் விளையாட்டுக்கழகம் மோதிக்கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரு அணி வீரர்களும் தத்தமது அணிகள் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மிகவும் உற்சாகத்தோடு முட்டிமோதிக் கொண்டனர்.

ஆட்டமுடிவில் இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் வண்ணன்குளம் சென்யூட் விளையாட்டுக் கழ கம் 3:1 என்ற கோல் கணக்கில் அளம்பில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது.

பிரதமவிருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் எ.பத்திநாதனும் சிறப்பு விருந்தினராக அளம்பில் பங்குத் தந்தை எரிக் றொசான் அடிகளும் கலந்துகொண்டனர். (ம-23)







மாகாண மட்ட பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற மெய்வன்மைப் போட்டியில் பெண்களுக்கான தட்டெறிதலில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த மாணவிகளான ரி.பானுஜா 19 வயதுப் பிரிவில் முதலாமிடத்தையும், ரி.விதுசனா 17 வயதுப் பிரிவில் இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர். (ம-190)

# தேசிய மட்ட வீரருக்கு பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஒக.12

தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகிய வீர, வீராங்கனை களுக்கான பயிற்சிமுகாம் ஒன்றை வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 17, 18, 19ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானததில் இந்தப் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன. (ம-23)

# வடமாகாண 15 வயதினரின் கிரிக்கெட்; மானிப்பாய் இந்துக் கல்லூரி வெற்றி

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாணப் பாடசாலை அணிகள் 15 வயதுப் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 51 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் சுழிபுரம் விக்னேஸ்வரா அணியும் மோதிக்கொண்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 36 ஓவர்களில் 160 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பிரதீபன் 22 ஓட்டங்களையும் ஜோன்சன் 17 ஓட்டங்களையும் சஜீவன் 10 ஓட்டங்களையும் குகப்பிரசாத் ஆட்டமிழக்காமல் 51 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சுழிபுரம் விக்னேஸ்வரா அணியைச் சேர்ந்த பிரசாத் 6 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை யும் பிரதீஸ் 6 ஓவர்களில் 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் நிரோஜன் 2 ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சிவராம் 4 ஓவர்களில் 7 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

160 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சுழிபுரம் விக்னேஸ்வரா அணி 34.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

நிரோஜன் 24 ஓட்டங்களையும் பிரதீஸ் 22 ஓட்டங்களையும் சிவராம் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பிரதீபன் 8.3 ஓவர்களில் 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும் டிலக்சன் 7 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் சஜித் 9 ஓவர்களில் 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் ஜனேஸ்வரன் 5 ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# வவுனியா அணி 74 ஓட்டங்களால் வெற்றி



யாழ்ப்பாணம்,ஒக.12

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக் கழகத்துக்கும் வவுனியா தெரிவு அணிக்கும் இடையில் நட்பு ரீதியான 50 பந்து பரிமாற்றங்களைக்கொண்ட கிரிக்கெட் ஆட்டத்தில் வவுனியா தெரிவு அணி 74 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை நெற்கொழு பொதுவிளையாட்டு மைதானத்தில் இந்த ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடித்தாடிய வவுனியா தெரிவு அணி 42 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றிசாப் பத்து ஆறு, இரண்டு நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 72 ஓட்டங்களையும் மயூரன் 42, ராகிம்34 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்து வீச்சில் கழுகுகள் அணி சார்பாக அசோக் 7 இலக்கையும், கோகுலன் 2 இலக்கையும் கைப்பற்றினர்.

203 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்று பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கழுகுகள் விளையாட்டுக்கழக அணி சகல இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களை மட்டும்பெற்றது.

சஜீவ் 32, டிலக்சன் 28, முல்லைத் திவ்வியன் 18ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றனர்.பந்து வீச்சில் வவுனியா தெரிவு அணி சார்பாக ரகுமான், கலைச்செல்வன், றிசாறின் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம-23)



கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் ஜெயந்திநகர் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சற்றுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பெற்ற உருத்திரபுரம் விளையாட்டுக்கழக அணித் தலைவரிடம் கரைச்சி பிரதேச செயலக பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் குமார் வெற்றிக் கிண்ணம் வழங்குகின்றார் (ம-23)

# உதைபந்தாட்ட இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் வி.க.சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக.12

யாழ்.உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்குகொள்ளும் விலகல்முறையிலான உதைபந் தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நேற்று முன்தினம் புதன்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணிமோதிக் கொண்டது.

ஆட்டம் தொடங்கியது முதல் இரு அணியினரும் மிகவும் உற்சாகத்தோடு மோதிக்கொண்டனர். ஆட்ட முடிவில் இரு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

சிறந்த வீரர்களாக ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்தை சேர்ந்த ஜெயகோபன், குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை சேர்ந்த கோல் காப்பாளர் ராஜ்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் த.நித்திலநாயகம் கலந்துகொண்டார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் இன்னிங்ஸ்: முன்னிலையில் இங்கிலாந்து

பர்மின்ஹாம், ஓக. 12

இங்கிலாந்து அணி மிகச்சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 456 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய குக் 182 ஓட்டங்களையும், மோர்கன் 44 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். இதன் மூலம் இங்கிலாந்து அணி இந்திய அணியை விட 232 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து இந்திய அணி விளையாடி வருகின்றது. முன்னதாக நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் பர்மின்ஹாம் நேற்று முன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோரஸ் முதலில களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தார்.

சளைக்கவில்லை...



182 ஓட்டங்களுடன் குக்


அதன்படி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, இங்கிலாந்து அணியின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 224 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. சேவாக் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். இரண்டவாவது விக்கெட்டுக்காக கம்பீர் - டிராவிட் 50 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். கம்பீர் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சச்சின் ஒரு ஓட்டத்துடன் புரோட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். டிராவிட் 22, லக்ஸ்மன் 30, ரெய்னா 4 ஓட்டங்களுடன் சீரான இடைவெளியில் வெளியேற்றப்பட்டனர். அணித்தலைவர் டோனி, பிரவீன் குமார் இருவரும் 8 ஆவது விக்கெட்டுக்காக 84 ஓட்டங்களைப் பெற்ற போது பிரவீன், பிறஸ்னன் பந்து வீச்சில் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். மறுமுனையில் தனித்து நின்று போராடிய அணித்தலைவர் டோனி அரைச் சதம் கடந்தார்.

இறுதியில் டோனியும் 77 ஓட்டங்களுடன் வெளியேற இந்திய அணியின் முதலாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. 224 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இந்திய அணி இழந்தது. பந்து வீச்சில் புரோட், பிறஸ்னன் தலா 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸை தொடங்கியது இங்கிலாந்து அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அலெஸ்ரர் குக் மற்றும் அணித்தலைவர் ஸ்ரோரஸ் இருவரும் களமிறங்கினர். நேற்றைய ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி 84 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அணித்தலைவர் ஸ்ரோரஸ் 52 ஓட்டங்களையும், குக் 27 ஓட்டங்களையும் பெற்று களத்திலிருந்தனர்.

நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டத்தை தொடர்ந்த இங்கிலாந்து அணி இந்திய அணிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. நேற்றைய ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்திலேயே இங்கிலாந்து அணி தனது முதலாவது விக்கெட்டுக்காக 100 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டது. குக் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இங்கிலாந்து அணி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி



ஸ்ரோரஸ், குக்

முதலாவது விக்கெட்டுக்காக 186 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டது. அமித் மிஷ்ராவின் பந்து வீச்சில் அணித்தலைவர் ஸ்ரோரஸ் 13 பவுண்டரிகள் அடங்கலாக 87 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஸ்ரோரஸ்ஸின் ஆட்டமிழப்பை தொடர்ந்து இயன் பெல் களமிறங்கினார். மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய குக் தனது 19 ஆவது சதத்தை புர்த்தி செய்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 66 ஓட்டங்களைப் பெற்ற போது பெல் 34 ஓட்டங்களுடன் பிரவீன் குமாரின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார்.

பெல்லை தொடர்ந்து களமிறங்கிய பீற்றர்ஸன் அதிரடியாகக் ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். இங்கிலாந்து அணியின் ஓட்டவேகம் சடுதியாக ஏற்றம் கண்டது. சிறப்பாக துடுப்பெடுத்தாடிய பீற்றர்ஸன் அரைச்சதம் கடந்தார். மறுமுனையில் குக் 150 ஓட்டங்களைப் பூர்த்தி செய்தார். மூன்றாவது விக்கெட்டுக்காக பீற்றர்ஸன் - குக் இருவரும் 122 ஓட்டங்களைப் பகிரந்து கொண்டனர். பீற்றர்ஸன் 78 பந்துகளில் 9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 63 ஓட்டங்களுடன் பிரவீனின் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதன் பின்னர் களமிறங்கிய மோர்கன் - குக் இருவரும்



இங்கிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்து இந்திய அணி விளையாடி வருகின்றது. முன்னதாக நடைபெற்று முடிந்த இரண்டு டெஸ்ட் ஆட்டங்களிலும் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றிருந்தது. இந்த நிலையில் இங்கிலாந்து அணிக்கும் இந்திய அணிக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் பிறிமின் ஹாம் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

எப்படிப் போட்டாலும்...



டோனி, பிரவீன்.

நேற்றைய ஆட்ட நேர முடிவு வரை 4 ஆவது விக்கெட்டுக்காக இருவரும் 82 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் சிறப்பாக பகிர்ந்து கொண்டனர். மோர்கன் 44 ஓட்டங்களையும், குக் 182 ஓட்டங்களையும் பெற்றுக் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் பிரவீன் குமார் 2 விக்கெட்டுக்களையும் மிஷ்ரா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றியுள்ளனர். இந்திய அணியால் நேற்று வரை 46 ஓட்டங்கள் உதிரிகளாக வழங்கப்பட்டுள்ளது. (15)

# உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்



இஸ்லாமபாத், ஓக.12

சிம்பாப்வே அணியுடன் மோதும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தேர்வு குறித்து முன்னாள் அணித்தலைவரும் வேகப் பந்து வீச்சாளருமான வசிம் அக்ரம் விமர்சித்தார். இந்த விமர்சனம் பாகிஸ்தான் தேர்வுக் குழுவை எரிச்சல் அடையச் செய்துள்ளது. இதுகுறித்து தேர்வு குழு தலைவர் மோஷின் கான் கடுமையாக பதில் அளித்துள்ளார்.

இளம் வீரர்கள் தொடர்ச்சியான ஆட்டத்திறன் குறித்து தேர்வுக் குழு கவனம் செலுத்த வேண்டும். அணியில் இருந்து வேகப்பந்து வீச்சாளர்கள் உமர் குல், தன்வீர் அகமது மற்றும் வகாப் ரியாஸ் ஆகியோரை நீக்கி இருக்கக்கூடாது என்று வசிம் அக்ரமின் கருத்து தெரிவித்து இருந்தார்.

இது குறித்து மோஷின்கான் கூறுகையில், வசிம் அக்ரம் கருத்து என்னை மிகவும் வேதனைபடச்செய்துள்ளது. தேர்வுக் குழுவின் குறித்த விவ்ரம் அவருக்கு தெரியாது. இந்த நிலையில் பொறுப்பற்ற முறையில் அரைகுறையான பதில்களை தரக் கூடாது என்றார்.

மோஷின் கான் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக 48 டெஸ்ட் போட்டியில் ஆடி உள்ளார். 75 ஒரு நாள் போட்டியிலும் ஆடி இருக்கிறார். வசிம் அக்ரம் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்காக ஏதாவது பணியாற்ற வேண்டும். இது போன்ற கருத்துக்களை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (15)

# ரொம்ப கஷ்டமா இருக்கு....!

லண்டன், ஓக. 12

இங்கிலாந்துக்கு எதிரான இப்போதைய டெஸ்ட் தொடர் தான் எனது வாழ்வில் மிகவும் கடினமான தொடர் என்று அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்.

3 ஆவது டெஸ்ட் ஆட்டத்தை முன்னிட்டு பர்மிங்ஹாமில் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் கூறியதாவது. இந்த டெஸ்ட் தொடரில் வீரர்களுக்கு தொடர்ந்து



இங்கிலாந்து தொடர் குறித்து டோனி

ஏற்படும் காயம், ஆட்டத்தில் இருந்து பாதியில் வெளியேறும் நிலை, வீரர்கள் சரியாக விளையாடாதது போன்ற பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க நேர்ந்தது.

இதற்கு முன்பு எப்போதும் இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டது இல்லை. இங்கிலாந்து மைதானங்கள் சுழற்பந்து வீச்சுக்கு எந்த வகையிலும் ஒத்துழைக்கவில்லை என்றார் டோனி. (15)

# எப்படியெல்லாம் யோசிக்கிறாங்க!

லண்டனில் தற்போது நடைபெற்று வரும் கலவரம், ஒரு வேளை இந்தியாவில் நடந்திருந்தால், இங்கிலாந்து வீரர்கள் அச்சம் அடைந்து உடனடியாக தொடரிலிருந்து வெளியேறி, நாடு திரும்பியிருப்பர் என்று இந்திய அணி முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் கூறியுள்ளார்.

2008 இல் பீற்றர்சன் தலைமையிலான, இங்கிலாந்து அணி இந்தியா வந்தது. ஏழு ஒரு நாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில், முதலில் நடந்த 5 ஆட்டங்களில் வென்ற இந்திய அணி 5-0 என்று முன்னிலையில் இருந்தது. இந்த நிலையில், மும்பையில் பயங்கரவாத தாக்குதல் நடந்தது. இதைக் காரணம் காட்டி, இங்கிலாந்து வீரர்கள் உடனே நாடு திரும்பினர். மீண்டும் இந்தியா வந்து, டெஸ்ட் தொடரில் மட்டும் பங்கேற்றனர்.

தற்போது இந்திய அணி, இங்கிலாந்தில் 4 டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாடி வருகின்றது. முதல் இரண்டு ஆட்டங்களில் வென்ற இங்கிலாந்து அணி, முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில், லண்டனில் பொலிஸ் துப்பாக்கிச் சூட்டை எதிர்த்து தொடங்கிய போராட்டம், கலவரமாக மாறியது. இது மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் நடக்கும் பர்மிங்ஹாம் உட்பட, பல இடங்களுக்கும் பரவியுள்ளது.

இங்கிலாந்து வீரர்கள் இந்தியா வந்து, தற்போது லண்டனில் நடக்கும் கலவரம், இங்கு நடந்திருந்தால் பாதுகாப்பு காரணமாக, அவர்கள் தொடரில் இருந்து பாதியில் விலகி, உடனடியாக தங்கள் நாட்டிற்கு திரும்பி சென்றிருப்பர்.

ஆனால், தற்போது அங்கு நடந்து வரும் கலவரம், தங்களை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை, மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்துக்காக சிறப்பான முறையில் தயாராகி உள்ளோம். தொடரை நிச்சயமாக 3-0 என்று வெல்வோம், என்று இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோரஸ் கூறுகின்றார். கலவர காட்சிகளை தொலைக்காட்சியில் பார்க்கும் போதே, கோரமாக உள்ளது. இந்த நிலையில் இது எங்களை பாதிக்கவில்லை என்று சொல்வது இங்கிலாந்து வீரர்களின் சுயநலத்தை தான் காட்டுகின்றது. இவ்வாறு கவாஸ்கர் கூறினார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
12 ஒகஸ்ட் 2011 வெள்ளிக்கிழமை

# மாவிட்டபுரத்தில் பொதுமக்களிடம் சிக்கிக் கொண்ட திருட்டுப் பேர்வழிகள்

வலி.வடக்கு, ஒக.12

வலி.வடக்கில் மீள்குடியமர்வு இடம்பெற்ற மாவிட்டபுரம் பகுதியில் உள்ள ஆள்கள் இல்லாத வீடுகளில் திருட்டு முயற்சிக ளில் ஈடுபட்டவர்கள் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட்டார்கள்.

நேற்றுக்காலை மாவிட்டபுரம் பகுதியில் உள்ள தமது வீடுக ளைத் திருத்தச் சென்ற பொதுமக்கள் அந்தப் பகுதி யைச் சேராத இருவர் ஆள்கள் இல்லாத வீடுகளில் புகுந்து வீடுகளில் இரும்புக் கம்பிகள், யன்னல்கள் மற்றும் கதவுகள் போன்ற பொருள்களைக் கழற்றிக் கொண்டும் இருப்பதைக் கண்டுள் ளனர்.

திருட்டு முயற்சியில் ஈடுபட்டவர்க ளிடம் பொதுமக்கள் விசாரிக்க முயன்றபோது அவை தமது உடைமைகள் போன்று பொதுமக் களை பயமுறுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் திரண்டு அந்தத் திருடர் களைப் பிடித்துத் தெல்லிப்பழைப் பொலிஸாரிடம் ஒப் படைத்தனர். (ம-86)

# சைக்கிள் திருடன் பிடிபட்டான்

தென்மராட்சி, ஒக.12

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிளைத் திரு டிய நபரைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித் துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம் பவம் இடம்பெற்றது.

மட்டக்களப்பைச் சேர்ந்த பிரஸ்தாப நபரைப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன் றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சந்தேகநபரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத் தரவிட்டார். (ஒ-207)

# கல்விமாணி விரிவுரைகள்

யாழ்ப்பாணம், ஒக.12

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி இரண்டாம் வருட மாண வர்களுக்கான விரிவுரைகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம் பமாகும் என்று தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

## காணவில்லை



கோண்டாவில் கிழக்கு, வன்னியசிங்கம் வீதியைச் சேர்ந்த சிறீதரன் பிரதீபன் (வயது 15 – பாடசாலை மாணவன்) கடந்த 10.08.2011 புதன்கிழமை பி.ப 3.30 மணியளவில் ஊதாக்கலர் ரீசேட், நீலக் கலர் ஜீன்ஸ், கறுப்பு நிறத் தொப்பி அணிந்து சென்ற இவர் இன்னும் வீடு திரும்ப வில்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் இலக் கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 021 4909902
0779953495

## தர்ம சாஸ்தா குருகுலம்

யஜுர் வேத உபாகர்மம் நாளை (13.08.2011)
சனிக்கிழமை காலை 7 1/2 மணிக்கு
நடைபெறும்.

சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள்

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திரு ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புத் தங்கை திருமதி மேரி றோசலின் அவர்களின் கணவர்

**அமரர் கணேஸ்பரம்**

அவர்களின் அமரத்துவ செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு இவரது மறைவால் துயருற்றிருக்கும் எமது அதிபர், அவரது சகோதரி குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யா/புனித சாள்ஸ் ம.வி *பாடசாலை நலன்புரி சங்கம்,*

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஜெயமகா கலாநிதி (ஓய்வுபெற்ற ஆசிரியர்)



மீசாலை வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமா கவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமகா கலாநிதி நேற்று (11.08.2011) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரிமளம் கந் தையா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜெயமகாவின் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோ கத்தர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கர்சன், அனோஜா மற்றும் தர்மஜா ஆகியோரின் அன்புத் தாயும் நரேஸ்குமாரின் அன்பு மாமியும் சசிவர்மன்(மாணவன்,வீரசிங்கம்மகா வித்தியாலயம்),சஜானந்தி (மாணவி, வீரசிங்கம் மகா வித்தியாலயம்), டினேஸ்வரன் (யா/ வீரசிங்கம் மகா வித்தியாலம்) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான கருணாகரன், தயாபரன், தயாநிதி மற்றும் கருணாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2011) வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல்:
கருணா (சகோதரி)

### கந்தசாமி கஜீபன் (கஜன்)



கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கஜீபன் (யாழ்.பல்கலைக்கழக ஊழியர்) நேற்று (11.08.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமி (யாழ்.பல்கலைக்கழக ஓய்வு பெற்ற ஊழியர்) – நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வதனாவின் அன்புச் சகோதர னும் காலஞ்சென்ற செந்திலின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.08.2011) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் பாலசிங்கம்

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் – தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்.)



அல்வாய், துலாவையைப் பிறப்பிடமாகவும், ஐய னார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லி புரம் பாலசிங்கம் நேற்றுமுன்தினம் (10.08.2011) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் – அன்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான முகாந்திரம் துரையப்பா – இராசாம்பாள் தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பிரபாகரன், ராதிகா (இளைப் பாறிய எழுதுவினைஞர்), சுகிர்தா (பொறியியலாளர் – சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரன் (பாதுகாப்பு உத்தி யோகத்தர் – யாழ்.பல்கலைக்கழகம்), ஞானரஞ்சன் (பொறியிய லாளர் – சிங்கப்பூர்) ஆகியோரின் அன்பு மாமனும் யோ.துஷிந்தா, யோ.சர்மிந்தா, யோ.கிருஷாணிக்கா, ஞா.சலோமி ஆராதனா, ஞா.சாமுவேல் சகாயன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் நாளை (13.08.2011) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.29/26, ஐயனார் கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, மக்கள்.

**விற்பனைக்கு**

கிளிநொச்சி மாவட்டத்தில் கணினி கல்வி நிலையம் நடத்துவதற்குத் தேவையான சகல உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் 5 KV டீசல் ஜெனரேற்றர் என்பன விற்பனைக் குண்டு. தொடர்பு: 0778889232

**REPAIRING**

சகலவிதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor(LCD, CRT) UPS மற்றும் இலத்திரனியல் உபகரணங்களும் ஒரே நாளில் உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து, ஒரே நாளில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.


NORTH LEAD
COMPUTER SALES AND SERVICE CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0774192275, Fax : 222 4460

**COMPUTER CLASSES**
CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

*Software & Video Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messanger, Video Call, Net Call* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

Ms Office, DTP, Hardware, Programming, Accounting Packages, Graphic Designing, Web Designing, Kids Program போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன (பூரண தமிழ் மொழி விளக்கத்துடன் கற்பிக்கப்படும் ஆர்வம் உள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்)

NORTH LEAD EDUCATIONAL CENTER
No.328, Stanly Raod, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
*Tel: 222 4459, 0772533390, Fax: 222 4460*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான விவாதம் தலைப்பை மாற்றியது ஏன்?

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக, இந்திய நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பப்பட இருந்த பிரச்சினை தொடர்பாக அலுவல் பட்டியலில் இருந்த வாசகங்கள் மாற்றியமைக்கப்பட்டது தெரியவந்துள்ளது.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக, மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய இரு அவைகளிலும் நேற்று புதன்கிழமை பிரச்சினை எழுப்புவதற்கு அனுமதியளிக்கப்பட்டு, அது அலுவல்கள் பட்டியலிலும் இடம் பெற்றிருந்தது.

குறிப்பாக, இலங்கையின் இறுதிக் கட்டப் போரின்போது அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக ஐநா நிபுணர் குழுவின் அறிக்கை மீதான விவாதம்- என்ற தலைப்பில் மக்களவையின் அலுவல்கள் பட்டியலில் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால், நேற்று அவை தொடங் கிய போது, திருத்தியமைக்கப்பட்ட பட்டியல் என்ற விவரத்தின் அடிப்படையில், இலங்கைப் பிரச்சினை தொடர்பான விவாதம் பற்றிய அலுவல் குறிப்பு மட்டும் இடம் பெற்றிருந்தது.

அதில், இலங்கைத் தமிழர்களின் நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்காக இந்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாகவும், அவர்களின் நலனுக்காக எடுக்கப்பட்டுள்ள மற்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் விவாதம் என்று தலைப்பு மாற்றப்பட்டிருந்தது.

இது, குறிப்பாக தமிழக உறுப்பினர்களுக்கு பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. தலைப்பை மாற்றியதற்கான காரணம் என்ன என்பது அவர்களுக்கு தெரியவில்லை.

ஆனால், அடுத்த வாரம் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக விவாதம் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அப்போது இந்தக் குளறுபடி தொடர்பாகவும் உறுப்பினர்கள் பிரச்சினை எழுப்பத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. (த)

# பிரபாகரன் தங்கியிருந்த வீட்டை சுற்றுலாத்தளமாக மாற்ற ஏற்பாடு

கொழும்பு,ஒக.12

விடுதலைப்புலிகளின் தலைவர் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டை விரைவில் சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வீடு முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஒட்டுசுட்டான் செல்லும் வழியில் பிரதான வீதியில் இருந்து சுமார் 4கிலோ மீற்றர் உள்ளே காட்டுப்பகுதிக்குள் அமைந்துள்ளது.

இந்த வீட்டிற்கு அண்மைக்காலமாக அதிகளவான தென்னிலங்கை சிங்கள மக்கள் வந்து செல்கின்றனர். இதனோடு பெருமளவில் பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட வந்து செல்கின்றனர்.

வெளியில் சாதாரண வீடுபோன்று தோற்றமளிக்கும் இந்த வீடு எத்தகைய தாக்குதலுக்கும் சிதைவுறாத வகையில் உள்ளே பாதுகாப்பான ஆழமான பதுங்குகுழிகளைக் கொண்டுள்ளது.

மேலும் ஒவ்வொரு பதுங்குகுழிப் பாதைக்கும் கனமான இரும்புக் கதவுகள் போடப்பட்டுள்ளன.

இதேவேளை இங்கு விடுதலைப் புலிகளின் தலைவர்தான் தங்கியிருந்தார் என்பதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. ஆனால் அதன் அமைப்பு முறையை அவதானித்த இராணுவத்தினர் இங்கு பிரபாகரன் தங்கியிருந்ததாகத் தெரிவித்துள்ளனர். (10)

# அரசு - மு.கா. இடையே முறுகல்

கொழும்பு,ஒக.12

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்கள் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடக் கூடாது எனவும், தனித்து போட்டியிட வேண்டுமெனவும் முஸ்லிம் காங்கிரஸ் அடிமட்ட உறுப்பினர்கள் வலியுறுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

முஸ்லிம் பிரதேசங்களில் தனித்து போட்டியிட்டிருந்தால் அதிகளவான உறுப்பினர்களை வென்றிருக்க முடியும் என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட போது முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்த போதிலும் இது வரையில் அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படவில்லை என குற்றம் சுமத்தியுள்ளார் (த)

## புலிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருத்தமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆயுத போராட்டங்களில் ஈடுபடப் போவதில்லை எனவும் அரசியல் வழிமுறைகளில் இலக்கை எட்டுவதற்கு முயற்சிக்கப் போவதாகவும் புலிகள் அறிவித்துள்ளனர் என தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஓர் பயங்கரவாத அமைப்பாக அடையாளப் படுத்தியே ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், இது சர்வதேச சட்டங்களுக்கு முரணானது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் சுயாட்சிக்காக தமிழீழ விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நெதர்லாந்து, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏனைய நாடுகளிலும் தமிழர்கள் தண்டிக்கப்படக் கூடாது என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் சுயாட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக போராடி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சுயாட்சி அதிகாரம் என்பது சர்வதேச சட்டங்களின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுயாட்சி அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளவதற்காக போராட்டம் நடத்தப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில் ஒரு தப்பினரை மட்டும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்துவது எந்தளவிற்கு நியாயமானது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## 'கிறிஸ் மனிதன்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டனர்.

இதேவேளை, திருமலை மற்றும் கந்தளாய்ப் பகுதிகளிலும் நேற்று மர்ம மனிதர்' பீதியால் மக்களை பதற்றத்துடன் காணப்பட்டனர். மக்கள் நேற்றிரவு வீடுகளில் முடங்கி காணப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-சி)

## கோத்தபாயவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானம் கொண்டுவர வலியுறுத்தினர். அதன்படி, இது விவாதத்துக்கு ஏற்கப்பட்டு விவாதம் நடந்தது.

இதன் முடிவில், மத்திய அரசு இந்தியத் தூதரகம் மூலமாக கோத்தபாயவுக்கு கண்டனம் தெரிவிக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா கூறியவை வருமாறு:-

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இழிவுபடுத்தும் வகையில் இலங்கை அரசின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய பேசியுள்ளார்.

சட்டப்பேரவைத் தீர்மானம் மீது இந்திய அரசு நடவடிக்கை எடுக்காததால் கோத்தபாய விமர்சித்துள்ளார். டில்லியில் உள்ள இலங்கைத் தூதரிடம் இந்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும். சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு, தமிழக மீனவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடிக்கக் கூடாது என்று கோத்தபாய கூறியுள்ளார். கோத்தபாயதெரிவித்த கருத்து கச்சதீவு ஒப்பந்தத்துக்கு எதிரானது. கச்சதீவு அருகே மீன்பிடிக்க தமிழக மீனவர்களுக்கு உரிமை உள்ளது.

- இப்படி ஜெயலலிதா தெரிவித்தார். (த-சி)

## இறுதி யுத்தத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல்களையும் வெளியிட்டுள்ளது.

போரின் இறுதிக்கட்டத்தின்போது தமிழ்ப் பொதுமக்கள் மற்றும் கைதுசெய்யப்பட்ட பெண் போராளிகள் மீது படையினர் பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொள்ளவில்லை என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

அத்துடன் எந்தவொரு பாலியல் சம்பவங்களும் அங்கு நடக்கவில்லை என்றும் இந்தியாவின் 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் அவர் கூறியுள்ளார்.

இராணுவத்தின் போர்க்குற்றங்களின் பட்டியலில் முகாம்களில் இருந்த பெண்கள் மீதான துன்புறுத்தலும் அடங்கியுள்ளது. இதனை 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சி பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலங்களுடன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட ஒருவர் தான் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகத் தம்மிடம் தெரிவித்தார் என 'ஹெட்லைன்ஸ் ருடே' தொலைக்காட்சி கூறியுள்ளது.

முகாமில் ஒவ்வொரு முறையும் நாங்கள் காலையில் எழுகின்றபோது, நான்கு - ஐந்து பெண்கள் காணாமல் போயிருப்பர். அவர்களுக்கு என்ன நடந்தது என்று நாம் அறியவில்லை என்று பாதிக்கப்பட்ட மற்றொருவர் ஹெட்லைன்ஸ் ருடே தொலைக்காட்சியிடம் கூறியுள்ளார்.

உணவுக்காகவும், சுகாதாரத் துண்டுகளுக்காகவும், உடைகளுக்காகவும் தான் ஒவ்வொரு முறையும் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டார் என வேறொரு பெண்ணும் சாட்சியம் அளித்துள்ளார்.

குளிக்கும்போது ஆண் படையினர் தம்மைக் கையடக்கத் தொலை பேசிகளில் படம் எடுத்தனர். அதற்காகவே தம்மைத் திறந்தவெளியில் குளிக்க நிர்ப்பந்தித்தனர் என்று 'ஹெட்லைன்ஸ் ருடே'யிடம் மற்றொரு பெண் கூறியுள்ளார்.

அரசால் உலகிற்கு வெளிப்படுத்தப்படாத இரகசிய முகாம் ஒன்றில் சுந்தரி என்ற ஒரு பெண் ஒரு ஆண்டைக் கழித்துள்ளார்.

அவர் தெரிவித்தவை வருமாறு:-

அது ஒரு சித்திரவதை முகாம். அடிப்படை வசதிகள் எமக்கு கிடைக்கவில்லை. அரசசார்பற்ற நிறுவனங்களும் அனுமதிக்கப்படவில்லை. அது ஒரு இராணுவ முகாம். என்ன பிரச்சினையென்றாலும் இராணுவத்தினரையே அணுகவேண்டும். அவர்கள் சில பெண்களிடம் தவறாக நடந்து கொண்டனர்.

அங்கே பாலியல் வல்லுறவுகள் நடந்தன. இளம்பெண்கள் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டனர். ஆனால் எப்படி அதை வெளியே சொல்ல முடியும்? அவர்கள் சங்கடப்படுவார்கள்.

பெண்கள் ஆடைகளின்றி அறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். நாங்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்ததால், அவர்கள் எம்மை துன்புறுத்தினர். எம்மைத் தடுத்து வைத்துத் துன்புறுத்தினர் - என்றார்.

திவ்யா என்ற பாதிக்கப்பட்ட இன்னொரு இளம்பெண், இரண்டு அல்லது மூன்று பெண்கள் கடத்திச் செல்லப்பட்டனர். அவர்கள் குளிக்கும்போது அவர்கள் படம் எடுத்துள்ளனர் - என்றார்.

## தெரிவுக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னையை முன்வைத்து அரசின் கருத்தைக் கேட்டோம். அரசு இன்னும் அது தொடர்பில் எதுவித கருத்தையும் தெரிவிக்கவில்லை.

நாம் முன்வைத்த தீர்வுயோசனை தொடர்பாக அரசு சாதகமான கருத்தை முன்வைத்தால் அரசுக்கும், எமக்கும் இடையிலான பேச்சுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம்.

அவ்வாறு பேச்சை ஆரம்பித்து அதில் நல்லதோர் அரசியல் தீர்வை எட்டி அந்தத் தீர்வை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குச் சமர்ப்பித்தால் அவ்வாறானதொரு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்வது பற்றி எம்மால் சாதகமாகப் பரிசீலிக்க முடியும்.

அவ்வாறு இல்லாத பட்சத்திலும் நாம் அரசிடம் முன்வைத்த தீர்வு யோசனைக்கு அரசு தனது கருத்துகளை வழங்காத பட்சத்திலும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்வது பற்றி எம்மால் சாதகமான முடிவை எடுக்கும் சாத்தியக்கூறுகள் மிக மிகக் குறைவு - என்றார். (த-சி)

## அமெ. இறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேளையில் அரசு முன்னெடுத்த மனிதாபிமான செயற்பாடுகள் தொடர்பாக நாம் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகளுக்கு விளக்கிக் கூறியுள்ளோம். எதையுமே நாம் மறைக்கவில்லை.

கடந்த பல மாதங்களாக எமது நாட்டின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் நாம் பெரிதும் மேற்கொண்ட பொறுப்புக்கூறும் நடவடிக்கைகளை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை. இதையிட்டு நாம் கவலையடைகிறோம். அதே வேளை, அமெரிக்கா எமக்கு விடுத்திருக் கும் இறுதி எச்சரிக்கையை நாம் [illegible] பார்க்கவில்லை - என்றார்.

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை சுயாதீன மற்றும் நம்பகமான விசாரணையைத் தொடங்க வேண்டும் என்று அமெரிக்கா செவ்வாய்க்கிழமை கூறியிருந்தது. தவறும் பட்சத்தில் சர்வதேசம் இலங்கைக்கு எதிராகச் செயற்பட நேரிடும் என்று அந்நாடு இறுதி எச்சரிக்கையும் விடுத்தது.

சர்வதேச நியமங்களுக்குட்பட்டு நடத்தப்படும் விசாரணைக்கு அமெரிக்கா பூரண ஆதரவை வழங்கும் என்றும் அந்நாடு கூறியிருந்தது.

அமெரிக்காவின் இந்த இறுதி எச்சரிக்கைக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு கூறினார். (மற்றொரு செய்தி 20 ஆம் பக்கத்தில்) (த-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எம்மிடம் பொருள்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் - 5 மாணவர்களுக்கான விசேட வழிகாட்டி இலவசமாக வழங்கப்படுகிறது.
இதனை இன்று 12.08.2011 மட்டும் பெற்றுக் கொள்ளலாம்
[ஒருமாத காலத்துக்குள் பொருள்கள் கொள்வனவு செய்த சிட்டைகளைக் காண்பித்தும் பெற்றுக்கொள்ளலாம்]
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# மீன் முள்ளு தொண்டையில் சிக்கியவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, ஓக.12

உணவருந்தும் போது தொண்டையில் சிக்கிய மீன் முள்ளை வெளியே எடுக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்ததால் வயோதிபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை இரவு உணவு அருந்தும் போது தொண்டைக்குள் மீன்முள்ளு சிக்கியதாகவும் நேற்றுவரை அதனை வெளியே எடுக்க மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்காத நிலையில் யாழ். பேதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார் என தெரிவிக்கப் பட்டது.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கந்தையா தங்கவடிவேல் (வயது-69) என்பவரே பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவர் ஆவர். (ஓ-207)

## விற்பனைக்கு

NP PPXXXX இலக்கமுடைய 9250km வரை ஓடிய புதிய மகேந்திரா Go (சிறிய ரக) எல்ப் விற்பனைக்கு உண்டு. ஐஸ்கிறீம் வானுக்கும் பாவிக்கலாம். தொடர்பு 0776288718, 0750321417

## காணி விற்பனைக்கு

நெல்லியடிச் சந்தியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் நெல்லியடி- பருத்தித்துறை பிரதான வீதியில், வீதிக்குக் கிழக்குப் பக்கமாக 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0714720177/0776143305

## தாதி/ பயிலுநர் தேவை

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ள தனியார் வைத்தியசாலைக்கு தாதி/பயிலுநர் தேவை.
வயது: 18 - 22 (பெண்கள்)
கல்வித்தகைமை: G.C.E. O/L
உணவு, தங்குமிடவசதி இலவசம், விசேட பயிற்சிகள் வழங்கப்படும்.
**Note**:- (தங்கி நின்று வேலை செய்யக் கூடியவர் மட்டும் தொடர்பு கொள்ளவும்)
தொடர்பு:
பணிப்பாளர், 0777588729

## VACANCY

ASTP Tec Pvt.Ltd a Authorized dealer for Toshiba and DeLL is in the lookout for customer oriented, loyal and hard working candidates to fill the following vacancy.
1. Hardware Tecnician-3
Experience: 2 Ys/
Interested candidates who possess the required skills and aspire to be a part of our growing team, are invited to send in their resumes to the address provided below on or before 18th of August 2011
Director,
ASTP TEC PVT LTD.
P.O. BOX 158
JAFFNA

வெல்லுங்கள் பரிசு ரூ.4,000
புதிர் போட்டி இல 2
பின்வரும் உருக்களில் வேறுபட்ட உரு எது?
(A) (B) (C) (D) (E)
உங்கள் விடையை UP2 A/B/C/D/E _<your name>_ <address> என்பவற்றுடன் type செய்து 0772395895 என்ற இலக்கத்துக்கு 13/08/2011 க்கு முதல் அனுப்பி வைக்கவும்.
MCS 324, Palaly Road, Parameswara Junction
www.mcsitcampus.org

A/L 2012 மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 5ம் தவணைக்கான (அடுத்த) புதிய நேரசூசி, நேரசூசி மட்டும்
பிரிவு - (COMPANY)(கம்பெனி ரக நேரசூசி)
கணக்கீடு
உங்கள் திரு.பாலகஜன் (H.N.Dip-in-Acc)
சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்: 13.08.2011 சனி (நாளை)
புதிய அனுமதிகளை பின்வரும் ஏதேனும் கல்விநிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
NEC ஆனைப்பந்தி சந்தி பருத்தித்துறை வீதி (Sat, Sun-10-11am) சனி 10 மணி
College OF COMMERCE (கந்தரோடை வீதி சுன்னாகம் (Sat, Sun-5-6pm) சனி 5 மணி

வாழ்வின் சகல சௌபாக்கியங்களும் தரும்
சோ.கூ.றே.மணிமேர்க்கஸ் பெட்டகம்
கடன்தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக்கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய்களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு. மனை, கடை, மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.
விலை ரூபா 5100.00 மட்டும்.
எம்மிடம் ஒடர்செய்து பெற்றுக்கொண்டவர்களில் சிலர் பயன்படுத்த ஆரம்பித்து சில தினங்களுக்குள் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தொலைபேசி மூலம் சான்று கூறுகின்றனர்.
உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்.
077 1399950.

## G.A.Q (FIRST IN ARTS)

பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)
★ பேராதனை பல்கலைக்கழகத்தினால் பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ பரீட்சை விண்ணப்ப முடிவுத் திகதி: 10.09.2011
குறிப்பு: புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
விபரங்கட்கு: நிர்வாகி S.அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 2013 LOGIC P. கமல்
குறிப்பு அளவையியல் விஞ்ஞான வழையியல்
Sat, Sun
B I-7 Am, B II-11 Am
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி

புவியியல் S.R. BALA
B.A (Hons) Dip.in.Edu
A/L 2013 மாணிப் புவியியல் (சனத்தொகை) செய்முறை புவியியல் (தேசப்படம்)
Sat, Sun 8.00-9.00Am
A/L 2012 மாணிப் புவியியல் (விவசாயம்) செய்முறை புவியியல் (வரைபடங்கள்)
Sat, Sun 10.00-11.00Am
ஆரம்பம்: 13-08-2011 (சனி)
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

SINGER இன்
160 ஆண்டு நிறைவை முன்னிட்டு
சுன்னாகம் SINGER வழங்கும்
20% வரை இன்று மட்டும்!
அதிரடி விலைக் கழிவுகள்



மாலை நேர விசேட நிகழ்ச்சிகள்
(பி.ப. 4 மணி முதல் 7 மணிவரை)
★பி.ப. 4 மணி விசேட சமய ஆராதனை
★பி.ப.4.30 மணி முதல் 7 மணி வரை
இன்னிசை நிகழ்ச்சியும் வாடிக்கையாளரிடையேயான போட்டி நிகழ்ச்சியும்
வாடிக்கையாளர் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
முகாமையாளரும், ஊழியர்களும்
சிங்கர் பிளஸ் சுன்னாகம்
இல. 136, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
தொ.பே: 021 224 0555

## மிருசுவில் படித்த மகளிர் திட்டம் - துர்க்காபுரம்

ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம் - 2011



அலங்கார உற்சவம் 05.08.2011 வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. தொடர்ந்து நாளை 9 ஆம் நாள் 13.08.2011 சனிக்கிழமை அன்று தேர் உற்சவம் நடைபெற உள்ளது. அன்றைய தினம் விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞான துர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் சூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்கா தேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும்.

அடியார்கள் இந்த உற்சவத்தில் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீ ஞான துர்க்கை அம்மனின் பாதாரவிந்தங்களைத் தொழுது திருவருள் பெற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

துர்க்காபுரம்,
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா.

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month
Rs. 3000.00
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்தின் கலையை Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna.
Tel: 021 2224550 HotLines: 0777222422/ 0777585913/ 0714299935
BCHS
15-08-2011
Batch I :09.00 AM - 12.00 PM
Batch II :02.00 PM - 05.00 PM
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் சிரமத்தை தவிர்க்கவும்.





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்வை வேவிலந்தை முத்துமாரி அம்மன்

# தேர்த் திருவிழாச் சிறப்புமலர் - 2011



## மஹோற்சவ குருக்களின் ஆசிச்செய்தி



நிகழும் மங்களகர கரவருஷத்தில் ஆடி மாதம் வெள்ளிக்கிழமை காலை 8மணிக்கு அம்பிகையினுடைய மஹோற்சவத்தின் ஓர் அங்கமாக விளங்கும் ரதோற்சவம் இடம் பெறும். ஒவ்வொரு வருடமும் நடைபெறு வதைவிட இந்த வருடம் மூன்று புதிய சித்திரத் தேர்களில் விநாயகர்,அம்பிகை, முருகன் ஆகிய மும்மூர்த்திகளும் வீதிவலம் வருகின்ற கண்கொள்ளாக் காட்சியைக் காணமுடியும். ''என்ன புண்ணியம் செய்தன'' என்ற வாக்கியத்திற்கிணங்க நாம் அனைவரும் வடம் பிடித்துத் தேரை இழுத்து இறைவனின் திருநாமங்களைச் சொல்வதால் நாம் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி நோய்நொடி உஷ்ண சம்பந்தமான வியாதிகளின்றி முத்துமாரித் தாயாரின் கடைக்கண் பார்வையினால் அனைத்து ஜீவராசிகளும் துன்பமின்றிப் பதினாறு பேறுகளும்பெற்று வையகத்துள் அம்பிகையுடைய அருளும் ஆசியும் பெற்றுவாழ அம்பிகையின் பாதாரவிந்தங்களைப் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

சிவாகம கிரியாநிதி
பிரம்மஸ்ரீ சதாசிவ சுரேஸ்வரக்குருக்கள்,
லண்டன் ஈழபதீஸ்வர ஆலயம்.

## தேரேறி வரும் தாய்




நயந்தோர் அவையத்து நாம் செய்த புண்ணியத்தால் இப்பிறவியில் அம்பிகையின் அருள்பாடிக்.கசிந்து பக்தி செய்வதற்கு வாய்ப்புக்கிடைக்கப் பெற்றுள்ளது. அல்வாயில் அமர்ந்து அருள்பாலிக்கும் வேவிலந்தை முத்துமாரித்தாய் இந்தக் கலியுகத்தில் இந்த மண்ணில் மக்களை மாண்புறச் செய்ய பல அற்புதங்களை நிகழ்த்தி வருகிறாள். தன்னை நாடிவரும் அடியவர்களுக்கு உடல்பிணி, உளப்பிணி நீக்கி நல்வாழ்வு வாரி வழங்குகிறார். தனது அருள்பிரவாகத்தை ஆலயச் சூழலைக்காணும் அனைவருக்கு உணர்த்தியுள்ளாள். இற்றைக்கு 400 வருடங்களுக்கு முன் தன் அடியவர் மூலம் தானே விரும்பியுறைந்த பதி வேவிலந்தைப் பதியாகும்.

வேவிலந்தையில் அமர்ந்து அருள்பாலிக்கும் முத்துமாரித்தாய் இன்று சித்திரத் தேரேறி வருகிறாள். தேர்த் திருவிழா பஞ்சகிருத்தியங்களில் அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. அழித்தல் என்பது ஆன்மாக்களின் பாச மலங்களை அழித்தலாகும். இந்தவகையில் அழித்தல் தொழிலைப் புரிவதற்காகத் தேரேறிவரும் அம்பிகை 2001 ஆம் ஆண்டு தனக்கென சித்திரத் தேரை அமைப்பித்துக் கொண்டாள். ஆனால் பத்து வருடங்களின் பின்னர் தனது பரிவார மூர்த்திகளாகிய விநாயகர், சுப்பிரமணியன் ஆகியோருக்கும் இந்த ஆண்டு சித்திரத் தேரை அமைத்து மூன்று தேர்களும் பவனி வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்தக் காட்சியை இந்தப் பிறவியில் நாம் காணப் பெறுவது நாம் செய்த புண்ணியமே. விநாயகப் பெருமான் அம்பிகை, சுப்பிரமணியர் ஆகியோர் தனித்தனித் சித்திரத் தேரில் பவனிவரும் இந்த நன்நாளில் அவள் காட்சியைக் கண்டு உடல்பிணி, உளப்பிணி நீக்கி உலகில் அமைதியும் சமாதானமும் வேண்டி அன்னையின் அருளைப் பிரார்த்திப் போமாக.

ஆ.சிவநாதன்,
அதிபர் , வல்வை சிவகுரு வித்தியாசாலை.

## நிர்வாக சபைச் செயலாளரின் வாழ்த்து



அருள்பொழி அல்வாய் வேவிலந்தைப் பதியினிலே வேம்பும் இலந்தையும் வானுயர செழித்து வளர்ந்துள்ள சூழலிலே குடிகொண்டிருக்கும் எம் அன்னைக்கு இன்று இனிய நன்நாள். மிக அழகாக அமைக்கப்பட்ட சித்திரத் தேரிலே ஆண்டுதோறும் எம் அன்னை வீதியுலா வருவதைக் கண்டு அடியவர்களாகிய அனைவரும் அருள் பெற்றிருப்பீர்கள்.

ஆனால் இம்முறை வடிவமைக்கப்பட்ட புதிய இரு சித்திரத் தேர்களிலே அன்னையும் இரு புதல்வர்களும் வீதியுலாவரும் அருட்காட்சியைக் காணக் கண்கோடி வேண்டும். இந்தப் பேற்றினை அடியவர்களாகிய நாம் பெற் றுள்ளது பெரும்பாக்கியம். திருக்கோயில்களில் நடை பெறும் உற்சவங்களுள் தலையாயது தேர்த்திருவிழாவா கும். இறைவனின் ஐந்தொழில்களில் அழித்தல் என்னும் சம்ஹாரத் தொழிலை குறித்து நிற்பதே இந்த ரதோற்சவமாகும். இந்த இனிய நாளிலே அடியவர்கள் அனைவரும் வந்து கலந்து எம் அன்னையும் இரு புதல்வர்களும் சித்திரத் தேரில் ஆரோகணித்து அருள்புரியும் அற்புதக் காட்சியைக் கண்டு அன்னையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

''சக்தி சக்தி சக்தி சக்தி சக்தி என்றோது
சக்தி சக்தி என்போர் சாகார் என்றோது''

வே.பரராஜசிங்கம்,
செயலாளர், ஆலய பரிபாலன சபை.

## சித்திரத்தேரேறி சிறப்பாக வருமழகி

பிறையணி பித்தனும் உமையருகிலமர்
பிடியதன் தும்பியுமவன் மடிதனில்
பித்தனுக்குருவான வேலவனுமருகில் அமர்ந்தே
பிறையென ஒளி வீசிய குண்டலமணி அம்மையே சரண்.

அல்வையிலே அம்மையாக வந்தழகி
அருள் சுரக்கும் ஆனந்தக் கவியழகி
கார் குழலுடை சடையழகி
காந்தமெனக் கவரும் கண்ணழகி
செவ்வாழை நிறமுடை உதட்டழகி
சீர்பொலியும் சிரிப்பழகி
சிற்றிடையோர் மெய்யழகி
சிங்கார சிற்பம் கொண்ட தேரழகி
பிறை கொண்ட நாயகன் துணையழகி
பிள்ளையென வேழமதின் தாயழகி
பாருக்கு பெருமைசேர் பெண்ணழகி
பாவியெனக்கு பாவென வந்த சொல்லழகி
சுந்தரத் தமிழில் சொல்கொண்ட பேரழகி
சுதியோடு கவிபாட பண்ணழகி
சித்திரத் தேரேறி சிறப்பாக வருமழகி
சீர் பெருக நலமெல்லாம் தருமழகி

அல்வையூர் யோகி (த.யோகநாதன்).

## ஆலய பிரதம குருவின் ஆசிச்செய்தி



அல்வையூரின் வேவிலந்தைப் பதிதன்னில் கோயில்கொண்டு அருளாட்சி நடத்துகின்ற எம் அன்னை முத்துமாரிக்கு கரவருஷத்து மஹோற்சவத்தில் இன்று ரதோற்சவம். ரதத்தில் பவனிவரும் அன்னை இன்று புதுப்பொலிவு பெற்று ஆனைமுகத்தானையும் ஆறுமுகத்தானையும், புதிய சித்திரத்தேரில் முன்னே அனுப்பி அவர்களது அழகைத் தான் ரசித்த வண்ணம் வலம்வர இருக்கின்றமை எமக்கெல்லாம் உள்ளப் பூரிப்பை ஏற்படுத்துகின்றது.

அன்னையானவள் ஆன்மாக்களின் ஆணவ மலத்தினை அடக்கி அழித்து பாவவினையறுக்கும் அற்புதத் தொழிலை ஆற்றும் நிகழ்வே இன்றைய ரதோற்சவம். ஆடி அமாவாசையுடன் ஆரம்பமாகி ஆடிப்பூரவிழா போன்ற சிறப்பம்சங்களைக் கொண்டு திருவிளக்குப் பூஜை,சுமங்கலிபூஜை, நவசக்தி அர்ச்சனை, பக்தோற்சவம் என்ற உயர் விழாக்களை கொண்டு அடியார்களுக்கு அருள்பாலிக்கும் எம் அன்னை வேண்டுவார் வேண்டும் வரம் தந்தருளும் தேவியாக உள்ளாள். அத்தகைய அன்னையை இன்றைய ரதோற்சவத்தில் பாடிப்பரவி கும்பிட்டுக் கூத்தாடி வணங்கி அருள் பெறுவோம் என ஆசி கூறுகின்றேன்.

''முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருநாளுந் தீங்கில்லையே''.

ஆலயப் பிரதமகுரு
சதாசிவ. சிவகுமாரக்குருக்கள்.

## பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



வேண்டும் வரம் தந்தருளும் வேவிலந்தைப் பதி தன்னில் அருளாட்சி நடத்தும் அன்னைக்கு இன்று அற்புதத் திருநாள். தன் புதல்வர்களையும் இணைத்துக் கொண்டு அதியற்புதமான சித்திரத்தேர்கள் ஒன்றன் பின் ஒன்றாகப் பவனிவரும் காட்சியைக்காண எம் இரண்டு கண்களும் போதாது. அத்தகைய பெருமைமிகு நிகழ்வு இந்த ஆண்டு மஹோற்சவ நன்நாளில் நடைபெறுகின்றது.

மனிதர்களாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் ஏதோ வகையில் இந்த பூவுலகில் பணி செய்கிறோம். அத்தகைய பணிகளில் இறைபணி மகத்தானது. இறைபணி செய்யும் பாக்கியம்பெற்ற நாம் அண்டங்கள் அனைத்துக்கும் சக்தியாக விளங்கும் அன்னைக்கு எம் ஊரில் வேவிலந்தைப் பதியில் கோயில் அமைத்து இன்று வானளாவி உயர்ந்த கோபுரம், சித்திரத் தேர்கள், பூங்காவன மண்டபம், மணிமண்டபம், ஓசையில் உயர்ந்த கண்டாமணி. இத்தகைய உயர் திருப்பணிகளை இயற்றி வாழ வழி செய்துள்ளோம். எனவே அன்னையின் பாதக் கமலங்களை வணங்கி அவளின் கடைக்கண் பார்வையிலே திளைத்திருப்போம்.

சி.கணேசமூர்த்தி,
தலைவர், ஆலயப்பரிபாலன சபை.

## அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்



ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை முழுமுதற் கடவுளாகக்கொண்ட எம் சைவசமயம் சக்தியை சிவனுடன் இணைத்து அன்றுதொட்டு வழிபாடியற்றி வருகின்றது. சக்தியின்றி சிவம் இல்லை, சிவம் இன்றி சக்தி இல்லை என்ற மஹோன்னத உண்மையை இவ்வுலக ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்வு வெளிப்படுத்தி நிற்கின்றது. இதனையே 'சக்தியின் பின்னமிலான் எங்கள்பிரான்' என்ற உயர்ந்த கூற்று வெளிப் படுத்தி நிற்கின்றது.

இத்தகைய சக்தியை தனித்து வழிபடும் மரபும் ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் சிறப்புப் பெற்றது. இத்தாய்த் தெய்வ வழிபாடு அன்றுமுதல் இன்றுவரை பேணப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது "அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை'' ''தாயிற் சிறந்த கோயிலுமில்லை..'' ''தாய் அன்பிற்கு ஈடினை ஏது '' என்று தாயைப் போற்றும் எம் சமூகம் தாயைத் தெய்வமாக உருவகித்து வழிபடுவதில் வியப்பொன்றுமில்லை. இத்தகைய தாய்த் தெய்வ வழிபாட்டில் ஒன்றுதான் வேவிலந்தைப் பதியாளின் வழிபாடும். இத்தகைய வழிபாட்டு மரபில் அன்று உடைச்சி நாச்சியாரால் வழிபாடு இயற்றப்பட்ட தாக கூறப்படும் மரபு பின்பு ஆகம நெறிப்பட்ட வழிபாடாக வளர்ச்சி கண்டுள்ளது. கொட்டில் அமைத்து வேம்பும் இலந்தையும் இணைந்த மர நிழலில்தோன்றி இன்று வேவிலந்தைப் பதியாக உயர்வு பெற்று ஆயிரமாயிரம் அடியவர்களைத் தன்னகத்தே கொண்டு மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற உயர்நெறிகளோடு புதுப்பொலிவு பெற்று விளங்கும் பெரும்பதிதான் அல்வையூர் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரியம்பாள் என்றால் மிகையாகாது. வயதிலும் அனுபவத்திலும் மூத்தவர்களாக விளங்கும் பெரியோர்களைக் கொண்டு அமைக் கப்பட்ட இந்த பரிபாலன சபையினர் திட்டமிட்டு அம்பிகையின் திருப் பணிகளை முன்னெடுத்தனர். இவ்வாறு உயர்ந்த எண்ணங்கொண்டு செயற்பட்டதன் விளைவாக இன்று இந்த ஆலயத்தை புதுப்பொலிவு பெற்று வடமராட்சியில் மூன்று சித்திரத் தேர்கள் பவனி வருகின்ற ஆலயமாக மிளிரச் செய்துள்ளனர்.

இத்தகைய சிறப்புமிகு ஆலயத்தில் செவ்வாய்க்கிழமை விஷேச தினமாக அபிஷேகங்கள் நிகழும் அன்றையதினம் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் கூடுவர்.

அம்பிகைக்கு அளவிலாத நிதி வளத்தை அள்ளிக்கொடுக்க தாயானவள் பெருங்கருணை கொண்டு அவர்களுக்கு வேண்டும் வரம் ஈர்ந்து மகாமாரியாக மாரி பொழிவதுபோல் பொழிந்து அவர்கள் மனதில் இடம் பிடித்துள்ளாள். இன்று சமயப்பணி சமூகப்பணி ஆற்றுவதில் முன் னணியில் திகழும் ஆலயங்களில் எமது ஆலயம் முன்னணியில் திகழ் கின்றது. பெரும்பாலான திருப்பணிகள் நிறைவடைந்து உள்ளமையால் எதிர்காலத்தில் சமூகப்பணிகளை அதிகளவில் முன்னெடுக்க வாய்ப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய அம்பிகையைச் சரணடைந்து அவள் பாதங்களில் எம் குறைகளை முறையிட்டு வரம்பல பெற்றிடுவோம். ரதோற்சவம் சிறக்க அனைவரும் வடம் பிடிப்போம் வாரீர்.

ந.தேவராசா, பரிபாலனசபை உறுப்பினர்.

## வாழ்த்துச் செய்தி



அண்டமெங்கும் அருள்பாலித்துவரும் அருட்கடலாம் நம் அன்னை பராசக்தி, முத்துமாரி அல்வையம்பதியில் வீற்றிருந்து அடியார் துயர்துடைத்து வருகின்றாள்.

இன்று வருடாந்த மஹோற்சவ ரதோற்சவமாகும். வருடத்தில் ஒருமுறை தேரேறி நம்மில் உறைந்துள்ள அகங்கார மமகாரங்களை மும்மலங்களை அழித்து ஒழிப்பதற்காக வீதியுலா வருகின்றாள் நம்தாய். மூத்தமைந்தன் ஆனைமுகன் அழகிய சித்திரத்தேரில் முன்செல்ல அவன் பின்னே அழகன், முருகன், ஆறுமுகன் செல்ல, அவரிருவரின் அழகினை சித்திரத்தேரின் வனப்பினைப் பார்த்து இன்புற்றவாறு மாரியம்மா பின்னே வருகின்றாள் அழகிய சித்திரத்தேரில்.

மெய்யடியார் ஆசார சீலர்களாக காட்சியளித்து தேர் வடத்தை இருபாலாரும் சேர்ந்து இழுப்பதனையும் கண்டு ஆனந்திக்கின்றாள் அம்பிகை. வெவ்வினை அகன்றதென்று நாமும் மனநிறைவடைவோம். மெய்யுணர்வு பெற என்றும் இறைபக்தியுடன் வாழ்வோம். தீயவை தீமை பயத்தலால் நல்லன செய்வோம். [illegible] வாழ்த்துவதுடன் அடியார் அனைவரும் புத்துணர்வுடன் புதுப்பொலிவுடன் [illegible] இறைஞ்சி வேண்டுகின்றேன்.

நா. சந்திரசேகரம் பொருளாளர், (பரிபாலன சபை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை செங்கற்படை[...]
# தேர்[...]
இன்[...]





*ஜெகத்தில் விளங்கும் மகத்தான தெய்வம் மகாதேவ கணபதி மஹோற்சவ சிவாச்சாரியாவின்*

## ஆசிச் செய்தி

சித்திப்பவர்கள், தன்னை வந்திப்பவர்கள், தன்னுரு வந்து தரிசிப்பவர்கள் தூரத்தே அன்பில் ஊறித் தன்னைப் பந்திப்பவர்கள் என அனைவரையும் அவ்வவ் கணமே சந்தித்து தரிசனம் தருபவர் - சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் என்றால் அது மிக மிக மெய்யான பொய்யா மொழி. பொய்யார்க்கு பொய்யராகியும் மெய்யார்க்கு மெய்யராகியும் மேன்மை மிக்க திருவிளையாடல் புரியும் தத்துவப் பொருளாகிய ஓங்கார கணபதி சகல ஆன்ம கோடிகளினதும் அகங்கார மமகார இருள வித்து ஒளிபெருக்கும் முகமாக சித்திரத் தேரேறி வீதிவலம் வருவது எமக்குக் கிடைத்த வளமான பெரும் பேறு.

பேறுகள் பதினாறும் அப்பெருமானின் தரிசனத்தால் அவனடியார்கள் அனைவருக்கும் சித்திக்க செங்கற்படையானை பணிந்து பிரார்த்தித்து பல்லாண்டு கூறி பேணிப் போற்றுகின்றேன்.

*'ஓங்காரம் என்ன ஓங்கும் வாழ்வு'*

சிவஸ்ரீ ஸ்ரீ காந்தக் குருக்கள்
கதிரமலை சிவன் தேவஸ்தானம்,
சுன்னாகம்.



## முன்னைக்கும் பின்னைக்கும் முகிழ்த்த முழுமுத[...]

முன்னைப் பழம் பொருளாய் பின்னைப் புதுமையாய் எம் வேண்டுதலுக்கு இயைந்த இறைவடிவம் கொள்பவர் வேழ முகத்து விநாயகக் கடவுள். ஐந்து கரத்தானாகி ஐந்தொழிலுக்கும் அதிபனாய் ஐந்து தெய்வமாகி அனைத்தையும் தன் ஜென்ம வடிவில் வகுத்துக்காட்டுவர். இந்துச் சடைமுடி இறைவனாம் கணபதிக் கடவுள். காலம் கடந்த கற்பகப் பொருளான அப்பெருமான் இன்று ஆறாவது ஆண்டு தனது விந்து ரூபமான சித்திரத்தேரில் ஆரோகணித்து எமக்கெல்லாம் பேரருள் புரிகின்றார். சங்கானை செங்[...] படை மகாதேவப் பிள்ளையார் என்ற செ[...] லிலேயே சகல வினைகளும் சிதையும். சி[...] கள் எட்டும், கைகிட்டும், அனைவர்க்[...] கைகொடுக்கும் தெய்வமாக விளங்கும் எ[...] தும்பிக்கையான் தேரேறி திருக்காட்சி த[...] இத்திருநாளில் அவனருளாள் அவன்த[...] வணங்கி அனைவரும் சிந்தை மகிழ இன்[...] சிறக்க நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ கிருஷ்ண குமாரக் குருக்[...]
தேவஸ்தான பிரதம கு[...]
செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆல[...]


**கலாபா**
இன்டஸ்ரியல்
எலையிற் சோடா அன் ஸ்ரார்
குயிக் உணவு உற்பத்தியகம்
றோயல் பேக்கரி
குளிர்பானங்கள் ஓடருக்குக் குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.
மல்லாகம் றோட், சங்கானை.

**பிள்ளையார் மணல் சல்லி விற்பனை நிலையம்**
அன் ரான்ஸ்போட்
பிள்ளையார் கிறேசர்
பிரதான வீதி, சங்கானை.
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

கணினிப் பிரதியாக்கம், போட்டோப் பிரதிகள் கவரிடுதல் மற்றும் அனைத்து அச்சு வேலைகள் செய்வதற்கு நாடவேண்டிய ஒரே இடம்
**சாய்ராம்**
பிறின்டேர்ஸ்
பிரதான வீதி, சங்கானை.

பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
**கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்**
அன் ரான்ஸ்போட்
பிரதான வீதி, சங்கானை.

**வள்ளியம்மை**
பல்பொருள் வாணிபம்
நிற்சமம், சங்கானை.

தொலைத்தொடர்பு சேவைகள், ஒவ் செற் பதிப்பு, போட்டோப் பிரதி, கிளீன்காட் வேலைகள் செய்து தரப்படும்.
**Flash net**
நிகர வீதி, சங்கானை.
ஐங்கரன் ரான்ஸ்போட் சேவிஸ்
சிலம்புப்புளியடி, சங்கானை.

**ஆசைப்பிள்ளை அன்சன் நகைமாடம்**
22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
இல.10, பஸ்நிலையம் முன்பாக, சங்கானை.

**றஞ்சன் ஸ்ரோர்ஸ்**
பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, சங்கானை.

திருமண வைபவங்கள், விசேட நிகழ்வுகளுக்கு குறித்த நேரத்துக்கு ஒழுங்கு செய்துகொள்ள
**விஜிந்தன் ரவல்ஸ்**
உரிமையாளர்: சிறி
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
**கா.வைத்திலிங்கம் அன்சன்**
பிரதான வீதி, சங்கானை.

**சோமசுந்தரம் சைக்கிள் வேக்ஸ்**
துவிச்சக்கர வண்டி திருத்தும் வேலைகள், சேவிஸ்வேலைகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்.
நிதரை வீதி, சங்கானை.

நெல் உடைத்தும் திட்டியும் மற்றும் தானிய வகைகள், ஈர அரிசி அரைத்தும் கொடுக்கப்படும்.
**யோகா அரைக்கும் ஆலை**
பிரதான வீதி, சங்கானை.

திருமண வைபவங்கள், கலைவிழா நிகழ்வுகளுக்குக் குறித்த நேரத்துக்கு ஒழுங்கு செய்துகொள்ள
**சேயோன்.ரவல்ஸ்**
உரிமையாளர் : புஸ்பசோதி
ஆஸ்பத்திரி வீதி,சங்கானை.

பிறந்த நாள் திருமண வைபவங்களுக்கான பிஸ்கட் வகைகள், கேக் வகைகள் குறித்த நேரகாலத்தில் செய்து தரப்படும்.
**லீலா பேக்கவுஸ்**
பிரதான வீதி, சங்கானை.

**இந்து இளைஞர் மன்றம், மாதர் சங்கம், சிறுவர் மன்றம்.**
சங்கானை

**RT ரான்ஸ்போட் சேவிஸ்**
உரிமையாளர்: இ.தேவராஜா
சிலம்புப் புளியடி, சங்கானை.

திருமண வைபவங்கள், கலை விழா நிகழ்வுகளுக்கு குறித்த நேரத்தில் ஒழுங்குசெய்ய
**G.K.ரவல்ஸ்**
16/B அன்னை திரேசா வீதி,
ரம்பைக்குளம், வவுனியா.
உரிமையாளர்: [...]கேந்திரன்

மலர் அமைப்பு : [...]

தேரேறிவரும் செங்கற்[...]
எங்கள் வாழ்வில் உந்த[...] அரு[...]

தேர்த்திருவிழாச் சிறப்புறப் பிரார்த்திப்போ[...]

பலசரக்குப் பொருள்கள், குளிர்பான வகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
**இலட்சுமி ஸ்ரோர்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.

மின்சார உதிரிப்பாகங்கள், [...] வகைகளைப் பெற்றுக் [...]
**பாக்கியரத்தின[...]**
கட்டடப்பொருள் விற்பனை[...]
கிளை: தரன் றேட[...]
பிரதான வீதி, சங்கா[...]
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்[...]

காலை, மதியம், மாலை உணவு வகைகள் ஓடருக்குப் பெற்றுக் கொள்ள
**நாச்சிமார் சைவ உணவகம்**
பிரதான வீதி, சங்கானை.

சகலவிதமான உணவு [...] குறித்த காலநேரத்தில் பெற்[...]
**கல்சியா உ[...]**
பிரதான வீதி, சங்க[...]

பலசரக்குப் பொருள்கள், மரக் கறிவகை, விவசாய உள்ளீடுகள், உரவகைகள் பெற்றுக் கொள்ள
**சோதி ஸ்ரோர்ஸ்**
நிற்சாமம், சங்கானை.

சகல விதமான நுட்ப வே[...]
**தர்சின[...]**
மரத்தளபாட இயந்திரத் [...]
காளிகோயிலடி, சங்[...]
உரிமையாளர்: வ.திரு[...]
0779576705[...]

பிறந்த நாள், திருமண வைபவங்களுக்கான பிஸ்கட் வகைகள், கேக் வகைகள் குறித்த நேரத்தில் செய்துகொள்ள
**உதயா வெதுப்பகம்**
மல்லாகம் வீதி, சங்கானை.

பலசரக்குப் பொருள்கள், [...] அர்ச்சனைப் பொருள்கள் சி[...] பெற்றுக்கொள்[...]
**பிள்ளையார் ஸ்[...]**
பிள்ளையார் கோ[...]
நிற்சாமம், சங்கா[...]

**வீரகத்திப் பிள்ளையார் ரான்ஸ்போட் சேவிஸ்**
உரிமையாளர்: செ.அரியதாசன்
ஆறுமுகம்வீதி, கந்தரோடை,
சுன்னாகம்.

**ஞானவை[...]**
விளையாட்டுக்[...]
நிற்சாமம், சங்கா[...]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டை மகாதேவப் பிள்ளையார் ஆலய
# தேர்த் திருவிழாச் சிறப்பு மலர்

## இன்று (12.08.2011) வெள்ளிக்கிழமை (நண்பகல் 12 மணி)



## சங்கடங்களைச் சங்கரிக்கும் செங்கற்படையான்



தொல்லைப்பிறவி ஓர் துயர் மாகடல், இதில் அல்லல் உற்று வாழும் ஆருயிர்கட்கு பெரும் தோணியாக இருந்து கரை சேர்ப்பவர் கணபதிக் கடவுள், எங்கள் மகாதேவப் பிள்ளையார். சங்கானை செங்கற்படைபதியில் மூர்த்தி தரித்து அருள்பாலிக்கும் இத்தெய்வம் நீண்ட வரலாற்றுப் பெருமையுடையவர்.

யாழ்.மண்ணின் கடைசி அரசனாக விளங்கிய சங்கிலி அரசன் காலத்தில் சோழமண்டலத்தில் இருந்து வந்து யாழ்.குடாவில் குடியேறிய மூதாதையர்களால் அரச பிரதானிகள் என்ற வகையில் சங்கை நகரில் நிலை நிறுத்தப்பட்டபோது அவர்களின் வழிபடு குல தெய்வமாகத் தோன்றியவர் இக்கணபதி. தொடர்ந்து வந்த அந் நியர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் கைக்குக் கிட்டாமல் தன் அடியார்களால் இரு நூற்றாண்டுகளாக பேணப்பட்டு வந்த இம்மூர்த்தி 19 ஆம் நூற்றாண்டு மத்தியில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சங்கானை நகரின் மத்தியில் செங்கற்படை என்னும் தலத்தில் கிராம மக்களுக்கு அருள்பாலிக்கும் வகையில் கோயில்கொண்டு அருளினார்.

அக்காலத்தில் அருகில் இருந்த செங்கற் சூழைகளிலிருந்து பெறப்பட்ட செங்கற்களால் கட்டப்பட்டு ஓலைக் கூரையின் கீழ் அமைந்ததால் செங்கற்படை என ஆலயதலப் பெயரும் உருவாகியது என எம் மூதாதையர் சிலர் வரலாறு கூறுவர்.

இவ்வாறான விநாயகப் பெருமானின் ஆலயம் 1925 ஆம் ஆண்டு சங்கானை விதானையார் திரு.செவ்வந்திநாதன் அவர்கள் முயற்சியில் முருகைக் கற்களால் கட்டப்பட்ட மூலஸ்தான ஆலய மாக உருப்பெற்றது. தொடர்ந்து மெய்யடியார்களின் முயற்சியினால் இவ்வாலயம் வைரகல் கட்டடம் அமைப்போடு சிற்பசாஸ்தி ரத்தில் கூறப்பட்ட சிறந்த இலக்கண விதிமுறை கொண்ட ஆலயமாக 1972 ஆம் ஆண்டு உருப்பெற்று குடமுழுக்குக் கண்டது. தொடர்ந்து மெய்யடியார்களின் விடா முயற்சியின் பயனாக பல வளர்ச்சிகளைக் கண்டு தனக்கென்ற ஒரு அமைப்பைப் பெற்று சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்கின்றது.

பல வளர்ச்சிகளைக் கொண்ட இவ்வாலயத்துக்கு 2006 ஆம் ஆண்டு தேர்த் திருப்பணிச் சபையை உருவாக்கி குறுகிய காலத்தில் சங்கானை மக்களின் ஆதரவும் விடா முயற்சியும் குறைந்த காலத்தில் நிறைந்த இப்பணியை நிறைவேற்றி வெளிநாட்டில் வசிக்கும் பக்த பெருமக்களின் ஆதரவுடன் தேர்த் திருப்பணிச் சபையினை அமைத்து அவர்களின் விடா முயற்சியினால் எம்பெருமானுக்கு சித்திரத் தேர் அமைத்து ஆடிப் பெருந்திருவிழாவின்போது 29 அடி உயரமான வண்ணமலை போல வடிவு பெற்று அழகிய திராவிட முகபத்திர சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு 07.08.2006 இல் வெள்ளோட்டம் நடைபெற்று 08.08.2006 இல் செங்கற் படை விநாயகர் தேரில் ஆரோகரித்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

சங்கானை நிற்சிங்க சேனாதிராசா முதலியார் வழித் தோன்றல்களால் பேணப்பட்டு பராமரிக் கப்பட்ட இவ் வாலயம் அனைத்துக் கிராம மக்களுக்கும் உரிய குல தெய்வமாகும். இன்று அப்பணியினை இம்மரபு வழி வந்த திருமதி நாகராசா செல்வநாச்சியார் ஆகிய என்னால் நிறைவு செய்யப் படுவதும் இறைவன் பெரும் கருணைத்திறனாகும்.

அந்த வகையில் இன்றைய தேர் உற்சவம் சித்திரத் தேரின் ஐந்தாம் ஆண்டு நிறைவைக் காட்டுவது இதுவும் அப்பெரு மானின் திரு வருளே எனக் கூறி ஆனந்தம் பெறுகின்றேன்.

வேழமுகன் வாழி அவன் மெய்யடியார்கள் வாழி

**திருமதி நாகராசா செல்வநாச்சியார்,**
*ஆலய பரம்பரை அறங்காவலர்,*
*செங்கற்படை விநாயகர் தேவஸ்தானம்,*
*சங்கானை.*

## வாழ்வு வழங்கும் வல்லவைநாதன்



வல்லமை வேண்டும், வளம் வேண்டும், என் வறுமை அனைத்தும் விலகவேண்டும் என மனமொழி அமைத்து தினம் தினம் தன்னைத் துதிப்பவர்கட்கு தப்பாது திருவருள் தருபவர் எங்கள் மகா தேவப்பிள்ளையார். தேவவாதி தேவனாய் தேடிக் காணுகின்ற தெய்வீகச் செல்வமாகித் திகழும் செல்வ கணபதியாய் மகா தேவப் பிள்ளையார் இன்றைய தினம் ஆறாவது ஆண்டு நிகழ்வாக அருமையான சித்திரத்தேரில் நவநீத மூர்த்தியாக நம்மோர்க்கு அருள்புரிய நம்மையே தேடி நாடி ஓடிவருகின்றார். தானே வந்து எமை தலை அளி(ழி)த்தாட் கொள்ளும் வித்தக விநாயகப் பெருமானை தத்துவத்தேரில் தரிசிப்பது- அவனது பொற்பதவாழ்வு பெறும் அற்புத வாய்ப்பாகும். அற்புதங்கள் அனைத்திற்கும் அற்புதமாக அருமை காட்டும் பெருமை உடைய ஐங்கரக் கடவுளின் தேர்த் திருவிழாவினை சிறப்பிக்க சித்திர வண்ணமாய் சந்தித்து வரும் இச் சிறப்பு மலரின் சித்திக்கு அச் செங்கற்படை யானையே வேண்டிப் பணிகின்றேன்.

*'செங்கற்படையான் என சென்றழியும்*
*வல்வினை வந்தவிக்கும் திருவினை'*

*தி.சிவதட்சணாமூர்த்தி*
மாகாணப் பணிப்பாளர் (பணிநிறைவு நிலை)
தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்



## ...5 முழுமுதல்

...கானை செங்கற் ...யார் என்ற சொல் ...ம் சிதையும். சித்தி ..., அனைவர்க்கும் ...க விளங்கும் எமது ...திருக்காட்சி தரும் ...ளாள் அவன்தாள் ...தை மகிழ இன்பம் ...த்துகின்றேன்.

...குமாரக் குருக்கள் ...தான பிரதம குரு, ...பிள்ளையார் ஆலயம்.

### ...மைப்பு : மு.கதிரவேலு

### ...ம் செங்கற்படையானே...!
### ...அருளைத் தந்தருள்வாயே....!!

### ...ர்த்திப்போரும் ஊட... அனுசரணையாளர்களும்


...உதிரிப்பாகங்கள், பெயின்ற் ...ளைப் பெற்றுக் கொள்ள
...க்கியரத்தினம் ...பொருள் விற்பனை நிலையம்
...: தரன் ரேடர்ஸ்
...தான வீதி, சங்கானை.
...லி வீதி, யாழ்ப்பாணம்.

**விதுஷா கிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி, சங்கானை.
ஸ்பெஷல் கிறீம் வகைகள்,
பழரசங்கள் ஓடருக்கு
குறித்த நேரத்தில் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

ஆடவர் பெண்களுக்கான ஆடை வகைகள், சிறுவர் சேட்டிங் சூட்டிங் வகைகள் பெற்றுக்கொள்ள
**அபிராமி ரெக்ஸ்**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.
பிரதான வீதி, சங்கானை.

பலசரக்குப் பொருள்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**மகாலட்சுமி பல்பொருள் வாணிபம்**
மடத்துப் பிள்ளையார் கோயிலடி,
தொல்புரம்.



**ரட்ணம்ஸ்**
லொறி கட்டுமான அமைப்பாளர்
சகல விதமான மரவேலை தயாரிப்புகள், லொறி பொடிவேலைகள், ரிங்கர் பெயின்ற் வேலைகள், அலுமினியப் பிற்றிங் இரும்பு வேலைகள் என்பவற்றைச் சிறந்தமுறையில் பெற்றிட
தேவி படமாடம்
யாழ்ப்பாணம் வீதி, மாவிட்டபுரம்.

பலசரக்கு பொருள்கள், மரக்கறி வகைகள், பழவகைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**ரவி ஸ்ரோர்ஸ்**
நிற்சாமம், சங்கானை.

**A.M.S.**
**பல்பொருள் வாணிபம்**
தொட்டிலடி, சங்கானை.

...தமான உணவு வகைகள் ...நேரத்தில் பெற்றுக் கொள்ள
**...யா உணவகம்**
...ான வீதி, சங்கானை.

தளபாடங்கள், கூரை வேலைகள், கதவு, அலுமினியம் பிற்றிங் வேலைகள் ஓடருக்குச் செய்துகொள்ள
**சுதன் தச்சுத் தொழிலகம்**
(அரசாங்க உத்தரவு பெற்றது)
உரிமையாளர்: த.சுதன்
நிற்சாமம், சங்கானை.

**உதயா**
*கட்டடப்பொருள் விற்பனையகம்*
59, பிரதான வீதி, சங்கானை.

திருமண வைபவங்கள், விசேட நிகழ்வுகளுக்கு குறித்த நேரகாலத்துக்கு ஒழுங்கு செய்து தரப்படும்.
**சிறிமுகி என்ரபிறைஸஸ்**
உரிமையாளர் கு.குணசிறி
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

ஆடவர், சிறுவர், பெண்களுக்கான ஆடை வகைகள், சேட்டிங் சூட்டிங் வகைகள் பெற்றுக்கொள்ள
**புதிய அபிராமி ரெக்ஸ்**
**கிருஸ்ணா ரெக்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.

...மான நுட்ப வேலைகளுக்கு
**தர்சினி**
...இயந்திரத் தொழிற்சாலை
...கோயிலடி, சங்கானை.
...யாளர்: வ.திருநாவுக்கரசு
0779576705

பலசரக்குப் பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள
**சின்னவன்**
**பல்பொருள் வாணிபம்**
பிரான்பற்று வீதி, சங்கானை.

**சீனியர்**
**இரும்புத் தொழிற்சாலை**
நிகரகோயிலடி, சங்கானை.
சகல விதமான டிசைன்களில் கேற்வகைகள், கிறில்கள் குறித்தநேரத்தில் செய்துகொடுக்கப்படும்

**பத்மராஜா அன்சன்ஸ்**
**நகைத் தொழிலகம்**
பிரதான வீதி, சங்கானை.
தொ.பே.:0776002584, 0776687022

பலசரக்குப் பொருள்கள், பழ வகைகள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**ஸ்ரீமுருகன் பல்பொருள் நிலையம்**
பிரதான வீதி, சங்கானை.

...ப் பொருள்கள், பழவகைகள், ...ப் பொருள்கள் சில்லறையாகப் பெற்றுக்கொள்ள
**...ளையார் ஸ்ரோர்ஸ்**
...ளையார் கோயிலடி,
...ற்சாமம், சங்கானை.

சகலவிதமன உணவு வகைகள் ஓடருக்கு குறித்த கால நேரத்தில் பெற்றுக் கொள்ள
**மகேஸ்வரி உணவகம்**
*ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.*

அழகுசாதனப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள், பலசரக்குப் பொருள்கள் பெற்றுக்கொள்ள
**லக்ஷி பான்சி அன் புக் சென்ரர்**
நிற்சாமம், சங்கானை.

*நா.வில்வராசா*
குடும்பத்தினர்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்கள், மின் உபகரணப் பொருள்கள், மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**கணபதி ஹாட்வெயர்ஸ்**
கீரிமலை வீதி, தொட்டிலடி
சங்கானை. 0776365983

**...னவைரவர்**
**...விளையாட்டுக் கழகம்**
...ற்சாமம், சங்கானை.

**தொட்டிலடி**
**சனசமூக நிலையம்**
சங்கானை.

**சிறிவேந்தன் (N.K.S)**
**வியாபார நிலையம்**
பழவகைகள், தானிய வகைகள் ...
பிரதான வீதி, சங்கானை.

**பிள்ளையார்**
**ரான்ஸ்போட் சேவிஸ்**
உரிமையாளர்: த.இராசநாயகம்
மல்லாகம் வீதி, சங்கானை.

கேற், கிறில் வகைகள் விரும்பிய டிசைன்களில் செய்துகொள்ள
**ரமேஸ் வெல்டிங் வேக்ஸ்**
தொட்டிலடி வீதி, தொட்டிலடி,
சங்கானை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தியர் தந்த எமது மொழியின் பெயரான தமிழ் தமிழர்களை உயர்த்தியது

# ஆங்கிலேயர் தந்த எமது மொழியின் பெயரான ரமில் (Tamil) தமிழர்களை வீழ்த்தியது

ஆயிரக்கணக்கான மொழிகள் இன்று இப்பூவுலகில் உள்ளன. அவற்றுள் எமது தாய் மொழியாம் தமிழ் மிகப் பெரும் பழமை வாய்ந்த மொழியாகும். மேலும் பல்லாயிரம் ஆண்டுகால இலக்கண, இலக்கிய வரலாற்றைக் கொண்டது மாகும். இதனால்தமிழை தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களாகிய நாம் உலகின் அனைத்து மொழிகளுக்கும் இலக்கணமும் இலக்கியமும் உண்டென நம்புவது இயல்பேயாகும். ஆனால் உண்மை நிலை ஆச்சரியப்படத்தக்க வகையில் முற்றிலும் மாறுபட்டதாகும்.

இன்றைய உலக மொழிகளில் தமக்கென எழுத்து வடிவம் வகுத்துக் கொண்ட மொழிகள் தமிழும், தமிழின மொழிகளும் மாத்திரமேயாகும். இது ஒரு முக்கிய வரலாற்று உண்மையாகும். மேலும் இன்றுவரை எழுத்து வடிவம் மேற்கொள்ளாத மொழிகள் பல மேலை உலகிலும், கீழை உலகிலும் உள்ளன.

ஆயிரமாண்டு கால இலக்கிய வளர்ச்சியுடைய மொழிகள் உலகிலே பதினொன்றுக்கு மேல் இல்லை. அவை மேலை உலகில் மூன்று மொழிகள். ஆங்கில மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலியமொழி என்பன. மேற்குக் கிழக்கு ஆசியாவில் மூன்று மொழிகள் பாரசீக மொழி, சீனமொழி, ஜப்பானியமொழி என்பன. தென்னாசியாவில் ஐந்து மொழிகள் தமிழ் மொழி, கன்னட மொழி, மலையாள மொழி, தெலுங்கு மொழி, சமஸ்கிருத மொழி என்பன. ஆரிய இன மொழிகள் என்று கூறப்படும் வட இந்திய தாய் மொழிகள் அனைத்தும் பிரிட்டிஷ் ஆட்சிக்காலம் வரை இலக்கியமற்ற மொழிகளாகவே இயங்கின. சிலவற்றுக்கு இன்று கூட இலக்கியம் கிடையாது.

மேலை உலகில் கிரேக்க இலத்தீன் மொழிகள் தமிழுடன் ஒத்த இலக்கியப் பழமையுடையன. ஆனால் நீடித்த இலக்கிய வாழ்வுடையன அல்ல. இலக்கண வகையில் தமிழும் உயர் தனிச் செம்மொழிகளாகிய சமஸ்கிருத மொழி, கிரேக்கமொழி, இலத்தீன் மொழி, அரபு மொழி, பாரசீகமொழி, எபிரேய மொழி ஆகியவை மட்டுமே தமக்கென இலக்கணம் வகுத்துக் கொண்டவை. மற்ற எல்லா மொழிகளும் இவற்றை பின்பற்றி அண்மைக் காலத்திலேயே இலக்கணம் வகுத்துள்ளன. (நன்றி : இன்தாம் இணையத்தளம்)

பாண்டிய மன்னனான காஞ்சின வழுதி முதல் கடுங்கோவன்வரை உள்ள எண்பத்தொன்பது அரசர்கள் முதற்சங்கத்தைப் பராமரித்து வந்துள்ளார்கள். சகல நல்லொழுக்க நற்குணங்கள் பொருந்திய சான்றோர்களாம் தமிழ் புலவர்களாகிய அகத்தியனார், முரிஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன், தொல்காப்பியனார் போன்றோர் முச்சங்கங்களிலிருந்து பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிதை, கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலை அகவல் போன்ற பலநூல்களை இயற்றியும், ஆராய்ந்தும் தமிழை வளர்த்துள்ளார்கள். தம் உயிரினும் மேலாக தமிழ் மொழியை கருதி அதற்காவே தம் வாழ்வை அர்ப்பணித்துள்ளனர். உள்ளொளி பெற்ற இப்புலவர் பெருமக்களுக்குள்ளே அகத்திய முனிவர் முதன்மையானவராகத் திகழ்ந்தார். பொதிகை மலையை உறைவிடமாகக் கொண்ட அவர் சிவபெருமான் மீது மிகுந்த பக்தி செலுத்தி சிவனருளால் தமிழ் மொழியை ஞான உணர்வால் பெற்றுக் கொண்டவர் ஆவார். இனிமையும், அழகும், என்றும் இளமையும் கொண்டதாக தமிழ் இப்பூமியில் என்றென்றும் விளங்கும் எனும் வரத்தையும் சிவனிடம் பெற்றுக் கொண்டுள்ளார். இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் எனும் முத்தமிழையும் இறைவனிடமிருந்து கற்றுணர்ந்து "அகத்தியம்" எனும் ஒப்பற்ற முத்தமிழ் இலக்கண நூலை வகுத்துள்ளார். இவர் முதற் சங்கத்திலிருந்த புலவர்களுக்குள் முதன்மையானவர். அம்முதற் சங்கத்தின் ஆரம்பம் இற்றைக்கு பதினாறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது. இம்முதற் சங்கம் நாலாயிரத்து நாநூற்றி நாற்பது ஆண்டுகளாக செயற்பட்டது. இச்சங்கத்தில் நாலாயிரத்து நாநூற்றி நாற்பத்தொன்பது புலவர்கள் இருந்தார்கள்.

அடுத்த இடைச்சங்கம் கபாலி புரத்தில் மூவாயிரத்து எழுநூறு ஆண்டுகளாக செயற்பட்டது. இதில் மூவாயிரத்து எழுநூறு புலவர்கள் இருந்தனர். அகத்தியரின் சீடரான தொல்காப்பியர் இதில் சிறப்புப் புலவராவார். இவர் அகத்தியம் எனும் இலக்கண நூலை வழியொற்றி தொல்காப்பியம் எனும் இலக்கண நூலை வகுத்தார். இன்று வரை அது உள்ளது.

அடுத்து வந்த கடைச்சங்கம் இப்பொழுதுள்ள தென் மதுரையில் நானூற்றி நாற்பத் தொன்பது புலவர்களால் ஆயிரத்து எண்ணூற்றி ஐம்பது ஆண்டுகளாகச் செயற் பட்டது. முதல், இடை, கடைச் சங்கங்கள் நூற்றிதொண்ணூற்றியேழு பாண்டிய மன்னர்களின் ஆதரவுடன் இயங்கியது. ஒன்பதினாயிரத்து தொளாயிரத்து தொண் ணூறு ஆண்டுகளாக இம்மூன்று சங்கங்களும் தமிழுக்கு பெரும்புகழ் சேர்த்தன.

அடுத்து அகத்தியரின் எச்சரிக்கைக் குறிப்பொன்றை நாம் அவசரமாக கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு பொருளுக்கும், ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வொரு தெய்வத்துக்கும் ஒவ்வொரு பெயருள்ளது. தெய்வப் பெயரை திரும்பத் திரும்ப உச்சரிப்பதால் பலமான சக்தி மிக்க அதிர்வலைகள் மனித மனத்திடமிருந்து உண்டாகி அதே மனிதனுக்கு நன்மைகளை விளைவிக்கிறது. தொண்டையில் காற்று அதிர்வதால் பேச்சு உண்டாகின்றது. செவிப்பறையில் ஒலி அலைகள் அதிர்வதால் கேட்டல் நடைபெறுகிறது. அடிமனதில் ஏற்படும் அதிர்வு மேல் மனதில் எண்ணமாக வெளிப்படுகிறது. திரும்பத் திரும்ப மனதில் ஏற்படும் நல்லெண்ண அலைகள், சக்திமிக்கதாகி நன்மையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறே தவறான அல்லது தீய எண்ண அதிர்வுகள் பலப்படும் போது தீய விளைவுகள் உண்டாகின்றன.

எழுதும் போதும், வாசிக்கும் போதும், பேசும் போதும் மனதில் மிகச் சிறப்பான அதிர்வுகளை எமது மொழியின் பெயராம் தமிழ் எனும் சொல் ஏற்படுத்துகின்றது. இதை சரியாகக் கணித்து உணர்ந்தே எமது மொழிக்கு அகத்திய முனிவர் தமிழ் எனும் பெயரைச் சூட்டியுள்ளார்.

மேலும் மொழியைக் காக்க வேண்டுமானால் மொழியின் பெயரை முக்கியமாகக் காக்க வேண்டும். மொழியின் பெயர் சிதைந்து போனால் அம்மொழியும், அம்மொழியைப் பேசும் மக்களும் கீழ் நிலை அடைவர். இந்த இரகசியக் கருத்தை ஆதியில் அறிந்த தமிழ் சான்றோர்கள் மொழிக்கு ஊறு நேரின் உயிரைக் கொடுத்தாயினும் எம் தாய் மொழியைக் காப்போம் என்று உறுதிபடச் சங் கற்பம் பூண்டனர். அதனாலேயே அனேக பாடல்கள், நன்னூல்கள் போன்ற வற்றை இயற்றியும் ஆராய்ந்தும் அவற்றின்படி ஒழுகியும் வந்துள்ளனர். அவர்களுக்கு இயல்பாகவே மொழிப்பற்று மிகுதியாக இருந்து வந்துள்ளது. அதே போல் மற்றவர்கள் மொழியையும் மதித்து வந்துள்ளனர்.

இக்காலத் தமிழ் மக்கள் முற்காலச் சான்றோர்கள் சொன்ன கருத்தின் உட் பொருளை கைவிட்டு வெளிக்கருத்தான தமிழுக்கு விழாவெடுத்தல் போன்ற வற்றையே சிறப்பாகச் செய்து வருகிறார்கள். பற்பல தலைவர்கள் பெரும் பெரும் காரியங்களைச் செய்த போதும் தமிழர் நிலை ஆங்கிலேய ஆட்சிக் காலம் தொட்டு படிப்படியாகக் கலாசாரம், பண்பாடு, இன, மத, மொழி கடந்த சகோதர அன்பு என்பவற்றிலும் மேலும் பல விடயங்களிலும் கீழ்நோக்கியே செல்வதைக் காண்கிறோம். காரணம் தமிழர்கள் தலைநிமிர்ந்து என்றென்றைக்கும் வாழ அகத்தியர் எமது மொழியின் பெயராகத் தந்தது தமிழ். எமது மொழியின் பால் நாம் கொள்ள வேண்டிய பற்றை ஆங்கில மொழியின் மேல் தமிழர்கள் கொண்ட அதீத காதலானது தூக்கி எறிந்து விட்டது. அதனால் கணினிகள் எங்கும் தமிழர்களாகிய நாம் (Tamil) ரமில் ரமில் என்று மகிழ்ச்சி பொங்க எழுதியும் , வாசித்தும் வருகிறோம்.

ஆங்கிலேயன் தமிழர்களாகிய எம்மை நோக்கி ரமில் (Tamil) என அழைக்கத் தொடங்கியதால் இந்தியாவில் வீரபாண்டிய கட்டப் பொம்மன் எட்டப் பனாலும் இலங்கையில், யாழ்ப்பாண, வன்னி அரசர்கள், ஏனைய காட்டிக் கொடுப்போரால் ஆங்கிலேயரிடம் காட்டிக் கொடுக்கப்பட்டு தமிழ் மன்னர்கள் ஆங்கிலேயர்களிடம் முற்றாகத் தோல்வி அடைந்தனர். அன்று தொட்டு இன்று வரை தமிழர்கள் ஆகிய நாம் மாற்றான் மொழியாகிய ஆங்கிலத் தின் மீது கொண்ட தீராக் காதலால் ஆங்கிலேயன் தந்த ரமிலை (Tamil) எங்கும் எதிலும் புகுத்துவதில் "பரவசம்" கொள்கிறோம். இதுவே தமிழர்க ளாகிய நாம் இழி நிலையை அடைவதற்கான முக்கிய காரணமாகும். தீய அதிர்வலைகளை உண்டு பண்ணும் ரமில் என்னும் சொல்லை எல்லாப் பாவனைகளிலிருந்தும் அறவே நீக்கி அதற்குப் பதிலாக நல்ல உயர் அதிர்வுகளை தரும் தமிழ் எனும் சொல்லை எமது மொழிக்கான பெயராக அனைவரும் பாவிக்க வேண்டும் என்பதே தமிழ் சமுதாயத் தின் மீதான எமது தாழ்மையான வேண்டு கோளாகும். இவ்வாறு செய்யும் பட்சத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முற்பட்ட நிலையை தமிழர்களாகிய நாம் அடைவோம் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை.

அகத்திய முனிவர் ஜோதிட கலையிலும் கை தேர்ந்தவராவார். நவக்கிரக இயக்கங்கள் பற்றிய அறிவே ஜோதிடமாகும். இது ஒரு பெரும் கணக்கியலாகும். இக்கணக்கியலில் ஒரு மிகச் சிறிய கணக்கைச் செய்வதன் மூலம் சூரிய, சந்திர கிரகணங்களின் நேரங்கள் கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாகக் கணிக்கப்படுகிறது. ஒருபோதும் ஒரு கிரகணத்தைப் போல் இன்னொரு கிரகணம் அமைவதில்லை. இவ்வாறிருக்க எந்தெந்த நாட்டில் எந்தெந்த நேரம் தொடங்கி எந்தெந்த நேரம்வரை இக்கிரகணங்கள் இடம் பெறுகின்றன என்பதை இன்று வரை பஞ்சாங்கங்கள் எனப்படும் ஜோதிட நூல்கள் குறிப்பிட்டு வருகின்றன. அவ்வாறே கிரகணங்களும் இடம்பெறுகின்றன. இன்றைய நவீன வானியல் ஆராய்ச்சியாளர்கள் நவீன தொலைநோக்குக் கருவிகள் மூலம் ஆராய்ந்து கிரகங்களின் விட்டங்கள், இடைத் தூரங்கள், வேகங்கள் என்பவற்றைக் கணித்து கிரகணங்களை அறிவிக்கிறார்கள். அவைகள் சரியாக நடைபெறுகின்றன. ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் எவ்வித விஞ்ஞான கருவிகளும் இல்லாத நிலையில் வானியல் அறிவில் எம்முன்னோர்கள் கொண்டிருந்த உயர் ஞான அறிவே அவர்கள் அக்காலத்திலேயே கிரகணங்களைக் கணிக்கக் கூடியதாகவிருந்தது.

எனவே நாமும் அந்நிய மொழி மோகத்திலிருந்து விடுபட்டு Tamil, Thamil எனும் சொற்களை எமது பாவனையிலிருந்து அறவே அகற்ற வேண்டும். உயர் ஞான அறிவு படைத்த அகத்தியர் தந்த தமிழ் எனும் சொல்லை சகல பாவனைகளுக்கும் உபயோகிக்க வேண்டும். முன்னோர்கள் உயர் அறிவின் மூலம் எமக்குத் தந்த எமது மொழியின் பெயராம் தமிழை முக்கியமாக கணினி, தினசரி பத்திரிகைகள், விளம்பரங்கள் போன்றவற்றில் பாவிப்பதன் மூலம் தமிழர்களின் பொற்காலத்தை தமிழர்களாகிய நாமே எமக்கு உருவாக்கி தமிழர்கள் அனைவரும் ஏனைய மக்களுடன் சேர்ந்து நன்மையடைவோமாக!

**பிற்குறிப்பு :-**

அதிர்ஷ்ட எண் கணித அபிமானிகளுக்கு

| | |
|---|---|
| T a m i l | T h a m i l |
| 4+1+4+1+3 = 13 | 4+5+1+4+1+3 = 18 |

Tamil என்ற பெயர் 13 எனும் ஓர் உலக மகா துர்அதிஷ்டமான எண்ணாகும். Thamil என்ற பெயர் 18 என்ற இன்னொரு துர்அதிஷ்டமான எண்ணாகும். எனவே இவ்விரு பெயர்களும் தமிழர்கள் பாவிக்கக் கூடாதவை. தமிழ் என்ற சொல்லுக்கு சரியான உச்சரிப்பைத் தரும் ஆங்கிலச் சொல் இல்லை.

Tha = த me = மி il = ழ் என கிட்டத்தட்ட உச்சரிப்பு எடுத்து எமது மொழிக்கான பெயராக தவிர்க்க முடியாத மிகச் சொற்ப சந்தர்ப்பங்களில் மாத்திரம் Thameil என்ற ஆங்கிலச் சொல்லை எமது மொழியின் பெயராக பாவிக்க முடியும். Thameil என்பதற்கான எண் 23 ஆகும். இது தமிழர்களுக்கு மிக அதிஷ்டமான எண்ணாக வருகிறது. மேலும் தமிழ் என்ற சொல்லுக்கான உச்சரிப்பை அதிகளவு கொண்டிருப்பதால் "ஆபத்துக்குப் பாவம் இல்லை" எனக் கொண்டு Thameil என்ற பெயரை ஓரளவு ஏற்கலாம்.

**தருமலிங்கம் பூபாலசிங்கம்,**
**சித்தன்கேணி.**
**தொடர்புகளுக்கு: 0778442171**

(இது ஒரு கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org